www.padippakam.com

# புதிய கலாச்சாரம்

டிசம்பர் - 2005
ம.க.இ.க. மாத இதழ்
ரூ. 5.00



## தண்ணீர் தனியார்மயம்
## வெள்ளம் மக்கள்மயம்

படிப்பகம்

www.padippakam.com

# உலகைக் குலுக்கிய
# ரசியப் புரட்சி

**1917** நவம்பர். பிரம்மாண்டமான ரசியா கரைந்து உருமாறிக் கொண்டிருந்தது. 1917 பிப்ரவரி முதலாளித்துவ புரட்சி பழைய ஆட்சியின் செல்லரித்துப் போன அமைப்பை நீடிக்க வைத்ததற்கு மேல் ஒன்றும் செய்ய முடியாமல் முடிவுற்றது. ஆனால் இப்போது போல்ஷ்விக்கு புரட்சியாளர்கள் இந்த அமைப்பைச் சிதறச் செய்துவிட்டனர்.

பழைய ரசியா இல்லாதொழிந்தது. ஊழிக்காலத் தீயிலே மானுட சமுதாயம் உருகித் திரவமாய் ஓடிற்று. இந்தத் தத்தளிக்கும் தீக்கடலிலிருந்து இரக்கமற்ற அப்பட்டமான வர்க்கப் போராட்டமும், புதிய கிரகங்களது மெல்லக் குளிர்ந்து கெட்டியாகும் மொறுமொறுப்பான மேலோடும் உருவாகி வெளிப்பட்டன.

ரசியப் புரட்சி இரண்டு அங்கங்களைக் கொண்டது. முதலாவது, பழைய ஆட்சியினை ஒழித்திடுதல், இரண்டாவது புதிய ஆட்சியினை உருவாக்குதல்.

ரசிய உழைப்பாளி மக்கள் கடந்து கொண்டிருந்த இன்னல்மிக்க இத்தருணத்தில் ஸ்மோல்னி மாளிகை லெனின் தலைமையிலான புரட்சி போல்ஷ்விக் கட்சியின் செயல்தளமாகச் செயல்பட்டது. சிறுபான்மை மென்ஷ்விக்கு சமரசவாதிகளும், 'சோசலிசப் புரட்சியாளர்கள்' என்று தங்களை அழைத்துக் கொண்ட வலது சாரிகளும் தொழிலாளி வர்க்கத்துக்குத் துரோகமிழைத்து, கெரன்ஸ்கி அரசாங்கம் கூடிய விரைவில் அரசியல் நிர்ணய சபையைக் கூட்டுவதாகச் சொல்லி கண்ணாமூச்சி ஆட்டம் ஆடித்தள்ளிப் போட்டு வந்ததையே நியாயப்படுத்தி, மக்களை அமைதியாக இருக்கும்படி கோரிக்கை விட்டனர். இதனால் தொழிலாளி வர்க்கத்துக்குத் துரோகமிழைத்து அரசியல் சாகசக்காரன் கெரன்ஸ்கி, பழைய ரசிய இராணுவ ஜெனரல் கர்னீலவ் ஆகியோருடன் கூட்டுச்சேர்ந்து கொண்டார்கள்.

இத்தகைய கடுமையான சூழ்நிலையில் லெனினது போல்ஷ்விக் கட்சி தொழிலாளர்கள், விவசாயிகள், படையாட்களை ஒருங்கிணைத்து புரட்சியை வழிநடத்தியது.

ரசியப் புரட்சி முதலாளித்துவப் புரட்சிகளைப் போல புதிய உற்பத்திக் கருவிகளை அல்ல, புதிய வகை மனிதர்களையும் மனித உணர்ச்சிகளையும் உருவாக்கியது. பிறருக்காக - அனைவருக்காகவும் அனைவரும் சிந்திக்கும் மனித அறிவு மற்றும் உணர்வு நிலையை உலகுக்கு வழங்கியது. கோடானுகோடி மக்களை ஏகாதிபத்திய - மறுகாலனியாதிக்கச் சுரண்டல் மற்றும் ஒடுக்குமுறைக்கு எதிராக ஒரு புள்ளியில் இணைக்கும்போது இந்தச் சித்திரம் நமக்கும் முழுமை பெறும்.

(மூலநூலான ஜான் ரீடின் 'உலகைக் குலுக்கிய பத்து நாட்களி'லிருந்து சிறு பகுதியை கீழே வெளியிடுகிறோம்.)

•••

***நவம்பர் 8, 1917:*** ஸ்மோல்னியில் சூழ்நிலை முன்பு இருந்ததையும்விட கடுமையாகி ஒரே அமர்க்களமாயிருந்தது. இருண்ட நடைவழிகளில் முன்பு போலவே ஆட்கள் சிட்டாய்ப் பறந்தனர்; தொழிலாளர் குழுவினர் துப்பாக்கி ஏந்தி நின்றனர்; தடித்த கைப்பைகள் வைத்திருந்த தலைவர்கள், நண்பர்களும் துணைவர்களும் புடைசூழ்ந்து வர, வாதாடிக் கொண்டும் விளக்கிச் சொல்லிக் கொண்டும் கட்டளைகள் பிறப்பித்துக் கொண்டும் பரபரக்க விரைந்து சென்றனர். மெய்யாகவே இவர்கள் மெய்மறந்தோராய் இயங்கினார்கள். இராப் பகலாய்க் கண் துஞ்சாமல் ஓயாது உழைக்கும் அருந்திறல் படைத்தோராய் இருந்தார்கள் — முகம் மழிக்கப்படவில்லை. மேலெல்லாம் அழுக்கு, கண்கள் சிவந்து ஜிவுஜிவுத்தன. அடங்காத ஆர்வத்தை விசையாய்க் கொண்டு தமது நிலையான குறிக்கோளை நோக்கி இவர்கள் முழுவேகத்தில் ஓடிக் கொண்டிருந்தவர்கள். இவர்கள் செய்ய வேண்டியிருந்தவை நிறைய இருந்தன, அளவின்றி நிறைய இருந்தன! அரசாங்கத்தை உருவாக்கியாக வேண்டும், நகரில் ஒழுங்கை நிலைபெறச் செய்தாக வேண்டும், நகரக் காவல் படையைத் தம் பக்கத்தை விட்டுச் செல்லாதிருக்கும்படி பார்த்துக் கொண்டாக வேண்டும், டூமாவையும் இரட்சணியக் கமிட்டியையும் எதிர்த்துப் போராடியாக வேண்டும், ஜெர்மானியரை உள்ளே விடாதிருக்க வேண்டும், கேரென்ஸ்கியுடன் போர் புரியத் தயார் செய்தாக வேண்டும், என்ன நடந்திருக்கிறதென்று மாநிலங்களுக்குத் தெரிவித்தாக வேண்டும், அர்ஹான் கேல்ஸ்கிலிருந்து விளதிவஸ்தோக் வரையில் பிரச்சாரம் செய்தாக வேண்டும்.



சரியாய் எட்டு நாற்பதுக்கு, இடியென அதிர்ந்த வாழ்த்துக்களுக்கும் கையொலி முழக்கத்துக்கும் இடையே தலைமைக் குழுவினர் உள்ளே வந்தார்கள். அவர்களிடையே லெனினும் - மேதை லெனினும் இருந்தார். லெனின் விசித்திரமான மக்கள் தலைவர் - முற்றிலும் அறிவாற்றல் என்னும் ஒரே

தொடர்ச்சி
27-ஆம் பக்கம்


படிப்பகம்

www.padippakam.com


கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

● புதிய கலாச்சாரம்

● மக்கள் கலை இலக்கியக் கழக மாத இதழ்

● போர்: 23
● குரல்: 5-7
● அக், நவ, டிச. 2005

உள்நாடு
தனிஇதழ்: ரூ. 5.00
ஆண்டுச் சந்தா: ரூ. 90.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டுச் சந்தா US$ 9

*சந்தா படைப்புகள் அனுப்பவும் தகவல்களுக்கும்*



இரா. சீனிவாசன்,
16, முல்லைநகர் வணிக வளாகம்,
2-வது நிழற்சாலை,
(15-ஆவது தெரு அருகில்),
அசோக் நகர்,
சென்னை - 600 083.
தொலைபேசி: 044-23718706.
மின் அஞ்சல் முகவரி:
puthiyakalacharam@rediffmail.com



அலுவலக நேரம்:
காலை 10 முதல் மாலை 5 மணி வரை.

*அட்டை வடிவமைப்பு:*
ஸ்பார்ட்டகஸ்


# வெள்ளம்: தீராத துயரம்

ஒரு அரை நூற்றாண்டுகாலக் 'குடியரசு ஆட்சி' மிகப் பெரும் தோல்வியை - அவமானத்தை அடைந்து விட்டது. கடந்த நவம்பர் மாதம் தமிழகத்தைத் தாக்கிய பெருமழை - பெருவெள்ளம். வெற்றி கொள்ளும் படை பகைவெறி அடங்காத ஆவேசத்துடன் ஆக்கிரமிப்பு நாட்டில் அனைத்தும் தழுவிய பேரழிவு விளைவிப்பது போலச் செய்துவிட்டது. பத்து மாதங்களுக்கு முன்பு தமிழகக் கடற்கரையைத் தாக்கிய ஆழிப்பேரலை (சுனாமி) ஆயிரக்கணக்கான உயிர்களையும், நூற்றுக்கணக்கான கடலோரக் கிராமங்களையும் காவு கொண்ட துயரத்தை நினைவுபடுத்துகிறது.

எல்லையில் பெரும்படை முற்றுகையிட்டு, மிரட்டிக் கொண்டிருக்கும்போதே விழித்துக் கொண்டு தகுந்த தயாரிப்புடனும் எச்சரிக்கையுடனும் எதிர்கொள்ளத் தவறிய ஆட்சியாளர்கள் வெட்கக்கேடான முறையில் எதிரியிடம் மண்டியிடுவதைப் போல சரணடைந்து விட்டார்கள். ''என்ன செய்வது? நவம்பர் மாதம் தமிழகத்தைத் தாக்கிய பெருமழை - பெருவெள்ளம் யாரும் எதிர்பாராத இயற்கைச் சீற்றம் - பேரழிவு'' என்று ஆள்வோரும் செய்தி ஊடகமும் சித்தரிக்கின்றன. தமிழகத்தை அடுத்துள்ள வங்கக் கடலில், உருவாகி நகர்ந்து வந்த புயல் சின்னங்கள் இத்தகைய மழை - வெள்ளத்தைக் கொண்டு வரும் என்பது யாரும் எதிர்பாராததில்லை. நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் கொட்டும் மழையால் ஏற்கெனவே கழுத்துவரை நிரம்பித் ததும்பும் அணைக்கட்டுகளும், ஏரிகளும் நேரம் குறித்து வைத்த வெடிகுண்டுகளைப் போன்று எப்போது வேண்டுமானாலும் வெடித்து உயிர்களையும் ஊர்களையும் காவு கொள்ளும் பேராபத்து விளைவிக்கக் கூடியவை என்பதும் யாரும் எதிர்பாராததில்லை.

காடுகரை, நீர்நிலைகள், சாலைகள் அனைத்தும் நாசமாகிப் போய்விட்டன. விளைநிலங்கள் மண்மேடுகளாகி விட்டன. கிராமங்கள் எலலாம் குட்டிச் சுவர்களாகக் காட்சியளிக்கின்றன. சுனாமியைப் போலவே இந்த மழை வெள்ளம் எவ்வளவு பேரை உயிர்ப் பலி கொண்டது, எவ்வளவு பேர் காணாமல் போனார்கள் என்று தெரியவில்லை மாண்டவர்களைவிட உயிரோடு மீண்டிருப்பவர்களின் அன்றாட வாழ்வோ துயர வெள்ளத்தில் தத்தளிப்பதாக உள்ளது. உண்ண உணவில்லா விட்டாலும் அந்த வெள்ளக் காட்டில் பல நாட்களாகக் குடிப்பதற்கு நீரில்லை - கழிவுநீரும் குடிநீரும் கலந்தே ஓடுகிறது. மானத்தைக் காத்துக் கொள்ள மாற்றுத் துணியின்றித் தவிக்கிறார்கள் தாய்மார்கள். தொழிலுக்கும் வாழ்வுக்கும் ஆதாரமான எல்லாவற்றையும் இழந்துவிட்டு, அரசாங்கம் போடும் சோற்றுப் பொட்டலங்களுக்காக சொந்த நாட்டிலேயே அகதிகளாகக் காத்துக் கிடக்கிறார்கள், இலட்சக்கணக்கான மக்கள்.

இப்பேரழிவுகளுக்கு மத்தியிலும் சில உண்மைகள் தூக்கலாகத் தெரிகின்றன. கடந்த அரை நூற்றாண்டு கால ஆட்சி, அதன் வளர்ச்சித் திட்டங்கள் எல்லாம் நகர்ப்புற நலன்களுக்காகவே செய்யப்பட்டிருக்கின்றன. கிராமப்புறங்களில் பெருநிலப் பிரபுகளுக்காகவும், நகர்ப்புறங்களில் பெரு முதலாளிகளுக்கும் அவர்களின் பங்காளிகளுக்காகவும்தான் செய்யப்பட்டிருக்கின்றன. கிராமப்புறங்களில் கூலி-ஏழை விவசாயிகள், நகர்ப்புறங்களில் உடல் உழைப்புத் தொழிலாளர்களின் தொழில் மற்றும் வாழ்வு முற்றிலும் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன. கிராமப்புறங்களில் மழை-வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டவைகளில் பெரும்பாலானவை ஏழை - எளிய மக்கள் வாழும் சேரிகள் - குடிசைகள்தாம். நகரங்களில் மழை-வெள்ளம் சூழ்ந்து நாசப்படுத்தியவையெல்லாம் ஏரிகள், ஆற்றங்கரைகளில் உள்ள குடிசைப் பகுதிகள் தாம். வெள்ளம் சூழ்ந்த ''பங்களா''க்கள், அடுக்குமாடி வீடுகளில் இருந்து நடுத்தர, மேட்டுக்குடி மக்கள், பாதுகாப்பான ''இரப்பர்'' படகுகளில் கூட வெளியேற மறுக்கிறார்கள். தாம் சேர்த்து வைத்த சொத்து-செல்வம் களவு போய்விடும் என்று அஞ்சுகிறார்கள். நகர்ப்புறக் குடிசை மக்களும்தான் வெளியேற மறுக்கிறார்கள். தாம் குடிசை போட்டிருக்கும் இடங்களில் இருந்து நிரந்தரமாகத் துரத்திவிட்டு, அந்த நிலத்தையும் பறித்துக் கொள்வார்கள் என்று இவர்கள் அஞ்சுகிறார்கள்.

இவ்வளவு துயரத்துக்கு மத்தியிலும், நமது மக்கள் நம்பிக்கை இழந்து விடாமல் பற்றிக் கொள்வதற்குச் சில ஆதார சக்திகள் இருக்கத்தான் செய்கின்றன. பல கிராமங்களில் நகரங்களில் தன்னெழுச்சியாக இளைஞர்கள் போற்றத்தக்க மீட்புப் பணிகளில் ஈடுபடுகின்றனர். ஏரிகள் உடைந்து, சென்னை புறநகரை வெள்ளம் சூழ்ந்த போது, கோவளம் மீனவர் குடியிருப்பைச் சேர்ந்த மீனவர்கள் தமது படகுகளோடு வந்து ஆயிரக்கணக்கானோரை இரவு பகல் பாராது போராடி மீட்டுள்ளனர். சுனாமியின் போது மற்ற பிரிவினர் தமக்குச் செய்த உதவியை நினைவு கூறி பணமோ, உணவோ பெற்றுக் கொள்ள அவர்கள் மறுத்தனர். மக்களின் துயரத்தைக் காட்டி ஆதாயங்களைச் சுருட்டிக் கொள்ளுவதையே நோக்கமாக கொண்டு ஆட்சியாளர்கள் அலையும் இந்த நேரத்தில் உழைக்கும் மக்கள் காட்டும் இத்தகைய பாசமும் பணியும் போற்றி வளர்க்கத்தக்கவை. ●

படிப்பகம்

www.padippakam.com

# மழையில் சில துளிகள்...

மாமழை போற்றுதும் என்பதற்குப் பதிலாக, மாமழை போதும் எனுமளவுக்கு மழை கொட்டித் தீர்க்கிறது. சென்னையில் மட்டும் இரண்டே நாளில் 410 மி.மீட்டர் மழை. நடுங்குகின்றன குடிசைகள். ஏழைகளின் எலும்பைத் துளைக்கிறது மழையின் குளிர். நகராட்சிக் கட்டிடங்களிலும், பள்ளிக் கூடங்களிலும் அணைந்து கொண்டு பட்டைச் சோற்றுக்காகப் பரிதவிக்கிறார்கள் அன்றாடங்காய்ச்சிகள். முதியவர்களுக்கும், குழந்தைகளுக்குமாய் முண்டியடிக்கிறார்கள் பெண்கள். சூழ்நிலை இப்படியிருக்க சூரியன் எஃப்.எம்.மிலிருந்து ஒரு குரல் வருகிறது. ''ஹலோ மகளிர் மட்டும்... ம் சொல்லுங்க இந்த மழைக்கு என்ன செஞ்சு சாப்பிட்டா மேட்ச்சா இருக்கும்?'' தொலைபேசியின் மறுமுனையில் ''மேடம் இந்த மழைக்கு பிரெட்ட எக்கோட டோஸ்ட் பண்ணி சாப்பிட்டா சூப்பரா இருக்கும் மேடம்''... ரசனையாக விவரணை நீள்கிறது. ''ம் அப்புறம் மறக்காம ரிசல்ட் என்னன்னு நாளைக்கு சொல்லணும் புரியுதா? என்ன ரிசல்ட்டுன்னு சொல்றீங்களா? ஓ.கே.'' கொஞ்சிக் குழைகிறது நிகழ்ச்சியை நடத்தும் குரல். எதைச் சாப்பிட்டாலும் அடுத்தநாள் என்ன ரிசல்ட்டாகும் என்பது பாவம் அந்த அம்மணிக்குத் தெரியாது போலும். நமது பட்டைச் சோறின் அடுத்த நாள் ரிசல்ட்டை வேண்டுமானால் சூரியன் எஃப்.எம்.-க்கும் அனுப்பி வைத்து உதவி செய்யலாம்.

மூடிய கடைகளின் ஓரமாகவும், படிகளின் இடுக்கிலும் வாய் பேசமுடியாமல் வெடவெடத்து நிற்கிறார்கள் மக்கள். ''அப்புறம். ஜில்லுன்னு இந்த கிளைமேட்டுக்கு ஏத்த மாதிரி என்ன பாட்டுப் போடலாம் சொல்லுங்க'' என்கிறது எஃப்.எம். ''புல்லாய், விலங்காய், புழுவாய், நரவடிவாய்'' என்ற பத்திரகிரியாரின் பாடல் என் நினைவுக்கு வருகிறது. உதவியோ, உதவிகரமான அறிவிப்புகளோ செய்யாவிட்டாலும் வாடியிருக்கும் மக்களை வதைக்காமலாவது விடலாம். விடுவதாயில்லை. ''சிற்றுணர்வார் என்றும் சிலுசிலுப்பார் என்று'' நீதிவெண்பா சொல்லுவது போல 'சின்னத்தம்பியும் பெரியதம்பியும்' ''ஏண்டா சின்னத்தம்பி மழைக்கு உணவுப் பொட்டலம் தார்றாங்களாமே... சூடா இருக்குமா? கூவத்துல சுறா வந்துச்சாமே.. வாங்கிக் கடை போடலாண்டா'' இப்படிப் பேச்சு நீள்கிறது. கூவக்கரை குடிசையெல்லாம் எடைக்குப் போட்ட குப்பை போல, குடிசைப் பகுதி மக்களெல்லாம் மழையில் மிதக்கும் செத்தை போல திக்கு தெரியாமல் அலையும்போது சூரியன் எஃப்.எம்.-இன் 'கடை'க்கோடி புத்தியை எந்த கழிவுநீர்த் தொட்டியில் கொண்டு தொலைப்பது?

துரத்தும் மழை. ஓடும் மக்கள். ரேடியோ முதலாளிகளுக்கோ கொண்டாட்டம். ஹாட் மச்சி ரேடியோ மிர்ச்சியோ வேறு மாதிரி விசாரிக்கிறது. ''ஹலோ உங்க ஏரியாவுல மழை எப்படி?'' மறுமுனையில் நேயர் ''சூப்பர் மழை சார். தெருவெல்லாம் தண்ணி கீழ்வீடெல்லாம் தண்ணி வந்தாச்சு. நான் ஃபர்ஸ்ட் ஃப்ளோர்ல இருக்கேன். ஸ்ரீலங்கா-இண்டியா மேட்ச் பார்த்திட்டிருக்கேன். அதனால டைம் பாசாயிட்டிருக்கு'' குரலில் பேரானந்தம். ''வெரிகுட். பல பேர் வெள்ளத்தால மழைய நொந்துக்கிட்டிருப்பாங்க. தண்ணியில்லாம மெட்ராஸ்ல எவ்வளவு கஷ்டப்பட்டோம். அதனால மழைய பொறுத்துக்கலாம். பாதிப்ப பத்தியே நெனைச்சிட்டிருக்காம எப்படி இந்த மழைய என்டெர்டெய்ன்மெண்ட் பண்றதுன்னு எல்லாரும் யோசிக்கலாம். ஃபார் எக்சாம்பிள் சின்னச் சின்ன கப்பல் செஞ்சு விடலாம், அப்படியே ஏதாவது சூடா செஞ்சு சாப்பிட்டுக்கிட்டே டி.வி. பார்க்கலாம்... மெனி மோர் ஐடியாஸ்...'' மாடியிலிருந்து கொண்டு மழையில் நனையாத இரண்டு கும்பல் மழையை அனுபவிப்பது பற்றிய யோசனைக்கு அழைக்கிறது. முடிவில் ''அப்புறம் உங்களுக்கு என்ன பாட்டு வேணும்?'' என்று மாடிவீட்டுக்காரனுக்குக் குடை விரிக்கிறது.

பெய்யும் மழையில் தெருவில் குடிநீர்த் தொட்டியில் ஏறி நடுங்கிக் கொண்டிருக்கும் நாய் அச்சத்தில் ஊளையிடுகிறது. அடித்த மழையில் பிச்சைக்காரர்களாக ஆகிவிட்டார்கள் பெரும்பகுதி மக்கள். அவர்கள் படும் பாட்டை ஒலிபரப்ப அலைவரிசை ஏதுமில்லை. மக்களின் துயரங்களுக்கிடையே மழைக் கூத்தடிக்கும் இந்த ரேடியோக்களுக்குப் பெயர் 'பண்பலை'களாம். பாடறிந்து ஒழுகுவதே பண்பு என்று பழைய இலக்கியங்கள் நமக்குச் சொல்லித் தந்திருக்கின்றன. மேட்டுக்குடிகள் முன்பெல்லாம் ஒப்புக்காவது ஏழைகளின் துயரங்களைப் பார்த்து ஒரு 'இச்சு'க் கொட்டி 'ஐயோ பாவம்' என்று 'ஈரத்தைக்' காட்டி வைப்பார்கள். நவீனக் கல்வி படித்த புதிய மேட்டுக்குடி வர்க்கத்திற்கோ இப்போது அதுவும் இல்லை. முழுக்க நனைந்த பின்பு முக்காடு எதற்கு? மழையால் விளையும் வைரஸ் கிருமிகளுடன் இந்த வர்க்கக் கிருமிகளையும் சேர்த்து ஏழைகள் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. அருவருப்



மார்பளவுத் தண்ணீரில் உயிர் பிழைத்து ஓடிவருகிறார்கள் உழைக்கும் மக்கள்.



படிப்பகம்

www.padippakam.com

பான அலைவரிசைகளால் காற்றை மாசுபடுத்தும் இவர்களின் காலித் தனத்தைப் பார்க்கும்போது வள்ளலார் கூறியதுபோல் ''சுத்தக் ககனம் மழையால் கழுவிக் காற்றைக் கனலால் தகனம் செயல்போல்...'' என்று வானத்தை மழையால் கழுவி இவர்களின் அலைவரிசைக் காற்றை நாம் கனலால் தகனம் செய்துதான் நம்மைக் காத்துக் கொள்ள வேண்டும் போலிருக்கிறது.

••

**எ**ங்கு பார்த்தாலும் தண்ணீர் தேங்கி மழையின் காட்சி வெளிப்பாட்டைப் பார்த்து முகம் சுளிப்பவரா நீங்கள்? மழையால் பலபேருடைய மனதில் தேங்கியிருக்கும் கருத்து வெளிப்பாட்டைப் பார்த்தால் கலங்கிப் போவீர்கள். அவசர அவசரமாகக் குடையை மடக்கிக் கொண்டு பால் கடைப் பக்கம் வந்தார் எங்கள் தெருவிலிருக்கும் அந்த கனவான். ''என்னங்க ஆபீஸ் போகலையா?'' என்றேன் நான். ''அட நீங்க வேற மழை ஒரு பக்கம்னா இந்த ஜனங்க ஒருபக்கம். நேத்து நார்த் மெட்ராஸ் பக்கம் எல்லா இடத்திலயும் மறியல், கார எந்தப் பக்கம் திருப்புனாலும் ஆபீஸ் போக முடியல. ஒன் அவர் ஆச்சு ஓட்டேரியத் தாண்டவே, அவனும் எவ்ளோ தான் சார் கண்ட்ரோல் பண்ண முடியும். ஜனங்களும் ஓவரா அலையிது. நோ டிசிப்ளின், அதான் பணம் தர்றேன்னிருக்கான்ல, ரெக்காடெல்லாம் தயார் பண்ணிதான் தர முடியும். இதுங்க கெடந்து பறந்தா? உடனே மறியல், ரொம்ப பேஜாரு சார்!''

''வேலைக்கே போகாதவன்லாம் இதே வேலையா படை தெரண்டு அலையறானுவ, நீங்க வேற? ஓசியில ரெண்டாயிரம் ரூபா கிடைக்குதுன்னு அததும் வேலைக்கும் கூடப் போகாம மறியலுக்கு நிக்குது.''

**தண்ணீரின் பௌதீக விதி பள்ளத்தை நோக்கிப் பாய்வது. வெள்ளத்தின் நிவாரண அலைகளோ இயல்பு விதிக்கு மாறாக மேட்டை நோக்கி வேகமாகப் பாய்ந்து விட்டது. ஏழைகளின் வயிற்றுப் பள்ளங்களோ இன்னும் நிறையாமல் நிவாரணத்தை நோக்கி மிதிபட்டுக் கொண்டிருக்கிறது.**

மழை சிறிது விட்டாலும் அவர் தனது வாதத்தை விடாமல் நிலைநிறுத்தி விட்டு நகர்ந்தார். ஒரு ஐந்து நாள் கழித்து திரும்பவும் அவரை தெருவில் பார்த்தேன். ''என்னங்க நீங்க வாங்கிட்டீங்களா?'' என்றார் அவசரமாக. என்ன என்று புரியாமல் நான் விழித்தேன். ''அட என்னங்க சேதி தெரியாதா? அம்மா வெள்ளை கார்டுக்கும் ரெண்டாயிரம் ரூவா கொடுக்கச் சொல்லிடுச்சு. நான் போயி நேத்து டோக்கன வாங்கிட்டு இன்னக்கி பணத்தயும் வாங்கிட்டு வந்துட்டனே! கவர்மெண்ட்டு கொடுக்கற காச எதுக்கு உடுவானே. ஹா... ஹா... போங்க சார் எதுக்கு உட்டுட்டு?'' அந்தக் கனவான் வசிப்பது ஒரு அபார்ட்மெண்ட்டின் முதல் தளத்தில். அவர் வேலை செய்வதோ எம்.ஆர்.எல். என்ற அதிக வருவாய் ஈட்டும் நிறுவனத்தில். வேலைக்குச் செல்வதோ மாருதி காரில். கொஞ்சம் கூட வெட்கமில்லாமல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டதாக நிவாரணப் பொருட்களை அவர் வாங்கி வந்த 'திறமையை'ச் சொல்லிச் சென்றார். நான் நடுங்கிப் போனேன், மழையால் இல்லை.



''வியாசர்பாடியா, கார்கில் நகரா - வேறு போட் இல்லை; சீரங்கம், மடிப்பாக்கமே எங்கள் ரூட்'' என்கிறது அதிகாரவர்க்கம்.

தண்ணீரின் பௌதீக விதி பள்ளத்தை நோக்கிப் பாய்வது. வெள்ளத்தின் நிவாரண அலைகளோ இயல்பு விதிக்கு மாறாக மேட்டை நோக்கி வேகமாகப் பாய்ந்து விட்டது. ஏழைகளின் வயிற்றுப் பள்ளங்களோ இன்னும் நிறையாமல் நிவாரணத்தை நோக்கி மிதிபட்டுக் கொண்டிருக்கிறது. மழை குப்பைகளையும், நாற்றத்தையும் மட்டும் மேலே கொண்டு வரவில்லை. நாற்றம்பிடித்த இந்தச் சமூக அமைப்பின் தராதரத்தையும் மேலெழுப்பிக் காட்டியுள்ளது. பெரும்பான்மை மக்களைப் பலிகொடுத்து சிறுபான்மைக் கும்பல் சொகுசாய் வாழும் இந்தப் பேரழிவு சிந்தனைக்குமுன் இயற்கையின் பேரழிவு எம்மாத்திரம்!

••

**ஓ**ட்டேரி, புளியந்தோப்பு, வியாசர்பாடி என்ற வழக்கமான சேரிகளுடன் இந்த முறை வேளச்சேரி, மடிப்பாக்கம், ஸ்ரீரங்கம் என்று பார்ப்பனச் சேரிகளுக்குள்ளும் மழை வெள்ள அபாயம் சூழ்ந்ததால் தினமலருக்கும், தினமணிக்கும் அதிகம் ஓதம் காத்தது. ஆயிரக்கணக்கான குடிசைவாழ் மக்கள் ஒண்ட இடம் கிடைக்காமல் பரிதவிப்பதையும் காட்டிவிட்டு மடிப்பாக்கம், ஸ்ரீரங்கம் என்று ஓயாமல் கத்தித் தீர்த்தன பார்ப்பனப் பத்திரிக்கைகள். அதிகார வர்க்கத்திலும், ஆளும் வர்க்கத்திலும் தொடுப்பு வைத்திருக்கும் ஸ்ரீரங்கத்துக் கும்பல் ரங்கா, ரங்கா என்று கத்துவதற்குப் பதிலாக அம்மா, அம்மா என்று அரசை உலுக்கி எடுத்தார்கள். முழங்கால்வரை மடிசார் கட்டும் மாமிகள் முழங்கால் தண்ணியில் இறங்கி நடக்க மாட்டார்களாம்! ரப்பர் படகு ஸ்ரீரங்கத்திற்கு போனது. குடிசைப்பகுதி மக்களோ கழுத்தளவு தண்ணியில் கயிறுகட்டி நகர்ந்தனர். வெள்ளத்தனைய மலர் நீட்டம் மாந்தர் தம் வர்க்கத்தனைய உயர்வு! காலில் மழைநீர் பட்டுவிடாமல் மணல் மூட்டைகளை அடுக்கி வெள்ளத்தைப் பார்வையிட்டது முதலமைச்சர் என்ற பொதிமூட்டை. மத்தியக்குழு அதிகாரிகளோ சுற்றுலா மையத்தைப் பார்வையிட வந்ததுபோல சூட்டும் கோட்டுமாய் தண்ணீர் சூழ்ந்த பகுதிகளை தள்ளி

www.padippakam.com



வீடு இல்லை, சோறும் இல்லை;
பொறுப்பற்ற அரசு மக்களை வீதியில் தள்ளி விட்டது.

நின்று கண்டு களித்தனர். மக்களிடம் அவர்களை நெருங்க விடாதது மழையோ, வெள்ளமோ அல்ல. அவர்களது வர்க்கம். எத்தனை டெலஸ்கோப் வைத்து வெள்ளப் பகுதிகளைப் பார்வையிட்டாலும் ஏழைகள் எப்போதும் பாதிக்கப்படுவது மழை வெள்ளத்தால் மட்டுமல்ல. மாறாமலிருக்கும் அவர்களின் வாழ்நிலை தான் என்ற சமூக பாதிப்பை அதிகார வர்க்கத்தால் காண இயலுமா?

சில நடுத்தர வர்க்கப் பேர்வழிகள் ''பத்து பேர் வாழணும்னா அஞ்சு பேர் செத்துதான் சார் ஆகணும், அதான் நேச்சர்'' என்று ஏழைகளின் சாவுக்கு தீர்ப்பு எழுதுகிறார்கள். ''சாகுற அஞ்சு பேர்ல நீ ஒருத்தனா இருக்க சம்மதமா?'' என்று கேட்டால் இந்தத் தத்துவவாதிகள் சீரியஸாகி கொலைவெறியோடு பார்க்கிறார்கள். இது ஏதோ தற்செயலானதல்ல. இல்லாதவன் எதற்கு வாழ வேண்டும் என்ற வர்க்கக் காழ்ப்பு இது. மனித உறவுகளை வெறும் பண்டமாக ஆக்கிவிட்ட முதலாளித்துவக் கேவலத்திற்கு அடிபணியும் நடுத்தர வர்க்கப் புத்தி இது. ''மனிதனுக்கும் மனிதனுக்கும் அப்பட்டமான தன்னலத்தைத் தவிர வேறு ஒட்டுமில்லை; உறவுமில்லை என்றாக்கிவிட்டது முதலாளித்துவ வர்க்கம்'' என்று கம்யூனிஸ்டு கட்சி அறிக்கையில் மார்க்சும், ஏங்கெல்சும் முதலாளித்துவம் உருவாக்கும் கேவலமான உணர்ச்சிகளைக் கோடிட்டுக் காட்டினார்கள். இன்றைய நடுத்தர வர்க்கம் மனித உறவை மட்டுமல்ல, மனித உணர்ச்சிகளையும் இழந்துவிட்டது. அதனால்தான் கண்ணுக்கு முன்னாலேயே தன்னுடைய குடிசை வெள்ளத்தில் மிதந்தாலும், நம்முடைய கழிவுநீர்த் தொட்டியில் வந்து அடைப்பை எடுத்து தண்ணீரை வடியச் செய்யும் அந்த மனிதர்களுக்காகக் குரல் கொடுக்க நான் தயாரில்லை என்கிறது.

துயரத்தின் உச்சகட்டமாக மழைக்குக் கூட பள்ளிக்கூடம் பக்கம் ஒதுங்க முடியாத அடித்தள மக்கள் மழை வெள்ள நிவாரணத்திற்காகக் கல்லூரி வாசலில் நெரிசலில் சிக்கி ஆறு பேருக்கு மேல் படுகொலையாகியுள்ளனர். ''யாராவது நடுராத்திரியில் நிவாரணம் தருவாங்களா? ஜனங்களுக்கு அறிவு வேணாம்?'' என்று வக்கணை பேசுகிறார்கள் சில அறிவாளிகள். அந்தக் கல்லூரிக்குள் என்ன தங்க பிஸ்கட்டுகளா கிடக்கின்றன? மக்களுக்காக கல்லூரியைத் திறந்துவிட்டால் தான் என்ன? கேட்டை இழுத்துப்பூட்டி கேட்பாரற்ற மக்களை புழுப் போல அந்த வர்க்கத்தின் கால்களாலேயே அந்த மக்களை மிதித்துக் கொன்ற அரசின் குரூரத்தை அம்பலப்படுத்துவதற்குப் பதில் மக்கள் மேலேயே பழியைப் போடுவதற்கு என்ன அருகதை இருக்கிறது? தனது இறப்பின் மூலமாக அரசு மற்றும் சமுதாயத்தின் இருப்பை செத்தும் அம்பலப்படுத்தியிருக்கிறார்கள் உழைக்கும் மக்கள். நாம்?

அப்படி ஏன் முண்டியடித்துக் கொண்டு ஓட வேண்டும் என்கிறார்கள் சிலர். பேருந்து நிலையம், இரயில் நிலையம், மருத்துவமனைகளில் பல பேர் வரிசையில் காத்துக் கிடக்க குறுக்கே புகுந்து காரியம் சாதிக்கும் நடுத்தரவர்க்கம்தான் எளிய மக்களிடம் இப்படி உபதேசம் செய்கிறது.

ஏற்கெனவே பல சம்பவங்களில் அதிகாரவர்க்கம் பொருளைக் கொடுப்பது திடீரென இல்லை, நாளைக்கு வா என்று நிறுத்திவிடுவது என்பதை மக்கள் தங்கள் அனுபவத்தில் உணர்ந்திருப்பதாலேயே இந்த அவசரம். ஓட்டுக் கணக்கெடுக்க மட்டும் வீட்டுக்கு வீடு ஆள் அனுப்பும் அரசு, நிவாரணம் வழங்க போதிய ஆட்களை நியமிக்க முடியாதா? நாடே கண்டிக்க வேண்டிய இந்தப் படுகொலை கடைசியில் 'அறிவில்லை' என்று செத்தவர்கள் மேலேயே பழியைப் போட்டது. இது இறந்தவர்களின் அறிவின்மையா, இல்லை, இருப்பவர்களின் அறிவின்மையா?

''மக்கள் உனக்கு இடைஞ்சலாகத் தோன்றினால் உன் வாழ்விற்கே குறிக்கோள் இல்லாமல் போகும். மக்களிடம் பிரிந்து தனிமையில் இருப்பது தற்கொலை'' என்றார் லியோ டால்ஸ்டாய். வாழ்வதாய்ச் சொல்பவர்கள், உணர்ச்சி இருந்தால் பதில் சொல்லுங்கள்.

சென்னையில் ஒரு தெருவில் மழை நீரில் மின்கசிவு ஏற்பட்டு 10 பேர் பலியாகி விட்டனர். இதைப் பார்த்தும் துடித்துப் போவதற்குப் பதில் ஒரு அறிவாளி ''எங்க கரண்டு கசியுதோ அங்க மட்டும் ஆஃப் பண்ணிட்டு மிச்ச வீட்டுக்குக் கரண்டு கொடுக்கலாம்ல. டி.வி. கி.வி. போடலாம்'' என்று துடித்துப் போனார். எவன் செத்தால் என்ன, எந்த ஊர் அழிந்தால் என்ன, தனக்குச் சுகம் கிடைத்தால் போதும் என்று நினைக்கும் இந்த இழி பிறவிகள்தான் இயற்கையின் பேரழிவுச் சக்திகள். கோலங்கள் அபி கண்ணைக் கசக்கினாலே வாரா வாரம் வருத்தப்பட்டு யார் குற்றம் என்று விவாதிக்கும் பேர் வழிகளுக்கு, தனது கண்ணுக்கு எதிரே அலங்கோலமான மக்களின் வாழ்க்கையைப் பற்றி மட்டும் விவாதிக்க வாய் வராதது ஏன்? வர்க்கப் பாசந்தான்.

பாத்ரூமில் வழுக்கி விழுந்ததையே ஒரு முழுநீளக் கதையாக நீட்டி முழக்குகிறது நடுத்தர வர்க்கம். பாவம், பல நாள் மரங்களிலும் கட்டிடங்களிலும் குடிக்க நீரின்றித் தவித்த உழைக்கும் மக்களுக்குத் தனது சோகத்தைக் கூடப் பிறரை 'உருக்கும்' விதமாகச் சொல்லத் தெரியவில்லை.

வசதி உள்ளவ்ராயிருந்தால் வீட்டுக்குள் தண்ணி வந்தால் மாடியில் போய் நிற்கலாம். பொருள்களை லாஃப்டில் வைத்துவிட்டுக் கட்டிலில் ஏறிக் கொள்ளலாம். இல்லை இன்னொரு வசதியுள்ள சொந்தக்காரர் வீட்டுக்குப் போய்விடலாம். குடிசையே மிதக்கும்போது தட்டுமுட்டுச் சாமான்

www.padippakam.com

களை எங்கே வைப்பது? சொந்தக்காரனும் இந்த மாதிரிக் குடிசையில் இருக்கும்போது எங்கே போய் அடைக்கலம் தேடுவது? வயதுக்கு வந்த பெண்களையும் முதியவர்களையும் வைத்துக் கொண்டு எத்தனை நாள் ரோட்டோரம் கிடப்பது? பல பகுதிகளில் மழைவிட்டாலும் இடுப்பளவிற்கு மேல் தண்ணீர் வடியாமல் நிற்கிறது. காலைக்கடன் கழிக்க, கட்டிய துணியை மாற்றிக் கொள்ள ஏழைகள் படும்பாட்டை எத்தனைப் பேரால் உணர முடியும்?

மழை என்பது வெறும் தண்ணீர்ப் பிரச்சினை மட்டுமல்ல. பலநூறு விவசாயிகளின் பயிர்கள் பாழாய்ப் போய் விட்டது. வட்டிக்கு வாங்கி நட்டவர்கள் மீளா நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறார்கள். அன்றாடக் கூலிகள் உழைக்க வழியின்றி தவித்துச் சாகிறார்கள். தமிழகத்தின் பல இடங்களில் சுவர் இடிந்து பலர் இறந்துள்ளனர். கேவலம் ஒரு கிரிக்கெட் கிரவுண்டுக்கு பாய் போர்த்தி, புல்



இந்த இடமும் பறிபோகுமோ? அச்சத்தோடு இடம் விட்டு நகராத தாயும் சேயும்.

தரையை பஞ்சால் துடைத்து, ஹீட்டர் போட்டு கட்டாந்தரைக்குக் காட்டும் கரிசனத்தை இரத்த ஓட்டமுள்ள மனிதர்களுக்குக் காட்ட முடியாத இந்தச் சமூகத்தின் அசிங்கங்களை மழை மேலே கொண்டு வந்துள்ளது. ஊரை நாசமாக்கியது முக்கியமாக மழை அல்ல; சக மனிதனுக்காக ஏதும் செய்யத் துணியாதவர்களின் நிலை.

மழையின் பாதிப்பை லட்சக்கணக்கான மக்களின் பாதிப்பாக உணர்ந்து அவர்களின் வாழ்க்கை நிவாரணத்திற்காக இணைந்து போராட வராதவனை இயற்கையும் பழிக்கும். வங்கக் கடலில் உருவாகும் காற்றழுத்தத் தாழ்வு நிலையைவிட ஆபத்தானது தன் வர்க்கக் கடலைத் தாண்டி பிற உழைக்கும் மக்களின் வாழ்க்கைப் போராட்டத்தோடு தம்மை இணைத்துக் கொள்ளாதவர்களின் வாழ்நிலை.

● துரை. சண்முகம்

## வெள்ளப் பகுதிகளில்
# நிவாரணப் பணிகள் - போராட்டங்கள்!

வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்பட்ட கடலூர் மாவட்டம் சேத்தியாதோப்பு பகுதியிலும், திருச்சி நகரைச் சுற்றியுள்ள பகுதிகளிலும், சென்னை - மதுரவாயல் பகுதியிலும் ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. அமைப்புகளைச் சேர்ந்த எமது தோழர்கள் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளிலும், பாதிக்கப்பட்ட மக்களை ஒருங்கிணைத்துப் போராடும் பணியிலும் ஈடுபட்டு வருகின்றனர். நவம்பர் 28-ஆம் தேதியன்று தொடங்கிய இந்தப் பணி இன்றுவரை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

திருச்சி - அரவானூர் கிராமத்து மக்களை அணிதிரட்டி நகரில் சாலை மறியல் செய்த பிறகுதான் இவ்வூருக்கு நிவாரண முகாம் அமைக்கப்பட்டதுடன் ரூ. 2000 நிவாரணமும் வழங்கப்பட்டது. மாவட்டத்திலேயே நிவாரண உதவி முதன்முதலில் வழங்கப்பட்டது இந்த கிராமத்திற்குத்தான். ஏகிறிமங்கலம், கல்நாயக்கன் தெரு, நாடார் தெரு, திருவெறும்பூர் அரசங்குடி போன்ற எல்லாப் பகுதி மக்களின் போராட்டங்களையும் எமது தோழர்கள் முன்நின்று நடத்தினர்.

மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள தலித் மக்கள் பகுதிகளில், நிவாரணப் பொருட்களையும், தொகையையும் அபகரித்துக் கொள்ளும் ஆதிக்கச் சாதிகளைச் சேர்ந்த பஞ்சாயத்துத் தலைவர்கள் - அதிகாரிகள் கூட்டணியைத் தட்டிக் கேட்க வேண்டுமானால் ''ம.க.இ.க., பு.மா.இ.மு. காரர்களால்தான் முடியும்'' என்பது திருச்சியில் நிலைநாட்டப்பட்டுள்ளது. உள்ளூர் கட்சிப் பிரமுகர்களின் வேடம் கலைந்துள்ளது.

கடலூர் - காரைமேடு கிராமத்தில் வெள்ளாறு உடைந்து வெள்ளம் புகுந்தவுடன் தோழர்கள் மீட்புப் பணிகளில் ஈடுபட்டதுடன், உடனே நிவாரணப் பொருட்களையும் கொணர்ந்து விநியோகித்தனர். ''பெரிதும் பாதிக்கப்பட்ட தலித் மக்களுக்குத்தான் நிவாரணப் பொருட்களை முன்னுரிமை தந்து விநியோகிக்க வேண்டும்'' என்று பிற சாதியினரை ஏற்கச் செய்தனர். அரசு நிவாரணத்தை விநியோகிக்கும் பொறுப்பை பஞ்சாயத்துத் தலைவர் தோழர்களிடமே விட்டிருக்கிறார். சேத்தியாதோப்பு சுற்று வட்டாரத்திலுள்ள பின்னலூர், அம்பாள்புரம், மஞ்சக்கொல்லை போன்ற பல கிராமங்களில் பணிகள் தொடர்கின்றன.

சென்னை - மதுரவாயல் பகுதியில் உள்ள ஏ.சி.சண்முகத்துக்கு (முதலியார் சங்கம்) சொந்தமான எம்ஜியார் பொறியியல் கல்லூரியை வெள்ளம் சூழ்ந்ததை தொலைக்காட்சிகள் காட்டின. மாவட்ட ஆட்சியரும் நேரில் வந்தார். ஆனால் அருகிலுள்ள குடிசைப் பகுதி மூழ்கியதை அரசு கண்டு கொள்ளவில்லை. அங்குள்ள சுமார் 2000 மக்களை மண்டபத்தில் தங்க வைத்து சென்னை பு.மா.இ.மு. தோழர்கள் 4 நாட்களாக உணவு வழங்கி வருகின்றனர். கல்லூரியைக் காணவந்த ஆட்சியரை மக்கள் முற்றுகையிட்டனர். ''தாழ்வான பகுதியில் ஏன் வீடு கட்டினீர்கள்?'' என்று ஆட்சியர் கேட்டவுடன் ''ஆற்றை மறித்து காலேஜ் கட்டியிருக்கிறானே, அவனை முதலில் கேள்'' என்று பதிலடி கொடுத்தனர் மக்கள்.

நிவாரண உதவி வழங்குவதுடன் திருச்சி, கடலூர் பகுதிகளைச் சேர்ந்த மக்களின் கோரிக்கைகளுக்கு வடிவம் கொடுக்கும் விதத்தில் பாதிக்கப்பட்ட மக்களிடம் கையெழுத்தியக்கம் நடத்துவதுடன் போராடுவதற்கு அணிதிரட்டியும் வருகின்றனர் எமது தோழர்கள். ●

www.padippakam.com

## வியட்நாம், ஈராக் மீதான ஆக்கிரமிப்புப் போரில்

# அமெரிக்கச் சதிகள்

**வியட்நாம்!** அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடும் போராளிகளின் சிந்தையில் உற்சாகத்தைத் தோற்றுவிக்கும் மாபெரும் ஊற்று. இந்தோ-சீன தீபகற்பத்தில் இருக்கும் இந்தச் சிறிய நாடு கோலியாத் போன்ற அமெரிக்க வல்லரசை 1975-ஆம் ஆண்டு வீழ்த்தி 30 ஆண்டுகள் முடிந்துவிட்டது. கம்யூனிஸ்டு கட்சியின் தலைமையில் வியட்நாமிய மக்கள், குறிப்பாக, விவசாயிகள் போராடிப் பெற்ற இந்த வெற்றி உலக வரலாற்றில் ஒரு சகாப்தம். அமெரிக்க அதிபர்கள் கென்னடி முதல் நிக்சன் வரை 10 ஆண்டுகளாக 50 சதவீத தரைப்படை, விமானப்படைகள், 15 விமானம் தாங்கிக் கப்பல்கள் என 10 லட்சம் துருப்புக்களைக் குவித்துக் கொண்டும், ஒரு கோடி டன் வெடிகுண்டுகள்; என வெறிகொண்டு தாக்கியும் அமெரிக்கா படுதோல்வியடைந்தது.

தங்களைத் தாங்களே ஆள்வதற்கும், போர் புரிவதற்கும் வியட்நாம் லாயக்கற்ற நாலாந்தர நாடு என்று 1970-இல் அமெரிக்காவின் 37-வது அதிபர் நிக்சன் எகத்தாளம் பேசினார். கடைசியில் முதல் தர நாடான அமெரிக்கா தனது படுதோல்வியை ஒப்புக் கொண்டு 1975-இல் சமாதான ஒப்பந்தம் போட பாரீசு நகருக்கு வந்தது. இராணுவ ரீதியாக மட்டுமல்ல; அரசியல், உளவியல் மற்றும் தார்மீக ரீதியாகவும் அமெரிக்கா தோற்கடிக்கப்பட்டது. ஆக்கிரமிப்புப் போர் நடத்திய 10 ஆண்டு காலத்தில் அமெரிக்காவால் ஒரு வியட்நாமிய கம்யூனிசத் தலைவரைக் கூடப் பிடிக்க முடியவில்லை. அவர்களின் மறைவிடத்தையும் தாக்க முடியவில்லை. பதிலாக நூற்றுக்கணக்கான வியட்நாமிய கிராமங்களை சின்னாபின்னமாக்கி அப்பாவி மக்களைக் கொன்று குவித்தது அமெரிக்கா.

அமெரிக்க இராணுவத்தின் மனதில் வியட்நாமிய மக்களின் வீரம் ஏற்படுத்திய பீதி நெடுங்காலம் ஆட்சி செய்தது. அதனால்தான் தற்போது ஈராக்கை கற்காலத்திற்கு அனுப்பும் வகையில் குண்டுவீசி அழித்துக் கொண்டிருக்கும் புஷ்ஷின் தகப்பன் 'அப்பா புஷ்' ஒருமுறை சொன்னார்: ''கடவுளே, இறுதியாக வியட்நாமிய பீதியை உதைத்து அனுப்பிவிட்டோம்.'' பாவம், புஷ் பரம்பரையின் வேண்டுதல் பலிக்கவில்லை. இப்போது ஈராக்கியப் போராளிகள் ஈராக்கிய பீதியை அமெரிக்காவின் மனதில் அடித்தல் திருத்தலில்லாமல் அழகாக எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.

கணினியும், செயற்கைக்கோளும், பி-52 எனும் பிரம்மாண்டமான குண்டு வீச்சு விமானங்களும் மனிதனின் விடுதலை உணர்வை வெல்ல முடியாது என்பதை உலகிற்கு உணர்த்தியது வியட்நாம். அதற்காக வியட்நாம் மக்கள் அளித்த விலையும் தியாகமும் ஒப்பிட முடியாத ஒன்று. போரில் வியட்நாமை நேரடியாக வெல்ல முடியாத அமெரிக்க இராணுவம் பல்வேறு இரசாயனக் குண்டுகளை வீசி வியட்நாமை மறைமுகமாக சுடுகாடாக்கியது. இந்தப் பேரழிவு ஆயுதங்கள்



முன்பு வியட்நாம் மீது எரிக்கும் ஏஜெண்ட் ஆரஞ்சுக் குண்டை வீசிய அமெரிக்கா.
இப்போது ஈராக் மீது எம்.77 எனும் கொடூர பாஸ்பரஸ் குண்டை வீசுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

ஏற்படுத்திய பாதிப்பு குறித்த உண்மைகள் இன்றுவரை அமெரிக்காவால் இருட்டடிப்பு செய்யப்பட்டு வருகின்றன. இந்த அநீதிக்காகவே இனிவரும் அமெரிக்க அதிபர்களையும் சேர்த்து சிரச்சேதம் செய்தால்கூட நீதியின் கணக்கு வழக்கு தீராது.

1950-களில் மலேயாவிலிருந்து பிரிட்டிஷ் இராணுவம் கம்யூனிசப் போராளிகளை அழிக்க டயாக்சின் கலந்த இரசாயனக் குண்டுகளை முதன் முதலாகப் பயன்படுத்தியது. இதனால் நாட்டுப்புறங்கள் மற்றும் காடுகளில் மரங்கள், பயிர்கள் பட்டுப்போய் விவசாயப் பொருளாதாரம் அழிவுக்குள்ளானது. இதிலிருந்து பரிசோதனை செய்து ஏஜெண்ட் பர்ப்பிள், ஏஜெண்ட் ப்ளூ, ஏஜெண்ட் ஆரஞ்சு போன்ற பேரழிவு இரசாயனக் குண்டுகளை உருவாக்கியது அமெரிக்க இராணுவம். இவற்றை 1965 முதல் 1975 வரை கப்பல் கப்பலாகக் கொண்டு போய் வியட்நாமில் இறக்கியது. இதைப் பற்றி தெற்கு வியட்நாமில் இருந்த அமெரிக்க ஆதரவு பொம்மை ஆட்சியாளர்களுக்குக் கூடத் தெரியாமல் செய்தது அமெரிக்கா.

ஏஜெண்ட் ஆரஞ்சு எனப்படும் டயாக்சின் கலந்த இந்த வெடிகுண்டு 28 வகையான நோய்களை உருவாக்கும். இந்த நோய்கள் உடனடியாகவும் வரும். அல்லது 10,20 ஆண்டுகள் கழித்தும் வரலாம். டயாக்சின் நோய்களுக்கான சிகிச்சை செலவு மிக மிக அதிகம். நோய் இருப்பதைக் கண்டுபிடிக்கும் பரிசோதனைச் செலவு மட்டும் 45 ஆயிரம் ரூபாய் (45,000). வியட்நாமின் அமெரிக்க விமான ஓட்டிகள் பறந்த சென்சஸ் கணக்குப் படி 3,000 கிராமங்களில் 42,00,000 மக்கள் மீது ஏஜெண்ட் ஆரஞ்சு வீசப்பட்டுள்ளது. இதில் 5,00,000 மக்கள் கொல்லப்பட்டார்கள்; 7,00,000 மக்கள் டயாக்சின் பாதிப்பினால் நடைப்பிணமானார்கள். மொத்த வியட்நாமின் பரப்பளவில் 10 சதவீத நிலம் நஞ்சாக்கப்பட்டது. இந்த நச்சுத்தன்மை 7 அடி ஆழம் வரை நிலத்தில் ஊடுருவி முப்பது ஆண்டுகள் வரை அதனை பட்டுப்போன நிலமாக ஆக்கி விடும். ஏஜெண்ட் ஆரஞ்சின் பயங்கரத்தை ஒப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால் நியூயார்க் நகரத்தின் குடிநீர்த் தொட்டியில் இந்த வெடிமருந்தின் 80 கிராம் அளவு கலக்கப்பட்டால் அந்த நகரத்தின் 70,00,000 மக்களும் கொல்லப்பட்டு விடுவார்கள்.

வியட்நாமில் எவ்வளவு வீசினார்கள் என்ற கணக்கு எவருக்கும் தெரியாது. தற்போதைய ஆய்வின்படி சுமார் 600 கிலோ ஏஜெண்ட் ஆரஞ்சு வீசப்பட்டுள்ளதாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அப்படியென்றால் வியட்நாமின் பாதிப்பை நினைத்துப் பார்க்கவே நடுங்க வைக்கிறது. இரத்தத்தைக் கொதிக்க வைக்கும் இந்த உண்மை குறைந்தபட்சம் மேற்கத்தியச் செய்தி ஊடகங்களில் கூட வெளிவரவில்லை. நிலைமை இப்படி இருக்கும்போது வியட்நாமிய மக்களுக்கு கிடைக்க வேண்டிய நட்ட ஈடு குறித்து எவரும் மறந்தும் கூடக் கேட்டதில்லை. ஆனாலும் உலகில் ஜனநாயகமும், ஐ.நா. சபையும் இன்னபிற இழவுகளும் இருப்பதாய்ச் சொல்கிறார்கள்.

இதில் இன்னொரு கொடுமை என்னவென்றால் ஏஜெண்ட் ஆரஞ்சின் பயங்கரம் குறித்த உண்மைகள் வியட்நாம் மக்களை முன்னிட்டுப் பேசப்படவில்லை. மாறாக, வியட்நாமில் போரிட்ட 3,00,000 அமெரிக்க வீரர்களுக்கு டயாக்சின் பாதிப்பு ஏற்பட்டது தெரியவந்து, அமெரிக்க நீதிமன்றங்களில் வழக்குகள் தொடரப்பட்டன. பாதிக்கப்பட்ட அமெரிக்க வீரர்களுக்கு நட்டஈடாகத் தரப்பட்ட 1,000 கோடி ரூபாய் மேற்குலகின் ஜனநாயகக் கண்களைத் திறந்துவிட்டது. ஏஜெண்ட் ஆரஞ்சு குறித்த பயங்கரம் உலகத்தின் தோலில் உறைத்தது. குண்டு வீசிய விமான ஓட்டுனர்களுக்கே இப்படியொரு பாதிப்பு என்றால் அதற்கு இலக்கான வியட்நாமிய மக்களின் நிலைமை எவ்வளவு பயங்கரமாக இருக்கும்.

அமெரிக்க இராணுவத்திற்கு டயாக்சின் எனும் இந்த இரசாயனப் பொருளைத் தயாரித்து அளிப்பது யார் தெரியுமா? நமக்கு அறிமுகமான மான்சான்டோ எனும் பன்னாட்டு நிறுவனம் தான். தற்போது பருத்தி விதைகளில் டெர்மினேட்டர், பி.டி. காட்டன் எனும் புதுப்புது ரகங்களை அறிமுகப்படுத்தி நமதுநாட்டு பருத்தி விவசாயிகளை தற்கொலைக்குத் தள்ளியதும் இந்நிறுவனம்தான். டயாக்சினைத் தயாரித்து அமெரிக்க இராணுவத்திற்கு சப்ளை செய்வதன் மூலம் கோடி கோடியாகச் சம்பாதிக்கிறது. இந்தக் கொலைகார நிறுவனத்திற்கு இந்தியாவிலும் ஆய்வகங்கள் இருக்கின்றன. மான்சான்டோவிற்கும் அமெரிக்க இராணுவத்திற்கும் உள்ள வர்த்தக உறவு முற்றிலும் இரகசியமானது. டயாக்சின்போல இன்னும் வேறு என்னென்ன இரசாயனக் கொலைப் பொருட்களை அந்த நிறுவனம் தயாரிக்கிறது என்பது யாருக்கும் தெரியாது.

உண்மைகளின் மேல் ஏறி நின்று சளைக்காமல் பொய் சொல்வதில் அமெரிக்கர்களை யாரும் விஞ்ச முடியாது. அமெரிக்காவின் அரசுத்துறைச் செயலராக இருந்த காலின் பாவெல் இப்படிச் சொன்னார். ''முதல் உலகப் போருக்குப் பிறகு இரசாயன உயிரியல் ஆயுதங்களைப் பயன்படுத்தியது ஈராக்கின் சதாம் உசேன்தான்.'' வியட்நாம் போரின்போதே இரசாயன ஆயுதங்களை அமெரிக்கா பயன்படுத்தி விதிகளை மீறியது. இது ஒருபுறம் இருக்க, இரசாயன உயிரியல் ஆயுதங்களை இராணுவ இலக்குகளைத் தாக்குவதற்குக் கூடப் பயன்படுத்தக் கூடாது என்று 1980-இல் ஐ.நா. சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் இந்தத் தடையை ஈராக்கில் அமெரிக்கா வெளிப்படையாகவே மீறி இருப்பது அம்பலமாகியுள்ளது.

இத்தாலியின் அரசுத் தொலைக்காட்சி நிறுவனமான ஆர்.ஏ.ஐ. ''ஃபலூஜா - மறைக்கப்பட்ட படுகொலை'' என்ற ஆவணப்படத்தை சமீபத்தில் வெளியிட்டிருக்கிறது. இதில் அமெரிக்க இராணுவம் எம்.77 எனும் வெள்ளை பாஸ்பரசைக் கொண்டு தயாரிக்கப்பட்ட இரசாயனக் குண்டை பலூஜா நகரத்தில் மக்கள் குடியிருப்பில் வீசியிருப்பது படம் பிடிக்கப்பட்டுள்ளது. பாஸ்பரஸ் குண்டு விழுந்த மாத்திரத்திலேயே 150 மீட்டர் சுற்றளவில் உள்ள மக்கள் எரிந்து, உருகி, இறந்து போனார்கள். பெண்கள், குழந்தைகளின் சட்டைகள் அப்படியே இருக்க சதையும், எலும்பும் சாம்பலாகும் கோரக் காட்சிகள் இப்படத்தில் இடம் பெற்றுள்ளன. குண்டுவீசிய வீரர்களின் நேர்காணலும் படத்திலுள்ளது. இதை ஆரம்பத்தில் ஒப்புக் கொள்ளாத அமெரிக்க அரசு தற்போது ''ஆமாம், வீசினோம், அதனால் என்ன?'' என்று திமிராகப் பேசி வருகிறது.

அமெரிக்காவின் பிரம்மாண்டமான இராணுவ பலத்தை வெறும் மூங்கில் ஆயுதங்களைக் கொண்டு விரட்டியடித்தார்கள் வியட்நாமிய மக்கள். தங்கள் உடலையே ஆயுதமாக்கி அமெரிக்காவை எதிர்கொண்டு தாக்குகிறார்கள் ஈராக்கியப் போராளிகள். வியட்நாமிலும், ஈராக்கிலும் அமெரிக்கா ஏற்படுத்தியிருக்கும் பேரழிவுகளுக்கு வருங்கால வரலாறு நிச்சயம் கணக்குத் தீர்க்கும். வீரம் செறிந்த வியட்நாமின் 30 ஆண்டுகளுக்கு முந்தைய வரலாறே அதை நிரூபித்திருக்கிறது.

• வேல்ராசன்



படிப்பகம்

www.padippakam.com

## கற்பு, கருத்துச் சுதந்திரம்:

# மாயையும் உண்மையும்

தீபாவளியோ, சுனாமியோ, சுதந்திர நாளோ, குடியரசு நாளோ, மகிழ்ச்சியோ, எழவோ எதுவாயினும் அவை பற்றிக் கருத்துக் கூறும் உரிமையும், வாய்ப்பும் பெற்றவர்கள் சினிமா உலகினர்தான். தமிழ் மக்களின் நேரம் சினிமா நேரம் என்றாகிவிட்ட நிலையில் கலவி பற்றி குஷ்பு கூறிய கருத்தும், பின்பு அதைக் கொம்பு சீவிவிட்ட சுகாசினியும், இவர்களுக்கு ஏற்பட்ட எதிர்ப்பும் மொத்தத்தில் இந்த நாடகம் இந்தியா டுடே போட்ட பாதையில் பீடு நடை போட்டு வருகிறது.

கற்பின் ஆதரவும், கலவியின் எதிர்ப்பும், கருத்துச் சுதந்திரத்திற்கு வேட்டு வைப்பதாகவும், சகிப்புத் தன்மையற்ற பாசிசச் சமூகமாக மாறுவதன் அடையாளமென்றும் ஓநாய் போல வருத்தப்படும் இந்தியா டுடே, இந்து போன்ற பத்திரிக்கைகள் தமக்கு ஆதரவாக அமீர்கான், நரேன் கார்த்திகேயன், சானியா மிர்சா முதலான அகில இந்திய நட்சத்திரங்களைக் களத்தில் இறக்கி விட்டிருக்கின்றனர்.

இதையே சற்று 'அறிவார்ந்த' தளத்தில் ஆதரிக்கும் வேலையினை அ.மார்க்ஸ், ஞாநி, கனிமொழி மற்றும் சிறு பத்திரிக்கைகள் செய்ய, செயல் தளத்தில் சற்று தாமதமாகவும், தயக்கத்துடனும் த.மு.எ.ச. கோமாளிகள் பேசி வருகின்றனர். முன்னெப்போதும் இல்லாதபடி, தங்களது பெயர்கள் ஊடகத்தில் தொடர்ந்து அடிபடுவதைக் கண்ட பா.ம.க.வும், விடுதலைச் சிறுத்தைகளும் உடனடி லாட்டரியில் கிடைத்த திடீர் பரிசின் மகிழ்ச்சியோடு ஆர்ப்பாட்டங்களையும், வழக்குப் போடுதலையும் தொடர்கின்றனர்.

இது போக தமிழில் வெளியாகும் செய்திகளில் இரண்டு உண்மைகள் - சன் டி.வி. உண்மை, ஜெயா டி.வி. உண்மை - உண்டென நிறுவி வரும் மேற்படி சானல்கள் குஷ்பு-சுகாசினியை எதிர்ப்பதையும், ஆதரிப்பதையும் பரபரப்புத் தளத்தில் செய்து வருகின்றனர். உறுதியாக 'இன உணர்வு அற்றுப்போன தமிழ்ப் பாலைவனத்தின்' கதகதப்பில் சோர்ந்து சுருண்டிருக்கும் இனவாதப் பூனை, தமிழினம் தனது மரபு, கற்பு, பண்பாடு குறித்து சிறுத்தை போல சீறுவதாகக் கற்பித்துக் கொள்கிறது; ஒரு பகற்கனவுக்காரனின் இன்பத்தைத் துரத்தி மகிழ்கிறது தமிழ் தேசப் பொதுவுடைமைக் கட்சி.

### எது கருத்துச்சுதந்திரம் யாருக்குக்கருத்துச்சுதந்திரம்?

இந்தப் பிரச்சினை கருத்திலும், காட்சியிலும் பரபரப்பாய் இருக்குமளவுக்கு அதன் உண்மை சூட்கமமாய் மறைக்கப்பட்டிருக்கின்றது. மேட்டுக்குடியின் நனவுப் பத்திரிகையான இந்தியா டுடேயின் தலைமையில் குஷ்புவின் ஆதரவாளர்கள் கருத்துச் சுதந்திரத்திற்கு ஆபத்து ஏற்பட்டு விட்டதாய் அலறுவது அதிலொன்று.

முதலாளித்துவ ஜனநாயகத்தின் தந்திரமான இருப்பே அது எல்லோருக்குமான நலனுக்காக இருப்பதாகக் காட்டிக் கொள்வதில்தான் அடங்கியிருக்கிறது. இதில் முதலாளிகளின் நலன் பாதிக்கப்படும் போதெல்லாம் எல்லோரின் நலன் பாதிக்கப்படுவதாக கூக்குரல் எழுப்பப்படும். ஜனநாயகத்தின் கதி இதுதானென்றால் கருத்துச் சுதந்திரத்தின் கதியும் அதுதான். சட்டத்தின் ஆசியுடன், தண்டனையின் கண்காணிப்பில் போதிக்கப்படும் ஜனநாயகத்தின் மேன்மை போன்றே அனைவருக்கும் சமமான கருத்துச் சுதந்திரம் என்பதும் ஒரு மூடநம்பிக்கைதான்.

உண்மையில் கருத்துச் சுதந்திரம் என்று ஒன்று இல்லை. அப்படி இருக்கவும் முடியாது. பலரும் பல கருத்துக்களை பேசி, எழுதி, விவாதிக்கலாம். ஆனால் அவை அமலாக்கப்படும் போதோ, முடிவெடுக்கப்படும் போதோ ஆளும் வர்க்க நலனுக்குரியவை மட்டும்தான் தேர்வாகும். மற்றவை மறுக்கப்படும். எனவே எல்லாக் கருத்துக்களும் கருத்தளவில் உலவலாமே ஒழிய, பௌதீக ரீதியான செயலாக ஒருபோதும் மாற முடியாது. ஆக அரசும் ஜனநாயகமும் அதிகாரமும் ஒரு வர்க்கத்தின் நலனுக்காக மட்டுமே இருக்க முடியும் என்ற விதி கருத்துக்களின் உரிமைக்கும் பொருந்தும்.

குஷ்பு கூறிய சுதந்திரப் பாலுறவு பற்றிய பிரச்சினை மேற்கண்ட விதியுடன் நேரிட்டுப் புரிந்து கொள்ள முடியாத ஒரு பண்பாட்டுப் பிரச்சினை என்ற போதிலும் அந்த வேலையை இந்தியா டுடே சிறப்பாகச் செய்து வருகிறது. குஷ்பு, சுகாசினி கொடும்பாவிகள் எரிக்கப்படுவதைக் கண்டிக்கும் சாக்கில் அழகுப் போட்டிக்கு ஆபத்து, பேஷன் ஷோவிற்குத் தடை, ஆங்கிலப் பெயர்ப் பலகைகள் நொறுக்கப்படும் அராஜகம் போன்றவற்றையும் சேர்த்துக் கொண்டு கண்டிக்கிறது.

இதிலெல்லாம் கருத்துச் சுதந்திரத்திற்கு ஆபத்துள்ளது என்று அலறும் இந்தியா டுடே, வைகோ உள்ளிட்ட தமிழின ஆர்வலர்கள் பொடாவில் அநீதியாகச் சிறை வைக்கப்பட்டது குறித்து வாய் திறக்கவில்லை. ஏன்? ஈழப் போராட்டத்தை வெறும் மேடைப் பேச்சில் கூட ஆதரிப்பதற்குச் சுதந்திரமில்லையா? குஷ்பு, சுகாசினியை ஆதரித்து ஞாயிறு மலர் வெளியிடும் இந்துப் பத்திரிக்கை தனது சக பத்திரிக்கையாளரான நக்கீரன் கோபாலை ஜெயா அரசு பொடாவில் வாட்டி எடுத்தது குறித்து மூச்சு விடவில்லை.

எழுத்தாளர் சுந்தரராமசாமி மறைவையொட்டி பக்கம் பக்கமாக அழுது,

**பா.ம.க.வும், விடுதலைச் சிறுத்தைகளும் நடத்திவரும் பிழைப்புவாத, காரியவாத, சந்தர்ப்பவாத அரசியலையும், அதன் வழி அச்சாதிகளைச் சேர்ந்த மக்கள், சந்தர்ப்பவாதத்திற்குப் பயிற்றுவிக்கப்படுவதையும் பற்றிக் கவலைப்படாமல் - உண்மையில் அவற்றை அங்கீகரித்துக் கொண்டு - குஷ்பு எதிர்ப்பில் இவர்களது பாசிச மனோபாவத்தைக் கண்டு பிடித்துக் கவலைப்படுவது நகைப்பிற்குரியது; அருவெறுப்பானது.**



படிப்பகம்

www.padippakam.com

அரற்றி, புலம்பித் தீர்க்கும் காலச்சுவடு, உயிர்மை முதலான சிறுபத்திரிக்கைகளும், போலிக் கம்யூனிஸ்டுகளின் கலைப்பிரிவான த.மு.எ.ச.வும், தடை செய்யப்பட்ட மாவோயிஸ்ட் கட்சியின் பிரதிநிதிகளென ஆந்திரத்தின் புகழ்பெற்ற எழுத்தாளர்கள் வரவரராவும் கல்யாண் ராவும் கைது செய்யப்பட்டதை - ஒரு செய்தி என்ற அளவில் கூடக் கண்டு கொள்ளவில்லை. ஆனால் வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் 60 ஆண்டுகளுக்கு முந்தைய ஸ்டாலினின் சோவியத் யூனியனில் மக்கள் கூட்டம் கூட்டமாகக் கொலை செய்யப்பட்டதான புனைவை பொய்யை இவர்கள் நினைவு கூறுவதற்கு தவறுவதில்லை.

சாதியின் பெயரால் மக்களைத் தன் பின்னே திரட்டி வைத்துக் கொண்டு பா.ம.க.வும், விடுதலைச் சிறுத்தைகளும் நடத்திவரும் பிழைப்புவாத, காரியவாத, சந்தர்ப்பவாத அரசியலையும், அதன் வழி அச்சாதிகளைச் சேர்ந்த மக்கள், சந்தர்ப்பவாதத்திற்குப் பயிற்றுவிக்கப்படுவதையும் பற்றிக் கவலைப் படாமல் - உண்மையில் அவற்றை அங்கீகரித்துக் கொண்டு - குஷ்பு எதிர்ப்பில் இவர்களது பாசிச மனோபாவத்தைக் கண்டுபிடித்துக் கவலைப்படுவது நகைப்பிற்குரியது; அருவெறுப்பானது.

உலகமயமாக்கத்தின் விளைவால் விரிந்து செல்லும் மேட்டுக்குடியின் அலங்கார வாழ்வை மட்டுமே அங்கீகரிக்க முயலும் இந்தியா டுடே, இந்து பத்திரிக்கைகள் சுதந்திரப் பாலுறவு குறித்த சர்ச்சையில் எடுக்கும் நிலைப்பாடும், கவலைப்படும் விதமும் ஆச்சரியமானதல்ல.

உண்மையில் குஷ்பு, சுகாசினிக்கு ஆதரவாய் பிரபலங்களை நேர்காணல் செய்வதும், ஒத்த கருத்துள்ளவர்களை வைத்து 'விவாதம்' நடத்திச் செய்தி வெளியிடும் இப்பத்திரிக்கைகளின் கருத்துச் சுதந்திரத்தில் யார் தலையிட்டார்கள், இல்லை, யார்தான் தலையிட முடியும்? விடுதலைச் சிறுத்தைகளோ, பா.ம.க.வினரோ தமக்கு எதிராக இப்பத்திரிக்கைகள் எப்படிச் செய்தி வெளியிட முடியும் என்று கேட்டதில்லையே. மேலும், அப்படிக் கேட்கத்தான் முடியுமா?

இதனால் இந்தியா டுடேயில் திருமாவளவனின் விருந்தினர் பக்கம் கிழிபடும் என்பதல்ல, இப்பத்திரிக்கைகளை எதிர்க்க நினைப்பது இந்திய அரசையே எதிர்ப்பது போல ஆகுமென்பது அவர்களுக்கு நிச்சயம் தெரியும். எனவே நிச்சயமின்மையில் மாட்டிக் கொள்ளும் அளவுக்கு அவர்கள் பாமரர்கள் அல்ல. கூட்டணியிலும், ஆட்சியிலும் சிறிய பங்கைப் பெற்றிருக்கும் அவர்களுக்கு தங்களது ஆட்டத்தை எந்த எல்லைவரை கொண்டு செல்லலாம் என்பதும் நன்கு தெரியும்.

எனவேதான் குஷ்புவுக்கு எதிராக ஆத்திரம் கொள்ளும் இச்சூரப்புலிகள் பார்ப்பனப் பத்திரிக்கைகள் தங்களைத் தவறாகச் சித்தரிப்பதாக வருத்தம் வெளியிடுகிறார்கள். திருமாவளவன் ஒருபடி மேலே போய் 'துடைப்பம் தூக்கிய எங்காட்களுக்கும் எனக்கும் சம்பந்தமில்லை' என்று விலகிக் கொள்கிறார்.



பதவி, கூட்டணிக்காக அரசியல் விபச்சாரத்தில் ஈடுபடும் இவர்களுக்கு 'கொள்கை பாதுகாப்பு' வழங்கும் ஆணுறை 'தமிழ்'.

இவ்வாறு பார்ப்பன ஊடகங்களின் கருத்துச் சுதந்திரத்தை இவர்கள் பணிவுடன் அங்கீகரிக்கிறார்கள். விளக்குமாறு, செருப்பு, மட்டுமல்ல மறியல், ஊர்வலம், ஆர்ப்பாட்டம் ஆகிய அனைத்துமே சமூகத்தின் கருத்துரிமைக்கு எதிரான பாசிச நடவடிக்கைகள் என்று நிலைநாட்டுவதுதான் குஷ்பு விவகாரத்தின் மூலம் பார்ப்பன ஊடகங்கள் செய்ய விரும்பும் சதி.

மக்கள் தமது கோரிக்கைகளை மனுக் கொடுத்தும் பயனில்லை என்பதால் மறியல் செய்து போராடுகிறார்கள். நாக்பூரில் கோவுர் இனப் பழங்குடி மக்கள் மந்திரியைப் பார்த்து மனுக் கொடுக்கச் சென்று போலீசின் தடியடி நெரிசலில் 150 பேரைப் பலி கொடுத்தனர். நெல்லையில் மாவட்ட ஆட்சியரைப் பார்த்து மனுக் கொடுக்கச் சென்ற மாஞ்சோலைத் தோட்டத் தொழிலாளர்கள் 18 பேர் போலீசால் கொல்லப்பட்டனர்.

கேவலம் மனுக் கொடுப்பதற்குக் கூட உரிமையோ, சுதந்திரமோ, அனுதாபமோ இல்லாத இந்த நாட்டில் தான் குஷ்புவுக்குக் கருத்துச் சுதந்திரம் இல்லையென்று கண்ணீர் விடுகிறார்கள். தமது கருத்துக்களை வெளியிடுவதற்கு வழியே இல்லை என்பதால்தான் சுவரொட்டியாய், சுவரெழுத்தாய், ஊர்வலமாய், மறியலாய் மக்கள் தங்களது கோரிக்கைகளை வெளியிடுகிறார்கள். இந்தியாடுடே, இந்து போன்ற பத்திரிக்கைகள் கையில் இருந்தால் போலீசிடம் அடிபட்டு ஏன் சாகவேண்டும்? எனவே, கருத்துக்களை வெளியிடும் சுதந்திரம் கூட மக்களுக்கு இல்லை, முதலாளிகளுக்கு மட்டும்தான்.

அம்பானியின் குடும்பச் சண்டையை தேசியப் பிரச்சினையாக்கிய தேசியப் பத்திரிக்கைகள் அதைத் தீர்த்து வைப்பதற்குக் காட்டிய முனைப்பும், சகாரா முதலாளி சுபத்ரா ராய் தலைமறைவானது குறித்து அவை



படிப்பகம்

www.padippakam.com

காட்டிய கவலையும், பாரிசில் உலக இரும்பு இந்திய முதலாளி லட்சுமி மிட்டல் உலகமே வியக்கும்படி நடத்திய திருமணம் குறித்த பெருமிதமும், மக்களுக்கு கருத்துக்களை வெளிப்படுத்தும் சுதந்திரம் இல்லை என்பதும் வேறு வேறல்ல.

தொலைக்காட்சிகளும், பத்திரிகைகளும் அடங்கிய செய்தி ஊடகத்தை கையில் வைத்திருப்பவர்கள் ஊடக முதலாளிகள். செய்தி ஊடகங்களின் முக்கிய வருவாயான விளம்பரத்தை அளிப்பவர்கள் அரசு, தொழில் துறை மற்றும் சேவைத் துறை முதலாளிகள். இந்நிலையில் ஆளும் வர்க்க நலனுக்குஉகந்தவை என்று முடிவு செய்யப்படுபவை மட்டுமே செய்தியாக, கட்டுரையாக, நிகழ்வாக, ஆய்வாக, அறிவாக முன்னிறுத்தப்படும். மற்றவை கிள்ளுக் கீரையாக மறுக்கப்படும்.

'மனம் போல தினம் ஜமாய்' என்று கோக்கை குடிக்குமாறு அமீர்கான், விவேக், விக்ரம் வலியுறுத்துவதற்கு இருக்கும் சுதந்திரம் கோக்கை மறுப்பதற்கு இல்லை. நெல்லையில் 'அமெரிக்க கோக்கை அடித்து விரட்டுவோம்' என்ற எமது இயக்கத்தின் சுவரெழுத்துப் பிரச்சாரத்திற்காகவே, பிணையில் வர இயலாத வழக்கு காவல் துறையால் போடப்பட்டது. இன்றும் கிராமப்புறங்களில் பிரச்சாரம் செய்யும் எமது தோழர்களை தொடர்ந்து தடுக்கும் போலீசு மக்களையும் மிரட்டி வருகிறது.

"கங்கை கொண்டான் சுற்று வட்டாரத்தைச் சேர்ந்த மக்கள் கொக்கோ-கோலாவுக்கு ஆதரவாக இருப்பதால் நீங்கள் நடத்தும் எதிர்ப்புப் பிரச்சாரம் பொது அமைதியைச் சீர்குலைத்து விடும்" என்று எழுத்துப்பூர்வமாகவே கருத்துரிமையை மறுக்கிறது நெல்லைப் போலீசு. குஷ்புவின் கருத்துரிமைக்காகக் குமுறி வெடிக்கும் சென்னை உயர்நீதி மன்றம், நெல்லைப் போலீசு அதிகாரிகளை வேலை நீக்கமா செய்யப் போகிறது?

குஷ்பு, சுகாசினி எதிர்ப்பை தமிழ் ஊடகங்கள் செய்தியாக்குவதன் காரணம், அதன் சினிமா பரபரப்பைக் காசாக்குவதுதானேயொழிய வேறு எதுவுமில்லை. அதனால்தான் குஷ்புவை ஆதரித்து ஆங்கில ஊடகங்கள் வெளியிடும் செய்தியின் 'தரம்' தமிழில் இல்லை. குஷ்பு பிரச்சினை குறித்த விவாதமொன்றில் சினிமா தயாரிப்பாளர் பழ.கருப்பையா குஷ்புவை அவள் இவள் என்று பேசியதைக் கண்டிக்கிறார்கள். கண்டிப்பாக இது பழ.கருப்பையாவின் ஆணாதிக்கம் தான். ஒத்துக் கொள்வோம். ஆனால் நக்சலைட்டுகளையும், காசுமீர் போராளிகளையும் அவன், இவன் என்று எழுதுவதும், தீ.கம்யூனிஸ்டுகள், தீவிரவாதிகள் என்று அவதூறு செய்வதும் என்ன வகை ஆதிக்கம்?



**விளக்குமாறு, செருப்பு மட்டுமல்ல, மறியல், ஊர்வலம், ஆர்ப்பாட்டம் அனைத்தையுமே பாசிசம்என்று நிலைநாட்டுவதுதான் பார்ப்பன ஊடகங்களின் சதி.**

பழ.கருப்பையாவது அவள், இவளென்று நிறுத்திக் கொண்டார். பெண்கள் விசயத்தில் சங்கராச்சாரி என்ன பேசினார், எப்படி நடந்து கொண்டார் என்பது நிர்வாணமான நிலையில் எந்தப் பத்திரிகையும் சங்கராச்சாரியைப் பொறுக்கி என்று எழுதவில்லை. எழுதவில்லை என்பது மட்டுமல்ல தீபாவளித் திருநாளில் நள்ளிரவில் அவர் கைது செய்யப்பட்டதை வைத்து, அடிப்படை ஜனநாயக உரிமை பறிபோனதாக ஒரு பாட்டம் அழுது தீர்க்கவும் செய்தார்கள். ஆனால் அப்துல் கலாமை அரசவைக் கோமாளி என்று ஒரு உலகறிந்த உண்மையை எழுதியதற்காக தருமபுரியில் எமது தோழர்கள் 55 நாட்கள் சிறையில் இருந்தனர்.

ஆக, இந்தியத் திருநாட்டில் ஒரு நபரை எப்படி அழைக்கலாம், அழைக்கக் கூடாது என்பதில் கூட கருத்துச் சுதந்திரம் கடுகளவும் இல்லை. எப்போதெல்லாம் ஆளும் வர்க்க நலன் இலேசாக உரசப்படுகிறதோ உடனே கருத்துச் சுதந்திரமும் பாதிக்கப்படுவதாகக் கூக்குரல் எழுகிறது.

**கலாச்சாரப் போலீசைக் கண்டிக்கும் சட்டம் ஒழுங்கு போலீசு!**

குஷ்புவுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை கருத்துச் சுதந்திரத்திற்கு எதிரான வன்முறை என்றும், இவர்களைக் கலாச்சாரப் போலீசு என்றும் சித்திரிக்கும் பார்ப்பன ஊடகங்களும், போலி கம்யூனிஸ்டுகளும், அறிஞர் பெருமக்களும் இக்கருத்தை வெளியிடும்போது சட்டம் ஒழுங்கு போலீசின் குரலில் பேசுகிறார்கள். அது மட்டுமல்ல ஏற்கெனவே ஜனநாயகமும், கருத்துரிமையும் சட்டப்படி நிலவி வருவதைப் போன்ற பிரமையையும் உருவாக்குகிறார்கள். பாசிசத்தை ஜனநாயகம் என்று அங்கீகரிக்கும் இவர்கள் 'கற்பை' பிற்போக்குத்தனம் என்று சாடுவது நல்ல நகைச்சுவை.

கற்பை ஆதரிக்கும் கருத்துப் பிரச்சாரம் செய்யலாமாம். ஆனால் அதைக் கண்ணியமான முறையில் செய்ய வேண்டுமாம். துடைப்பம், செருப்பு, கொடும்பாவி ஆகியவை கூடாதாம். செருப்பு, துடைப்பம் வைத்து ஆர்ப்பாட்டம் செய்வதோ, வழக்குப் போடுவதோ உலகெங்கும் உள்ள ஏற்றுக் கொள்ளப்பட்ட ஜனநாயக முறைகள்தானே, இதில் எங்கே வன்முறை உள்ளது? உண்மையில் இத்தகைய ஆர்ப்பாட்ட முறைகளின் மீது நடுத்தர வர்க்கத்திற்கு உள்ள வெறுப்பையே இந்து பத்திரிகை முதல் ஷங்கர் படம் வரை வெளிப்படுத்துகிறார்கள். இந்த வெறுப்பே நீதிமன்றங்கள் மூலம் பல விதங்களில் சட்டமாகியிருக்கின்றது.

அடுத்து குஷ்பு, சுகாசினியை எதிர்த்து நீதிமன்றங்களில் வழக்கு போடுவதைப் பாசிசம் என்கிறார்கள். இதை எப்படிப் பாசிசம் என்று சொல்ல முடியும்? லட்சக்கணக்கான மக்கள் ஒன்றுமில்லாத வழக்குகளுக்காகவும், வாய்தாக்களுக்காகவும் அலைந்து கொண்டிருக்கும்போது, குஷ்பு மேட்டூர் நீதிமன்றத்தில் படியேறியது


படிப்பகம்

www.padippakam.com

குறித்துக் கண்ணீர் விடுகிறார்கள். உண்மையில் இது 'நாங்கள் நீதிமன்றம், வழக்கு, விசாரணைக்கு அப்பாற்பட்டவர்கள்' என்ற மேட்டிமைத்தனமே அன்றி வேறல்ல. சென்னை உயர்நீதி மன்றமும் குஷ்பு மீது வழக்குகள் போடுவதைக் கடுமையாகக் கண்டித்திருக்கிறது.

ஆளும் வர்க்க நலன் பாதிக்கப்படும் போது மட்டும் எல்லோருக்குமான சட்டம் ஒழுங்கு 'எங்களுக்கில்லை' என்ற மனோபாவம்தான் இவர்கள் பேசும் ஜனநாயகத்தின் உண்மையான இலக்கணம். கோவை குண்டு வெடிப்பில் கைதான அப்பாவி முசுலீம்கள், பல ஆண்டுகளாகச் சிறையில் வாடும் விசாரணைக் கைதிகள் போன்றோர் உயர்நீதி மன்றத்தின் அநீதிக் கண்களுக்குத் தெரிவதில்லை. குஷ்புவின் கருத்தை எதிர்க்கும் கற்பு ஆதரவாளர்கள் தமிழ்ப் பிற்போக்காகவே இருக்கட்டும். அவர்கள் போடும் வழக்கை சட்டபூர்வமாக எதிர்கொண்டு நிரபராதி என்று நிரூபிப்பதில் என்ன பிரச்சினை?

**பாசிசத்தின் பாதந்தாங்கியாகக் கருத்துச் சுதந்திரம்!**

ஒரு கருத்தை கருத்தால் சந்திக்காமல், துடைப்பத்தை எடுப்பது வன்முறை என்றால் தங்கர்பச்சான் நடிகைகளைப் பற்றி தெரிவித்த கருத்துக்காக அவரை மன்னிப்புக் கேட்க நிர்ப்பந்தித்ததும் வன்முறைதான் என்று ஒப்புக் கொள்ள வேண்டியிருக்கும். காசுக்காக தனது கருத்தையும், கலைத் திறமையையும், உடலையும் விற்பனை செய்கின்ற விபச்சாரர்கள் நிரம்பிய திரையுலகத்தில் விபச்சாரிகளை மட்டுமே சாடிய தங்கர்பச்சானின் ஆணாதிக்க மனோபாவத்தைக் கண்டிப்பதற்கு மேல் அதில் என்ன இருக்கிறது?

கருத்துச் சுதந்திரக்காரர்களின் இந்த இரட்டை வேடம் தவிர்க்க இயலாமல் அவர்களைப் படுகுழியில் இறக்குகிறது. ''பாபர் மசூதியை இடித்தது குற்றம்தான், ஆனால் 'மசூதி இருந்த இடத்தில் ஏற்கெனவே கோவில் இருந்தது' என்று கூறுவதற்கும், 'அங்கே கோவில் கட்டுவோம்' என்று கருத்து தெரிவிப்பதற்கும் இந்துத்துவவாதிகளுக்கு கருத்துரிமை உண்டு'' என்று கூறுகிறார் அ.மார்க்ஸ். அரை அம்மண நடனங்கள், ஏகாதிபத்திய நுகர்வு வெறிக் களியாட்டங்கள் இவற்றின் அடிப்படையில் அமைந்த தனிநபரின் பாலியல் உரிமைகள் ஆகியவற்றை ஆதரிக்கும் பொருட்டு பாசிசத்தின் கருத்துரிமையையும் ஆதரிக்க வேண்டியிருக்கிறது. குஷ்புவின் கருத்துரிமைக்காக முசுலீம்களின் வாழ்வுரிமையையும், வழிபாட்டுரிமையையும் காவு கொடுக்கிறார் அ.மார்க்ஸ்.

முற்போக்குக் கலைஞரான பிரளயனோ தனியாருக்குச் சொந்தமான டிஸ்கோத்தே அரங்கிற்குள் போலீசு எப்படி அத்துமீறி நுழையலாம் என்று நட்சத்திர ஓட்டல் முதலாளியைப் போல இடி முழக்கம் செய்கிறார். இந்த வாதத்தின்படி தனிச்சொத்துடைமையின் பெயரால் சாதி தீண்டாமையையும், கருத்துரிமையையும் அங்கீகரிக்க வேண்டியிருக்கும்.

எல்லா கருத்துக்களுக்கும் சம உரிமை என்ற கருத்தே ஒரு பித்தலாட்டம். சாதி தீண்டாமையும், இந்து மத வெறிப் பாசிசமும், கற்பும், முல்லாக்களின் பத்வாக்களும், உழைக்கும் மக்களுக்கெதிரான கருத்துக்கள் என்பதை ஏற்றுக் கொள்கின்ற யாரும் அவர்களுடைய கருத்துச் சுதந்திரத்திற்காகக் குரல் கொடுக்க முடியாது. அவற்றை அங்கீகரிக்கவும் முடியாது.


> **எல்லா கருத்துக்களுக்கும் சம உரிமை என்ற கருத்தே ஒரு பித்தலாட்டம். சாதி தீண்டாமையும், இந்துமத வெறிப் பாசிசமும், கற்பும், முல்லாக்களின் பத்வாக்களும், உழைக்கும் மக்களுக்கெதிரான கருத்துக்கள் என்பதை ஏற்றுக் கொள்கின்ற யாரும் அவர்களுடைய கருத்துச் சுதந்திரத்திற்காகக் குரல் கொடுக்க முடியாது. அவற்றை அங்கிகரிக்கவும் முடியாது.**


**பெண்ணடிமைத்தனத்தை வளர்க்கும் பாலுறவு சர்வேக்கள்**

இந்தியா டுடேயின் செக்ஸ் சர்வேயிலோ, குஷ்பு கூறிய கருத்திலோ ஆணாதிக்கம் குறித்து ஒரு வெங்காயம் கூடக் கிடையாது. மாறாக, மாநகர மேட்டுக்குடி இளம் பெண்களிடம் விதவிதமான பாலியல் ருசிகளை அறிமுகப்படுத்துவதற்காகவே அந்த செக்ஸ் சர்வே எடுக்கப்பட்டது. அந்த சர்வேயில் கேட்கப்பட்ட கேள்விகளைப் பார்த்தால் இனிமேல் சரோஜா தேவிப் புத்தகங்களுக்குத் தேவையில்லை என்று தோன்றும். நடுத்தர வர்க்கம் மற்றும் மேட்டுக்குடியை விழுங்கி வரும் நுகர்வுக் கலாச்சாரத்தின் ஓர் அங்கம்தான் இந்த சர்வே.

உலகமயம், தாராளமயம், தனியார் மயம் உருவாக்கி வரும் நுகர்வுப் பண்பாடு, சமூகம் சூழ வாழும் ஒரு தனிநபரை பொருட்கள், ஆசைகள் சூழப்பட்ட நபராக மாற்றுகிறது. இந்த நபர் மேலும் மேலும் தனிமனிதனாக மாறி சகிப்புத் தன்மையற்ற நபராக மாறி, தனது ஆசைகளை நிறைவேற்றுவதற்காக ஏனைய மனித உறவுகளை ரத்து செய்கிறார். பாலுறவிலும் நுழையும் இந்தக் கண்ணோட்டம் எந்த அளவுக்குப் பரவுகிறதோ அந்த அளவுக்கு ஆணாதிக்கத்தை எதிர்த்தோ, பாலியல் வன்கொடுமைகளை எதிர்த்தோ, பெண்ணடிமைத்தனத்தை எதிர்த்தோ உள்ள மங்கலான போராட்ட உணர்வைக் கூட பெண்களிடமிருந்து துடைத்தெறிந்துவிடும். இது தனது ஆசை, தேவைகளுக்காக எல்லா விழுமியங்களையும் துறந்து தேர்ந்த காரியவாதியாக மாறுவதைப் பயிற்றுவிக்கிறது.

இந்தியா டுடேயின் சர்வே கேள்விகளில் ஒன்றான 'வேலை கிடைப்பதற்காக உடலை விற்பீர்களா?' என்ற கேள்வி அவர்களின் நோக்கத்தைத் தெளிவுபடுத்தி விடுகிறது. அது மாறும் சூழ்நிலைக்கேற்ப 'அட்ஜஸ்ட்மெண்ட்' செய்து கொள்ளுமாறு நவீன காலப் பெண்களைப் பச்சையாகக் கேட்கிறது. கற்பு குறித்த பிற்போக்குத்தனத்தை, செத்த பாம்பை அடிக்கும் இவர்கள் தங்கள் சர்வேயில் பாலியல் வன்கொடுமை பற்றியோ, சமூகத்தில் விரவியிருக்கும் ஆணாதிக்கம் குறித்தோ ஒரு கேள்விகூடக் கேட்கவில்லை.

குஷ்புவும் கூட தனது கருத்தில் திருமணத்துக்கு முந்தைய பாலுறவில் 'பாதுகாப்பாக விளையாடுமாறு' கவலை கொள்கிறார். இங்கும் சுதந்திரப் பாலுறவின் பெயரால் பெண்ணுடலை நுகர் பொருளாக்கும் ஆணாதிக்கம் குறித்து எந்தக் கேள்வியுமில்லை. அதனால்தான் இவர்கள் கற்பை பிற்போக்கு என்று தெளிவாக வரையறுப்பது போல, பெண்களுக்கான முற்போக்கு எது என்பதை தெளிவாக வரையறுக்க முடியவில்லை. அதற்கு மாறாக பெண்ணுடலை வெறும் காமப் பொருளாக உறிஞ்சக் கொடுக்கும் அடிமைத்தனத்தை அட்ஜஸ்ட்மெண்ட் என்ற பெயரில் சிபாரிசு செய்கிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

இதுவும் கற்பு என்ற பிற்போக்குத்தனத்திற்கு கடுகளவும் குறையாத பிற்போக்குத்தனம்தான்.

சுதந்திரப் பாலுறவு என்ற கோட்பாடு நடைமுறையில் ஆணின் பொறுக்கித்தனத்திற்கும், பெண்ணின் அடிமைத்தனத்திற்கும் உதவுமேயன்றி அதில் வேறு எந்த தத்துவ ஆராய்ச்சிக்கும், மயிர் பிளக்கும் விவாதத்திற்கும் இடமில்லை. அவ்வகையில் விடுதலைச் சிறுத்தைகள் - பா.ம.க.வினரின் மலிவான பரபரப்பு அரசியலை விட இந்தியா டுடேயின் பாலுறவு அரசியல் அபாயகரமானது.

ஐ.டி. (I.T) எனப்படும் தகவல் தொழில்நுட்பத்துறை குறித்து ஆகா, ஓகோ என்று புகழ்பாடும் இந்தியா டுடே அதில் பெண்கள் படும் துயரம் குறித்து இதுவரை எந்த சர்வேயும் எடுத்ததில்லை. இத்துறைப் பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு அதிகமாக ஆளாகிறார்கள், பணிநிரந்தரம் - பாதுகாப்பு இல்லை, தொழிற்சங்க உரிமை இல்லை, வரையறுக்கப்பட்ட பணி நேரம் இல்லை. மேலும், வார இறுதிக் கேளிக்கைகளுக்கு கட்டாயமாக வரவழைக்கப்படுகிறார்கள். இதற்கு மறுப்பவர்கள் இத்துறையிலிருந்து வெளியேற்றப்படுகிறார்கள் அல்லது பழமைவாதி என்று கேலி செய்யப்படுகிறார்கள். அந்தப் பழமைவாதிகளை ஜாலியான அடிமைகளாகப் பழக்கப்படுத்துவதுதான் இந்தியா டுடேயின் வேலை. மாறாக, அந்த நவீனப் பெண்ணடிமைகளை விடுதலை செய்வதற்கல்ல.

### இந்தியா டுடேயின் 'புதிய முற்போக்கு'

கற்பு எனும் நிலவுடைமைப் பிற்போக்கைச் சாடும் சக்கில் இந்தியா டுடே உலகமயமாக்கத்தின் கேடுகளை நைசாக முற்போக்கு என்று சேர்த்து விடுகிறது. பழைய தொழிற்சங்கச் சட்டங்களை ரத்து செய்ய வேண்டும் - இது முற்போக்கு. தொழிற்சங்கம் வேண்டுமெனச் சொல்வது, வேலை நிறுத்தம் செய்வது - இவை பிற்போக்கு. பேஷன் ஷோ, அழகிப் போட்டி - முற்போக்கு. புகைபிடிக்கும் காட்சிகளைத் தடைசெய்வது, கடைகளின் பெயரைத் தமிழில் எழுதுவது - பிற்போக்கு. இறுதியில் இந்த 'முற்போக்கை' மறுத்து 'பிற்போக்கை' ஆதரிப்பவர்களை தாலிபான்கள் என்று முத்திரையும் குத்தி விடுகிறது இந்தியா டுடே. காலாவதியாகும் கற்பை வைத்து உலகமயமாக்கத்தின் கேடுகளை ஏற்கச் செய்யும் இந்தச் சதித்தனம் எத்தனை பேருக்குப் புரியும்.

முன்னேறிக் கொண்டிருக்கும் சமூகத்தை குஷ்புவை ஆதரிப்பவர்கள் பின்னுக்கு இழுப்பதாக ஒரு சிறப்புக் கூட்டம் போட்டுப் புலம்பிய த.மு.எ.ச. அறிவாளிகளை ஏன் கோமாளிகள் என்று அழைத்தோம் என்பது இப்போது புரிந்திருக்கும். ஆனால் தொழிற்சங்கம் கூடாது என்ற 'முற்போக்கை' மே.வங்க முதல்வர் புத்ததேவ் பட்டாச்சார்யா ஏற்றுக் கொண்டுள்ள படியால் அவர்களை முற்றிலும் ஏமாந்த கோமாளிகள் என்றும் சொல்லி விட முடியாது.




இந்தியா டுடேயின் செக்ஸ் சர்வேயிலோ, குஷ்பு கூறிய கருத்திலோ ஆணாதிக்கம் குறித்து ஒரு வெங்காயம் கூடக் கிடையாது.

கருத்துச் சுதந்திரத்திற்காக மார்தட்டும் இந்தியா டுடே தொழிற்சங்கம் வேண்டுமா வேண்டாமா என்பது குறித்தும், தாராளமயத்தால் தற்கொலை செய்யும் விவசாயிகள் குறித்தும், அதிகரித்து வரும் பாலியல் வன்கொடுமைகள் குறித்தும் ஏன் சர்வே எடுக்க முன் வரவில்லை? ஆனால் பாலியல் குறித்து மூன்று மாதத்திற்கொரு முறை சர்வே எடுக்கும் வேகமென்ன, குஷ்புவுக்கு ஆதரவாக ஒதுக்கப்படும் பக்கங்களென்ன, சமூகம் 'முன்னேறி'ப் போவதன் இலட்சணம் இதுதான். குஷ்புவை எதிர்ப்பதில் தீவிரம் காட்டும் பா.ம.க.வும், விடுதலைச் சிறுத்தைகளும் கூட இத்தகைய சமூக முன்னேற்றத்தோடு கருத்து வேறுபாடு கொண்டவர்களல்லர். அவ்வகையில் அவர்களது சண்டை அட்டைக் கத்திகளோடுதான்.

எய்ட்ஸ் நோயின் ஊற்றுக்கண்ணான விபச்சாரத்தையும், மக்களைக் காமவெறி பிடித்த விலங்குகளாக மாற்றும் திரைப்படங்களையும் தடை செய்வது குறித்து மூச்சுவிடாமல், நாடெங்கும் ஆணுறை எந்திரங்களை வழங்குவதன் மூலம் ஆண்களுக்குப் 'பாதுகாப்பை' வழங்குகிறார் அமைச்சர் அன்புமணி. பெண்களுக்கு கற்புக் கவசம் அணிவித்து ஆண்களிடமிருந்து 'பாதுகாக்கிறார்' அப்பா இராமதாசு. சிகரெட் உற்பத்திக்குத் தடை இல்லை; சினிமா நிழலுக்குத் தடை. சில்லறை விற்பனையில் பன்னாட்டு நிறுவனங்களை நுழைத்து தமிழ் வணிகர்களை ஒழிக்க டெல்லியிலிருந்து திட்டம். அழியவிருக்கும் சிறுவியாபாரிகள் தமிழில் போர்டு வைத்த பின் தான் அழியவேண்டும் என்பதற்குத் தமிழ்நாட்டில் போராட்டம்.

### குஷ்பு, சுகாசினி மேட்டுக்குடியின் மனச்சாட்சி!

பா.ம.க.வும், விடுதலைச் சிறுத்தைகளும் எப்படி தமிழினத்தின் பிரதிநிதிகள் இல்லையோ அதேபோல குஷ்புவும் பெண்ணினத்தின் பிரதிநிதியல்ல.

குஷ்பு தின்று தினவெடுத்த வர்க்கத்தின் பிரதிநிதியாக இருந்து, சுதந்திரப் பாலுறவு குறித்துப் பேசுகிறார். அவரை தேர்ந்த சமூகவியலாளரைப் போலப் பேசுவதாகக் குறிப்பிடுவது நகைப்பிற்குரியது. அப்படிப் பேசியிருந்தால் ஒரு நடிகையாக கோடீசுவரியாக தான் நிலை பெறுவதற்குச் செய்த 'தியாகங்களை' குறைந்தபட்சம் ஒரு மேலோட்டமான சுயவிமர்சனமாகக் கூடச் சொல்லியிருப்பார். ஆனால் அவரைப் போன்ற பெண்கள் தம்மை இழப்பது குறித்தல்ல, பெறுவது குறித்தே கவலைப்படுகிறார்கள். அதையே ஒரு வாழ்க்கை முறையாக மற்றவர்களுக்கும் பரிந்துரை செய்கிறார்கள்.

குஷ்புவிடம் கேட்கப்பட்ட கேள்வியை ஏழ்மையினால் விபச்சாரியாக்கப்பட்ட பெண்ணிடம் கேட்டால் என்ன பதில் வரும்? நிச்சயமாக 'அட்ஜஸ்ட்மெண்ட்' செய்து வாழுவதைச் சரியெனக் கூறமாட்டார். காரணம்,


படிப்பகம்

www.padippakam.com

இங்கே இழப்பினால் நடிகைகளுக்கு கிடைக்கும் ஆடம்பர வாழ்வு கிடைக்காது. அவலம்தான் கிடைக்கும். நல்ல கணவன், குழந்தைகள், கல்வி, குடும்பம் என்ற சராசரிப் பெண்ணின் ஏக்கம் தான் அந்த விபச்சாரியிடம் வெளிப்படும். குஷ்புவிடம் இல்லாத ஆணாதிக்கக் கொடுமையின் மீதான கோபமும், வெறுப்பும் இந்தப் பெண்களிடம் கண்டிப்பாக இருக்கும்.

சுகாசினி, குஷ்பு போலத்தான் என்றாலும் கூடுதலாக பார்ப்பன மேட்டிமைத்தனம் கலந்த கலவை எனலாம். தமிழின வெறுப்பும், இந்துத்துவ ஆதரவும், மேட்டுக்குடியின் போலியான தேசபக்தியும் கொண்ட, 'தேசியப் படங்களை' எடுத்த மணிரத்தினத்தின் மனைவி என்ற தகுதியை அவர் சரியாகக் கொண்டிருக்கிறார்.

மணிரத்தினத்தின் வீட்டில் குண்டு வெடித்ததை வைத்து, ரஜினியிடம் சமூக உணர்வு பொங்கியதைப் போல, குஷ்புவிற்கு ஏற்பட்ட நிலைமை குறித்து சுகாசினியிடம் கோபம் கொம்பு போல சட்டென்று வெளிப்படுகிறது. மற்றபடி சராசரி தமிழ்ப் பெண்களின் வேதனை, அவலம் குறித்து அவரிடம் ஏதும், எப்போதும் வெளிப்பட்டதில்லை. பிரச்சினைகளை மேட்டிமைத்தனமாகப் பேசும் மேட்டுக்குடிப் பெண்கள், பெண்ணினத்தின் போராளியாகச் சித்தரிக்கப்படுவது, பெண்ணினத்தின் சாபக்கேடேயன்றி, பெருமைக்குரியதல்ல.

**பிழைப்புவாதத்தைப் பாதுகாக்கும் 'தமிழ் ஆணுறை'!**

தமிழக அரசியல் பொதுக்கூட்டங்களில் பேசும் பேச்சாளர்கள், அதிலும் தீப்பொறி, வெற்றிகொண்டான், நடராசன் போன்றோர் தலைவர்கள் பெண்டாளுவதைப் பெருமையாகவும், தலைவிகள் சோரம் போனதைத் தரக்குறைவாகவும் பேசுவது ஒரு நீண்ட மரபு. அவ்வகையில் திராவிட இயக்க அரசியலில் ஆணாதிக்கத் திமிரும், பெண்களைக் கேவலமாகப் பேசுவதும் இரத்தத்தோடு கலந்து விட்ட ஒன்று.

பா.ம.க.வும்; விடுதலைச் சிறுத்தைகளும் இந்தப் பொது நீரோட்டத்தோடு கூட்டணி வைத்துக் கலந்தவர்கள்தான். இரண்டு பிரபலமான பெண்கள் பேசியதை வைத்து, தமிழ்ப் பண்பாடு, மரபு, பெருமைக்குப் போராடுபவர்களாகக் காட்டிக் கொள்ள நினைக்கும் இவர்கள், தமிழ்க் கற்பு குறித்துக் கதைப்பது வெறும் பம்மாத்தே. தமிழ்ப் பெண்களின் வாழ்வைச் சூறையாடும் தாராள மயக் கொள்கையர்களின் ஆட்சியில் பங்குதாரராக இருந்து கொண்டே தமிழ்க் கற்பு பற்றிக் கதைக்கின்றனர்.

எத்தனை மேன்மைமிக்கதாக இருந்த போதிலும் கற்பு என்பது நடைமுறையில் ஒரு தனிநபரின் பாலியல் ஒழுக்கம் சார்ந்த விசயம் மட்டும்தான். ஆனால் பொது வாழ்வில் ஒழுக்கம் என்ற சொல்லை தமது அகராதியிலிருந்தே நீக்கிய கனவான்கள் தமிழ்ப் பெண்களின் கற்பு நெறி குறித்தும், மக்களின் உணர்வு புண்படுவது குறித்தும் அலட்டிக் கொள்வது அருவெறுக்கத் தக்கது; கேலிக்குரியது.

குஜராத் இனப்படுகொலை நடந்த போது கண்ணை மூடிக் கொண்டு பா.ஜ.க. வழங்கிய பதவிச் சுகத்தை அனுபவித்து இன்பம் கண்ட கருணாநிதி, இராமதாசின் அரசியல் ஒழுக்கத்திற்கு விளக்கம் தேவையில்லை. 'தலித் விடுதலை'க்காக மூப்பனார், பெர்ணாண்டஸ், சங்கராச்சாரி, ஜெயலலிதா, கருணாநிதி, சிதம்பரம் கோவில் தீட்சிதர் உள்ளிட்ட யாருடனும் கூட்டு சேர தயங்காத திருமாவளவனின் அரசியல் ஒழுக்கமோ 'அப்பழுக்கற்றது'. வாழ்க்கையை விருப்பம்போல அனுபவிக்கவும், முன்னேறவும் விரும்பும் பெண்களுக்கு குஷ்பு சிபாரிசு செய்யும் பாதுகாப்புக் கவசம் 'ஆணுறை'. பதவி சுகத்திற்காக அரசியல் விபச்சாரத்தில் ஈடுபடும் இவர்களுக்கு 'கொள்கை பாதுகாப்பு' வழங்கும் ஆணுறை 'தமிழ்'.

தாராளமயக் கொள்கைக்கு இசைவாகச் சுதந்திரப் பாலுறவையும் உள்ளடக்கிய புதிய பார்ப்பனப் பாரதக் கலாச்சாரத்தை உருவாக்க விரும்பும் இந்து, இந்தியா டுடே அடங்கிய பழைய பார்ப்பனக் கும்பல்; தாராளமயக் கொள்கையினூடாகவும் தமிழ் மக்கள் மீது பழைய பார்ப்பனக் கற்பை நிலை நாட்டப் போராடும் கருணாநிதி, இராமதாசு, திருமாவளவன் ஆகியோர் அடங்கிய புதிய பார்ப்பன வேளாளக் கும்பல்!

இந்தத் திருடன் - போலீசு விளையாட்டை ஊதிப் பெருக்கி தேசியப் பிரச்சினையாக்கி அதனூடாகத் தமிழ் தொழிற்போட்டியை நடத்திக் கொள்ளும் சன் டி.வி, ஜெயா டி.வி! இதுவரை கற்பு என்ற கருத்தை வைத்து எந்தத் தமிழ்ச் சினிமாவும் சம்பாதிக்க முடியாத பணத்தையும், ஈர்க்க முடியாத கவனத்தையும் இந்த நாடகம் பெற்று விட்டது.

தி.மு.க. கூட்டணியில் இருக்கும் பா.ம.க.வையும், பா.ம.க.வுடன் கூட்டணி வைத்திருக்கும் விடுதலைச் சிறுத்தைகளை அ.தி.மு.க. கவர இருக்கும் நிலையில், அவர்களை தி.மு.க. கூட்டணியில் வைத்திருப்பதற்காகவே, ஜெயா டி.வி. சார்பான குஷ்புவை எதிர்க்கும் இவர்களது நாடகத்தை சன் டி.வி., தமிழ் முரசு ஊதிப் பெருக்குவதாகச் சிலர் சொல்வதில் உண்மை இல்லாமலில்லை. ஆனால் கற்பை விட எம்.எல்.ஏ. சீட்டு பருண்மையானது. நாளையே ஜெயா அதிக சீட்டு கொடுத்து இவர்களைக் கவர்ந்திழுக்கலாம்.

பா.ம.க., விடுதலைச் சிறுத்தைகளால் ஆதரிக்கப்பட்ட தமிழ்ப் பெண்களும், ஜெயாவால் ஆதரிக்கப்பட்ட குஷ்புவும் இரு தரப்பினராலும் கைவிடப்பட்டு அரசியல் கற்புக்குப் புது விளக்கங்கள் வழங்கப்படலாம். இந்தியா டுடேயும் மாறிவரும் செக்ஸ் விருப்பங்கள் குறித்து புதியதொரு சர்வேயை வெளியிடலாம்.

• இளநம்பி

## சந்தாதாரர்கள் கவனத்திற்கு...

**இந்த இதழுடன் (டிச'05) முடியும் சந்தா எண்கள்:**

**12, 90, 139, 156, 244, 276, 295, 585, 604, 616, 627, 635, 636, 637, 712, 765, 768, 769, 919, 920, 922, 923, 924, 925, 926, 927, 928, 929, 930, 931, 933, 934, 935, 936, 937, 938, 939, 961**

**அடுத்த இதழுடன் (ஜன'06) முடியும் சந்தா எண்கள்:**

**17, 61, 127, 134, 145, 148; 234, 238, 243, 247, 372, 577, 615, 675, 686, 713, 742, 872, 1126, 1130, 1199, 1359**

*குறிப்பு:* 25 தேதிக்கு முன்பே சந்தா செலுத்தி விடவும். M.O. அனுப்பும்போது தவறாமல் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். புதிய சந்தா செலுத்துவோர் 'புதிய சந்தா' என எழுதி தங்களது முழு முகவரியை பின்கோடு உள்ளிட்டுத் தெளிவாக அடிக்கட்டையில் குறிப்பிடவும். வெளிநாட்டு வாசகர்கள் மின்னஞ்சல் முகவரியைத் தெரிவிக்கவும்.


படிப்பகம்

www.padippakam.com

அட்டைப்படக் கட்டுரை:

# தண்ணீர் தனியார்மயம் வெள்ளம் மக்கள் மயம்

மழை. எங்கும் மழை. மழை தரும் கவித்துவ உணர்வை சோகம் கவ்விக் கொண்ட பேய் மழை. தமிழகத்தின் கொடை என்றழைக்கப்படும் வடகிழக்குப் பருவ மழை ஏறக்குறைய பாதி தமிழகத்தை வெள்ளக்காடாக்கி விட்டது. மழை தந்த இந்தப் பெருவெள்ளத்தின் சோதனையோடு தண்ணீர் தனியார்மயம் குறித்த பிரச்சினையை இணைத்துப் பரிசீலிப்பது அவசியமாக இருக்கிறது. முன்பு குடிநீருக்காகச் சாலை மறியல் செய்த மக்கள் தற்போது வெள்ள நிவாரணத்திற்காக அன்றாடம் மறியல் செய்த வண்ணம் போராடுகின்றனர். வறட்சியோ, வெள்ளமோ இரண்டிலும் நீர் தரும் சிரமங்களைச் சுமப்பது மக்கள் தான். தண்ணீரைத் தனியார்மயமாக்கினால் இந்தச் சிரமங்கள் கூடுமா, குறையுமா?

தண்ணீர் பற்றாக்குறை இருக்கும் இக்காலத்தில், நீரைத்திட்டமிட்டுச் சேமிக்கவும், பொறுப்பாக விநியோகிக்கவும் - நுகரவும் தண்ணீரைத் தனியார்மயமாக்க வேண்டும் என உலக வங்கி முதல் தாராளமய ஆதரவாளர்கள் வரை வலியுறுத்துகின்றனர். தற்போதைய மழையால் கிளம்பியிருக்கும் ஒரு செய்தி என்னவென்றால் இன்னும் இரண்டு வருட காலத்திற்கு தமிழகத்தில் குடிநீர்ப் பஞ்சம் இல்லையாம். இதன்படி பரிசீலித்தால் தற்போதைய தண்ணீர்ச் செழிப்பின் காரணமாகத் தண்ணீரைத் தனியாருக்கு விடவேண்டியதில்லை என்றாகிறது. தண்ணீரைத் தொழிலாக்க விரும்புபவர்கள் என்ன சொல்கின்றனர்?

''தண்ணீரைக் காசு கொடுத்து வாங்க வேண்டும் என்ற நிலை வந்தால்தான் மக்களிடம் பொறுப்பு வருமாம்; அதன்மூலம் மட்டுமே தண்ணீர் பற்றாக்குறையை நீண்டகால நோக்கில் திட்டமிட்டுத் தவிர்க்க முடியுமாம்.'' இதையே விவசாயிகளும் பாசனத்திற்கான நீரைப் பணத்தைக் கட்டிப் பெறுவதே நல்லது என பிரதமர் மன்மோகன் சிங்கும் கூறுகிறார். இவை வெறும் யோசனைகளோ, நீரின் பயன்பாடு குறித்த நல்லொழுக்க உபதேசங்களோ அல்ல. உலக வங்கியின் உத்தரவின்படி பல மாநிலங்களில் பல்வேறு வடிவங்களில் ஏற்கெனவே அமலுக்கு வந்துவிட்ட யதார்த்தம் என்பதுதான் முக்கியம்.

தண்ணீர் குறித்த இந்தப் பொறுப்புணர்ச்சியை வறட்சிக் காலத்திலிருந்து நகர்த்தி இப்போதைய வெள்ளக் காலத்திற்கு நீட்டித்துப் பார்ப்போம். சமீபத்திய மழை, வெள்ளம் உருவாக்கியிருக்கும் பிரச்சினைகள் மிகவும் விரிந்தது. தமிழகம் முழுவதும் இதுவரை 300 பேர் உயிரிழந்திருக்கின்றனர். 2000 ரூபாய், 10 கிலோ அரிசி என்ற நிவாரணப் பொருட்கள் கிடைக்குமோ கிடைக்காதோ என்ற அவலத்தில் ஏற்பட்ட நெரிசல் காரணமாக ஆறு சென்னைப் பெண்கள் பரிதாபகரமாக இறந்திருக்கின்றனர். காவிரி, கொள்ளிடத்தின் இருகரையோர விவசாய நிலங்களும், காவிரி டெல்டா மாவட்டங்களான தஞ்சை, நாகை, திருவாரூரிலும் பல்லாயிரம் ஹெக்டேர் நிலங்களும், இன்னும் வடதமிழகத்தின் பயிர் நிலங்களும் சாகுபடி முடியாத நிலையில் மூழ்கின. வடசென்னையிலும் திருச்சியிலும் தமிழக வடக்கு மாவட்டங்கள் முழுவதிலும் இன்னமும் நீர்வடியாத ஏழை மக்களின் சேரிகள் ஏராளம். இந்த இழப்புகளுக்கு யார் பொறுப்பேற்க முடியும்? தண்ணீரைத் தனியார் உடைமை ஆக்கியே தீர வேண்டும் என்று பிடிவாதம் பிடிப்பவர்கள் என்ன பதில் சொல்ல முடியும்?

பாசன நீரை பணம் கட்டிப் பெற வேண்டும் என்று பேசும் மன்மோகன் சிங் மூழ்கிய நிலங்களுக்கு யாரிடமிருந்து பணம் வாங்கித் தருவார்? மக்களிடமிருந்து பெற்ற வரிப்பணத்திலிருந்து நிவாரணம் என்ற பெயரில் பிச்சை மட்டும் இடுவார். அதைப் பெறுவதற்காக மக்கள் அடித்துக் கொண்டு சாக வேண்டும். விசயத்தைச் சுருக்கினால் இதுதான் உண்மை. தண்ணீர் தரும் இலாபம் முதலாளிகளுக்கு; தண்ணீர் தரும் நட்டம் மக்களுக்கு. தண்ணீர் குறித்த தனியார்மய பொறுப்புணர்ச்சியின் இலட்சணம் இதுதான்.

தற்போதைய தொடர் மழையினால் ,சென்னைப் படுகை என்றழைக்கப்படும் நிலத்தடி நீரின் மட்டம் மூன்று முதல் நான்கு அடியாக உயர்ந்திருக்கிறதாம். இந்த உயர்வினால் மகிழ்ச்சி யாருக்கு? இந்தப் படுகையில் வரும் ஆரணி, குசஸ்தலையாற்றுப் படுகைகள் உலகவங்கி உத்தரவுப்படி தனியாருக்குத் தாரைவார்க்கப்பட இருக்கின்றன. சென்னைக் குடிநீர் - வடிகால் வாரியத்தின் திட்டங்களுக்குக் கடன் கொடுப்பது உலகவங்கி என்பதால் சென்னையின் முழுமையான குடிநீர் விநியோகம் விரைவில் தனியாருக்குப் போகும் என்பது நிச்சயம். ஆக இதன்படி மழை தந்த நிலத்தடி நீர் மட்டம் அவர்களுக்கு. மழை தந்த வெள்ளமும் பேரழிவும் மக்களுக்கு! இலாபகரமான இயற்கை மட்டும் தனியாருக்கு என்பது அயோக்கியத்தனமில்லையா? நிலம் நீரை உறிஞ்ச முடியாதபடி நகரத்தை ஆக்கியது மக்களில்லையே, முதலாளிகள் தானே? எனவே ஒரு வர்த்தக நியதிப்படிப் பார்த்தாலும் முதலாளிகள் இயற்கையின் இரு முகங்களுக்கும் பொறுப்பேற்றுக் கொள்வது தானே சரியாக இருக்க முடியும்?

மேலும் மழைதந்த வெள்ளத்திற்கு மக்கள் எப்படிக் காரணமில்லையோ, அதுபோல இயற்கை

> **பாசன நீரை பணம் கட்டிப் பெற வேண்டும் என்று பேசும் மன்மோகன் சிங் மூழ்கிய நிலங்களுக்கு யாரிடமிருந்து பணம் வாங்கித் தருவார்? மக்களிடமிருந்து பெற்ற வரிப்பணத்திலிருந்து நிவாரணம் என்ற பெயரில் பிச்சை மட்டும் இடுவார். தண்ணீர் தரும் இலாபம் முதலாளிகளுக்கு; தண்ணீர் தரும் நட்டம் மக்களுக்கு. தண்ணீர் குறித்த தனியார்மய பொறுப்புணர்ச்சியின் இலட்சணம் இதுதான்.**


படிப்பகம்

www.padippakam.com

யும் காரணமில்லை என்பதுதான் அறிவியல்பூர்வமான உண்மை. வட கிழக்குப் பருவ மழை ஒவ்வொரு வருடமும் பெய்ய வேண்டிய அளவு இந்த ஆண்டு மொத்தமாகப் பெய்து விட்டது, அவ்வளவுதான். அடுத்து இந்த மழை அளவு 4,5 ஆண்டுகளுக்கொரு முறை பெய்ததும், பெய்யாமல் வறண்டு போனதும் உண்டு. அப்போதெல்லாம் வராத வெள்ள அபாயம் தற்போது வரக் காரணம் என்ன? ஒரே காரணம் வெளிநாட்டு - உள்நாட்டு முதலாளிகளின் நலன்களுக்கேற்ப நகரங்கள் செயற்கையாக உப்பவைக்கப்பட்டதுதான்.

உயர்நீதி மன்ற உத்தரவின்படி ஏரிகளிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு வருவாய்த்துறை மட்டும் குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளும் கையில் வரைபடத்தை வைத்துக் கொண்டு சென்னையிலுள்ள ஏரிகளைத் தேடுகின்றனர். சென்னை சேத்துப்பட்டு ஏரியைத்தவிர மற்ற ஏரிகள் இந்த இருபது ஆண்டுகளில் காணாமல் போயுள்ளன. பிரம்மாண்டமான அடுக்குமாடிக் குடியிருப்புக்கள், வணிக வளாகங்கள், குப்பைக் கிடங்குகள், வெளிநாட்டு கார் தொழிற்சாலைகள், தகவல் தொழில்நுட்ப மையங்கள் ஆகியவற்றுக்காக அந்த ஏரிகள் உருமாறியுள்ளன. ஆளும் அரசியல்வாதிகள், அதிகாரவர்க்கம், முதலாளிகள் கூட்டணியில் சக்கை போடு போடும் ரியல் எஸ்டேட் தொழிலின் ஆன்மாவே இந்த ஏரிகள்தான்.

கொடுங்கையூர் ஏரி தொழிற்சாலை மற்றும் மாநகரக் கழிவுகள் கொட்டப்படும் பிரம்மாண்டமான குப்பை மேடாக மாற்றப்பட்டு விட்டது. இன்று குப்பையும், வெள்ள நீரும், கழிவுநீரும் கலந்து வட சென்னையே கூவமாகி விட்டது. இந்த வருடம் மட்டுமல்ல இனிவரும் வருடங்களிலும் சிறு மழை கூட இங்கு பிரச்சினைதான். மழையின் தொடர்கதையாக காலரா, டெங்கு, மலேரியா போன்ற தொற்று நோய்களும் தமிழகத்திலேயே முதன் முதலாக வடசென்னையில்தான் பரவும். ரியல் எஸ்டேட் மற்றும் தொழிற்சாலை முதலாளிகளின் நலனுக்காக வடசென்னை வடக்கிருக்கும் சென்னையாக மாற்றப்பட்டு விட்டது.

அதேபோல மதுரவாயல், அம்பத்தூர், போரூர், வேளச்சேரி, மடிப்பாக்கம், தாம்பரம் ஆகிய பகுதிகளில் உள்ள ஏரிகளும் ரியல் எஸ்டேட் முதலாளிகளால் வளைக்கப்பட்டு அதிகார வர்க்க ஆதரவுடன் விற்கப்பட்டிருக்கின்றன.

நகரின் நிலம் முதலாளிகளால் அபகரிக்கப்படுவதற்கேற்ப மழைநீர் வடியாமல் தேங்குவது அதிகரித்து வருகின்றது. சென்னை நகரின் புறம்போக்கு இடங்கள் முதலில் ஆளும் கட்சி பிரமுகர்களால் ஆக்கிரமிக்கப்பட்டு எம்.ஜி.ஆர். நகர், சத்யா நகர் என்று குடிசைப் பகுதிகள் போட்டு, பின்பு குடிசைகள் அகற்றப்பட்டு பல வணிக மையங்களும், பொழுது போக்குப் பூங்காக்களும் கட்டப்பட்டுள்ளன. சென்னையின் குடிசைப்பகுதிகள் அனைத்தும் தினம் ஒன்றாய் தீப்பிடித்து எரிவதற்குக் காரணம் அந்நிலத்தை முதலாளிகள் கைப்பற்றுவதற்குத்தான். தற்போது தமிழக அரசு ஐ.டி. (I.T.) எனப்படும் தகவல் தொழில் நுட்பத் துறைக்கு பல ஹெக்டேர் நிலத்தை இலவசமாகவோ, பாதி விலைக்கோ, எவ்வித வரிகளின்றியும் தருகின்றது. தற்போது சென்னை நிலம் அதிகமும் இத்துறைக்காக ஒதுக்கப்படுகின்றது.

நிலம் பொதுச்சொத்தாக இருக்கும் போது வெள்ள அபாயம் குறைவாகவும், தனிச்சொத்தாக மாற மாற அபாயம் அதிகரிக்கும் என்பதை யாரும் உலக வங்கியின் கடனுதவியுடன் செய்யப்படும் ஆய்வின்றிப் புரிந்து கொள்ளலாம். அடுத்து சென்னையில் ஓடும் கூவம், அடையாறு, பக்கிங்காம் கால்வாய் மூன்றும் கடந்த சில ஆண்டுகளாகக் குறுக ஆரம்பித்துள்ளன. இவற்றின் கரைகளில் பெரும் வணிக வளாகங்கள் கட்டப்பட்டுள்ளன. சென்னையில் மழைநீர் மற்றும் கழிவு நீர் வடிகால் குழாய்கள் சுமார் 600 கிலோமீட்டர் நீளத்திற்கு உள்ளன. இவை தனியார் தொலைபேசி நிறுவன முதலாளிகளின் கேபிள் பதிக்க தோண்டப்பட்டு உடைபட்டு அடைபட்டு எவ்விதப் பராமரிப்பும் இல்லாமல் இருக்கின்றன. இறுதியில் மழைநீர் வடிகால் முறைகள் அடைபட்டு, வெள்ளம் ஊருக்குள் ஓடுவது தவிர்க்க முடியாத நிகழ்வாகி விட்டது.

தமிழகம் முழுவதும் உள்ள 30,000 ஏரிகள், அதற்கும் அதிகமான குளங்கள், கண்மாய்கள் இப்படித்தான் மாற்றப்பட்டு வருகின்றன. இந்த நீர் நிலைகளும் இவற்றை இணைக்கும் கால்வாய்களும் அருகி வருவதோடு, இருப்பவையும் தூர்வாரப்படாமல், கரையைப் பலப்படுத்துவதும் இல்லாமல் வீணாகி வருகின்றன அல்லது மராமத்து வேலைகள் நடப்பதாகக் கணக்கு காட்டி ஊழல் செய்து கொள்ளையடிப்பதற்குப் பயன்படுகின்றன. தண்ணீர் தனியார்மயமானால் என்ன நடக்கும்? தமிழகத்து நீர் நிலைகள் ஒட்டு மொத்தமாகப் பராமரிக்கப்படாது. அல்லது, காசு வசூலாகும் வாய்ப்புள்ள இடங்கள் மட்டும் பராமரிக்கப்படும்.

உலக வங்கியும், உலக வர்த்தகக் கழகமும், மன்மோகன் சிங்கும் நீரை இலாபம் பார்க்கும் வணிகமாக மாற்ற ஆரம்பித்து விட்டார்கள்.

இந்தப் பெருமழையினால் தமிழகத்தில் 2 வருடம் தண்ணீர்ப் பஞ்சம் வராது என்பது ஒரு திட்டமிட்ட வதந்தி தவிர உண்மையில்லை. சமீபத்தில் மேட்டூரில் திறந்து விடப்பட்ட வெள்ளம், கொள்ளிடம் வழியாக விநாடிக்கு 2 முதல் 3 இலட்சம் கனஅடிநீர் கடலில் கலந்தது. கொள்ளிடத்தின் அருகில் சுமார் 5 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கும் பொன்னேரி எனும் பிரம்மாண்டமான ஏரி இன்னமும்



**கழுத்துக்கு மேலே, காவு வாங்கும் தண்ணீர் மக்களுக்கு; காலுக்குக் கீழே, விரயமாகும் தண்ணீர் முதலாளிக்கு!**


படிப்பகம்

www.padippakam.com

வறண்டு தான் உள்ளது. இதைப்போல பல ஏரிகள் இன்னும் இவ்வளவு மழை பெய்த பிறகும் வறண்டுதான் உள்ளன. சென்னையில் கூட 2 வருடத்திற்குக் குடிநீர்ப் பஞ்சம் இல்லையென்று சொல்வது தினசரி வீட்டுக்குழாயில் நீர் பிடிக்கும் வசதி உள்ளவர்களுக்குத் தான். பெரும்பான்மை மக்கள் லாரி மூலமே நீர் பிடிக்கும் நிலையில் சென்னையின் குடிநீர்ப் பஞ்சமும் - அதன் காட்சிகளும் பெரிதும் மாறிவிடாது. இத்துடன் தென்மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவமழை இரண்டிலும், மழை பெய்யாத மழை மறைவு மாவட்டங்களான தூத்துக்குடி, திருநெல்வேலியில் ஓடும் தாமிரவருணி அமெரிக்க கொக்கோ- கோலா நிறுவனத்திற்குத் தாரை வார்க்கப்பட்டுள்ளது, குடிநீர்ப் பஞ்சத்தை அதிகரிக்கவே செய்யும்.

எனவே தமிழகத்தின் நீர் நிலைகளைப் பாதுகாத்துப் பராமரிக்க வேண்டும் என்பதை மொத்த மக்கள் நலனை வைத்துத் தான் திட்டமிட்டுச் செயல்படுத்த முடியும். இதைவிடுத்து தண்ணீரைத் தனியார் மயமாக்கும் முயற்சிகள் நாட்டையும், மக்களையும் பேரழிவுக்குத்தான் தள்ளும். இதை ஒரு எடுப்பான எடுத்துக்காட்டு மூலம் பரிசீலிப்போம்.

மேட்டூர் ஸ்டான்லி அணைக்கட்டு ஒரு தனியார் முதலாளிக்குச் சொந்தம் என வைத்துக் கொள்வோம். என்ன நடக்கும்? ஆண்டுக்கு அதிகநாட்கள் 121 அடி நீரைத் தேக்கி காசு கொடுக்கும் விவசாயிகளுக்கு நீர் அளிப்பது மட்டும்தான் அந்த முதலாளியின் கவலையாக இருக்கும். மாறாக, காவிரி ஆறு, அதன் கிளை நதிகள், பாசனப் பகுதிகள், டெல்டா மாவட்டங்கள், வெள்ள அபாயம் உள்ள 10 மாவட்டங்கள் என தமிழகத்துக் கவலையாக இருக்காது. ஏற்கெனவே அரசு நிர்வாகம் இப்படிக் கவலைப்படவில்லை என்பதால்தான் காவிரியில் வெள்ளம் வந்தது. கர்நாடகத்திலிருக்கும் கிருஷ்ணராஜசாகர், மற்றும் கபினி அணைகளிலிருந்து மேட்டூருக்கு வரும் நீரின் அளவை கர்நாடகம் தினசரி தெரிவிக்கும். தற்போது வெள்ளம்வந்த நாட்களில் ஒரு ஞாயிறு அரசு விடுமுறை என்பதால் அன்றைய நிலவரத்தை கர்நாடகம் தெரிவிக்கவில்லை. இப்படி சனி இரவிலிருந்து திங்கள் காலை வரை வந்த பெரும் வெள்ளம் வேறு வழியின்றி திடீரென அணை திறக்கப்பட்டு வெளியேற்றப் பட்டது. ஏற்கெனவே மழை அதிகமாகப் பெய்துவரும் நிலையில் மேட்டூர் அணையின் உயரத்தை 110 அடியாக வைக்கும்படி அப்பகுதி விவசாயிகள் மன்றாடியிருக்கிறார்கள். இதனால் வெள்ளம் வரும் போது அதிகம் திறந்துவிட்டால் சமாளிக்க முடியும். ஆனால் ஐ.ஏ.எஸ். அதிகாரவர்க்கம் இந்த யோசனையைக் கேட்க வில்லை. இந்த அலட்சியங்கள் ஒன்று சேர்ந்தே காவிரி-கொள்ளிடத்தில் வெள்ளமாக பல ஊரை அழித்திருக்கின்றது.



இயற்கையின் ஊற்றைக் களவாடும் முதலாளிக்கு ஏரித் தண்ணீர்;
இயற்கையின் சீற்றத்துக்குப் பலியாகும் மக்களுக்கு லாரித் தண்ணி.

இவை அரசு அதிகாரவர்க்கமும் முதலாளிகள் போலத்தான் சிந்திக்கின்றனர் என்பதைத் தெளிவாக காட்டுகின்றது. இருப்பினும் அரசு நிர்வாகம், பொது மக்களின் பிரதிநிதி அமைப்பு என்ற முறையில் நாம் கேள்வியாவது கேட்க முடியும். மாறாக, தனியார் முதலாளியாக இருந்தால் நாம் எதுவும் கேட்க முடியாது.

இதேபோல 113 பேர் கொல்லப்பட்ட செகந்தராபாத்துக்கு அருகில் நடந்த ஆந்திர ரயில் விபத்தைப் பாருங்கள். வங்காள விரிகுடாவில் மையம் கொண்டிருந்த புயல் தெற்கு ஆந்திரக் கடற்கரையைக் கடக்கப் போவது தெரிந்தும், அங்கே கன மழை பெய்யப்போவது தெரிந்தும், விபத்து நடந்த ரயில் பாலத்தின் அருகாமை ஏரிகள் நிறையப் போவது தெரிந்தும், அங்கிருந்து வரும் வெள்ளம் இருப்புப் பாதைகளை அரிக்கும் என்று தெரிந்தும் அந்த விபத்து நடந்திருக்கிறது. அதாவது அரசின் வானிலைத்துறை, வருவாய்த்துறை, நீர்ப்பாசனத்துறை, ஊராட்சித் துறை, இரயில்வே துறை ஆகிய துறைகள் ஒருங்கிணைக்கப்படாமல் அலட்சியமாக இருந்ததற்கு 113 மனித உயிர்களின் இழப்பு. இந்தத் துறைகள் அனைத்தும் ஒவ்வொரு முதலாளியிடம் இருந்தால் என்ன நடக்கும்? விபத்து இன்னமும் மோசமாக இருக்கும்.

கத்ரீனா சூறாவளி அமெரிக்காவின் நீயூ ஆர்லியன்ஸ் மாநிலத்தைச் சூறையாடியபோது என்ன நடந்தது? நிலவுக்கு மனிதனை அனுப்பிய நாடு, செவ்வாய் கிரகத்திற்குச் சென்று வருவதை ஹாலிவுட் படங்கள் மூலம் சாதித்த நாடு, சிலிக்கான் வேலி மூலம் தகவல் தொழில்நுட்பத் துறையில் புரட்சி செய்த நாடு பூவுலகின் சொர்க்கபுரி எல்லாம் சரிதான். ஆனால் ஒரு புயல் தாக்கிய போது சொந்தநாட்டு மக்களைப் பாதுகாக்க முடியாமல் பஞ்சைப் பராரிகளாக வைத்ததேன்? அதுதான் அமெரிக்கா. அது முதலாளிகளின் நலனுக்காக உருவான நாடு; அதன் அரசும் இதர உறுப்புக்களும் பொதுமக்கள் நலனுக்காகச் செயல்படுபவை அல்ல; அதன் அன்றாட அரசு எந்திரம் தனியாருக்கும், முதலாளிக்கும் ஆதரவாக வடிவமைக்கப்பட்டவை.

எனவே, தனியார்மயம் பொதுவில் அநீதியானது என்பதோடு இயற்கை தன்னியல்பிலேயே பொதுச் சொத்தாக இருப்பதைத்தான் கோருகிறது. அதைப் பிரித்து தனித்தனி முதலாளிகளுக்கு வழங்குவதனால் நாட்டை அழிக்க சுனாமியோ, அணுகுண்டோ தேவையில்லை, தனியார்மயம் மட்டும் போதும்.

• இளநம்பி



படிப்பகம்

www.padippakam.com

## தீபாவளி, ரம்ஜான்:

# உங்கள் கைராசி ஸ்தாபனம் 'மார்க்சிஸ்டு'!

திட்டத்திட்ட திண்டுக்கல், வைய வைய வைரக்கல்னு இப்படி இருக் கானே என்று மக் கள் சிலரைப் பார்த்து மலைப் பதுண்டு. அப்படி நம்மை மலைக்க வைக்கிறது மார்க் சிஸ்டுகளின் (CPM) *தீக்கதிர்* நாளேடு. தீபாவளி சிறப்பு மலர், ரம்ஜான் சிறப்பு மலர் என இரண்டு மலரை வெளியிட்டு தனது மார்க்சிய திருத்தல்வழி பாரம்ப ரியத்திற்குச் சிறப்பு சேர்த்துள்ளது. வருடா வருடம் சங்கராச்சாரியே மறந்து போனாலும், தீக்கதிர் பீடாதிபதி கள் மறக்காமல் பட்டாசுடன் புதுப்புது கதைகளையும் கொளுத்திப் போடு கிறார்கள். யாராவது கேட்டால், தீக் கதிர் கட்சிப் பத்திரிகை இல்லை தோழர், வெகுமக்கள் பத்தி ரிக்கை என்று விளக்கம் வேறு. மக்கள் பத்திரிக்கை என்றால் மட்டமான வேலை செய்யலாம் என்று எந்த மார்க்சியத்தில் உள்ளதோ, அந்த மார்க்சிஸ்டு களுக்கே வெளிச்சம்!

தீபாவளி பண்டு போட்டு முத லாளித்துவத்திற்கு எதிராக ராக் கெட், சங்கு சக்கரம், ஆட்டோ பாம் என ஆயுதம் தாங்கிய தனது முன்னணிப் படையை ஏவி விடு கிறது தீக்கதிர். ''தீயின் பயன்பாட் டைக் கண்டறிந்தது மனித நாகரி கத்தின் மைல் கல்லாகும். தீயை தீபமாக்கி வணங்குவதும், வழி படுவதும் பல்வேறு நாடுகளில் இருந்து வருகிறது'' என்று பார்ப் பன மதப் பண்டிகைக்கு புது விளக்கம் கூறுகிறது. இடை யிடையே உலகமயம், குழந்தை உழைப்பு என்று இந்த விளக்கு மாத்துக்கு ரெண்டு பட்டுக் குஞ் சம் வேறு.

தீயை என்ன, இயற்கையின் விளைவுகளைப் புரிந்து கொள்ள இயலாத ஆதிகால மனிதன் பீயைக் கூடத்தான் வணங்கி யிருக்கலாம். அதற்காக அதை வளர்த்தெடுக்க முடியுமா? அதுவா பொறுப்புள்ள முற்போக் காளரின் வேலை?

அறிவின் துணைகொண்டு இயற்கையைப் புரிந்து கொள்ள மக்களுக்குக் கற்றுக் கொடுப் பதும் மடமைகளுக்கு எதிராகப் போராட உதவி செய்து மக்களுக்கு முன்னே செல்பவன்தான் கம்யூ னிஸ்டு. மக்களுக்குப் பின்னே செல்வ தல்ல மார்க்சியம். மாட்டுச் சாணியில் பிள்ளையார் பிடித்துக் கூடத்தான் மக் கள் வழிபடுகிறார்கள்! இதைத் திருத்து வது மார்க்சியமா, இல்லை, 'மக்களை முன்னிட்டு நாமும் 30 பிடிக்கலாம்' என்பதா? மக்கள் மகிழ்ச்சியுடன் பங் கேற்பதால் ''இந்த மகிழ்ச்சியில் தீக்கதி ரும் தன்னை இணைத்துக் கொள் வதாய்'' விளக்கம் வேறு. மகாமகத் தில் கூடத்தான் இலட்சக்கணக்கான மக்கள் மகிழ்ச்சி யுடன் பங்கேற் கிறார்கள். மார்க் சிஸ்டுகளும் போய் மாமாங்கக் குளத்தில் இறங்கி விடுவார் களோ! அதிலும் கூட ஒரு விழாக் குழு போட்டு விளம்பரம் வாங்க தீக்கதிர் தயங்காது.

**''கட்சி என்ற முறையில் மூட நம்பிக்கைக்கு எதிராகத் தொடை தட்டுவேன், (பார்ப்பன) மத உணர்வுக்கு தோழன் என்ற முறையில் தீபாவளிக்கு வடை தட்டுவேன்'' என்பவனை நேர்மையுள்ள கம்யூனிஸ்டாக நீங்கள் கருத முடியுமா?**




மற்ற மதங்களைப் போல அல்ல பார்ப்பனியம். தனது ஆதிக்கத்திற்குப் பணிய மறுத்தவர்களைப் படுகொலை செய்ததையே விழாவாக மாற்றிய வெறித்தனத்தில் ஒன்றுதான் தீபா வளி. மக்கள் அந்தக் கதைப்படி கொண்டாடுவதில்லை, நாமும் கதையை மாற்றிக் கொள்வோம் என்கிறது தீக்கதிர். இதன்படி, பார்ப்பன மதப் பண்டிகைகளைத் தோலுரித்து மதஉணர்வை விரட் டுவதற்குப் பதில் வேறு விளக்கம் கொடுத்தால் போதும் என்கிறது தீக்கதிர். அதாவது, தீபாவளியை தீயின் பயன்பாடாகக் கொண்டா டலாம்; கோகுலாஷ்டமிக்கு கிருஷ்ணன் பாதம் வரைந்து 'தொழிலாளி வர்க்க பாதம்' என்று கொண்டாடலாம்; மார்க்சிய கொலு வைக்கலாம்; 'பாட்டாளி வர்க்க' கொழுக்கட்டை செய்து விநாயகர் சதுர்த்தியை வேறு விழாவாக்கலாம். பார்ப்பன மத உணர்வுக்கு இப்படியெல்லாம் கூட தத்துவவிசாரம் செய்ய முடி யுமா என்று காஞ்சிமடத்து அம் பிகளே மூக்கின்மேல் தீக்கதிரை வைக்கிறார்கள். பச்சையாகச் சொன்னால் நரகலுக்கு வேறு பெயர் வைத்தால் நாறாது என் கிறார்கள் மார்க்சிஸ்டுகள்.

இதை ஏதோ கேலிக்குரிய விசயமாக மட்டும் ஒதுக்கிவிட முடியாது. வரலாற்று ரீதியாக மத உணர்வுகளுக்கும், மடமைகளுக் கும் எதிராக சளைக்காமல் போரா டிய முற்போக்கு மனிதகுல - கம் யூனிச பாரம்பரியத்தை இழிவு படுத்தும் செயலாகும். கோட் பாட்டு ரீதியாகச் சொன்னால் கம் யூனிஸ்டு கட்சி அறிக்கையில் மார்க்ஸும், ஏங்கெல்ஸும்




படிப்பகம்

''பிரபுத்துவக் கோமானுடைய மனப்புகைச்சலைப் புனிதம் பெறச்செய்வதற்காக சமயகுரு தெளித்திடும் புனிதத் தீர்த்தமே கிறித்தவ சோசலிசம்'' என்றதைப் போல் பார்ப்பன மனப்புகைச்சலுக்கு மார்க்சிஸ்டு அம்பிகள் தெளித்திடும் புனிதத் தீர்த்தமே தீக்கதிர் தீபாவளி மலர்.

தீபாவளிக்குப் புதுக்கதை விட்டாலும், தீக்கதிரும் வியாபாரிகளைப் போல பண்டிகையைத் தூண்டிவிட்டு கல்லா கட்டும் வேலையில் கச்சிதமாக உள்ளது. 88 பக்க மலரில் 45 பக்கம் விளம்பரம். அதுவும் ஆர்.எஸ்.எஸ். ஸூக்கும் படியளக்கும் அருட்செல்வர் பொள்ளாச்சி மகாலிங்கம் புகழ்பாடும் கட்டுரை முதல் அந்நிய ஏகாதிபத்தியங்களிடம் காசு வாங்கும் அரை டஜன் தொண்டு நிறுவனங்களின் 'களப்பணிகள்' வரை மலருக்கு நாற்றம் சேர்க்கின்றன. 'எல்லோருக்கும்' என்ற பாப்புலர் அப்பளத்தின் சோசலிச முழக்கம், பட்டுச் சேலை, நகைக்கடை விளம்பரங்கள் என பன்முகத் தன்மையுடன் பாட்டாளி வர்க்க உணர்வுக்குப் 'புடம்' போடுகிறது மலர். நச்சரிக்கும் கட்சிக் கவிஞர்களை என்ன செய்வது? தூக்கிப் போடு தீபாவளிமலரில் என்று கவிதைகளும் தன்பங்குக்கு தீபாவளி மலரில் முற்போக்கைக் கொளுத்திப் போடுகிறது. இடையிடையே நடிகை ரகசியா, விஜய்யின் முற்போக்கு முத்துக்கள். பின்னே, இலக்கிய மலராயிற்றே?

''கோழி வளர்த்தால் குபேரனாகலாம்; முயல் வளர்த்தால் முதலாளி ஆகலாம்'' என்று பாட்டாளி வர்க்கத்துக்கான அரவிந்த் ஃபார்ம்மின் விளம்பரமும் உண்டு. பேசாமல் இப்படி முதலீடே இல்லாமல் முதலாளிகளைப் பிடித்தால் நீங்களும் மார்க்சிஸ்டு ஆகலாம். ஊருக்கு ஊர் உள்ளூரில் அடிப்படை வசதிகள் இல்லை என்று மக்களுக்காக ஜெயலலிதாவைக் கண்டித்துத் தட்டி வைக்கிறது ஜனநாயக வாலிபர் சங்கம். தீக்கதிர் தீபாவளி மலரோ பக்கத்திற்குப் பக்கம் ஊராட்சி அமைப்புகளின் சாதனைப் பட்டியலை விளம்பரமாகப் போட்டு ஜெயலலிதா படத்துடன் தட்டி வைத்திருக்கிறது. இந்த அநியாயத்தைக் கேட்க ஜனநாயக வாலிபர் சங்கத்தில் ஒரு தோழர் கூட இல்லையா? ஆர்.எஸ்.எஸ்.-ஸின் ஏ.பி.வி.பி.க்கு எதிராகப் போராடும் இந்திய மாணவர் சங்க தோழர்களே, தீக்கதிரில் ஆர்.எஸ்.எஸ். அருட்செல்வர் புகழ்பாடும் கேவலத்திற்கு என்ன செய்யப் போகிறீர்கள்? ''சமயம் ஒழுக்கநெறி ஆகிய அனைத்தையும் புதிய அடிப்படையில் அமைப்பதற்குப் பதில் அவற்றை ஒழித்துக் கட்டி விடுகிறது. ஆகவே கம்யூனிசம் கடந்தகால வரலாற்று அனுபவம் அனைத்துக்கும் முரணாய்ச் செயல்படுகிறது'' என்றார்கள் மார்க்சும் ஏங்கெல்சும். மார்க்சியத்தைக் கொச்சைப்படுத்தும் 'மார்க்சிஸ்டுகளின்' தீக்கதிர் பார்ப்பன வேள்விக்குப் பலி கொடுக்கும் முன்பு உணர்வுள்ள தோழர்களே சிந்திப்பீர்!




**ரம்ஜான் மலரில் ரப்பானி வைத்தியசாலை முதல் சப்பாணி பள்ளி வாசல்கள் வரை விளம்பரம் வாங்கி ஈகைப் பெருநாளை ஈத்துவக்கிறது தீக்கதிர். பக்கத்திற்குப் பக்கம் பிறையும், நட்சத்திரமும் பிரமாதமான லே அவுட்; தொழிலாளி வர்க்க அரசியல் மட்டும் அவுட்டு.**

பார்ப்பன-வர்த்தகச் சூதாடிகளுக்கு மட்டுமல்ல இயங்கியல்; 'பொருள் முதல்' வாதக் கண்ணோட்டத்தில் எங்களிடம் இசுலாமியருக்கும் சரக்கு உள்ளது என்று ரம்ஜான் சிறப்பு மலரையும் போட்டுள்ளது தீக்கதிர். அடுத்து 'மாட்டுக் கொட்டாயில் பிறந்த அடித்தள மைந்தன்' ஏசுவுக்காக கிறிஸ்துமஸ் மலரும் வரலாம். இது என்ன மதச்சார்பற்ற தன்மை என்று தொணதொணக்கும் தொழிலாளி வர்க்க தோழர்களே 'மே தின மலர்' உங்களுக்கும் உண்டு.

பார்ப்பனப் பண்டிகையைப் போல நிறைய கட்டுக் கதையை அவிழ்த்துவிட முடியாததால், ரம்ஜானுக்கு வேறு மாதிரி விளக்கம் தருகிறது தீக்கதிர். ''விழா மனிதனுக்கு கணக்குப் போட கற்றுக் கொடுக்கிறது... பிறருக்கு உதவ பாடம் கற்பிக்கிறது'' என்று பக்கத்திற்குப் பக்கம் தனது வியாபாரக் கணக்கைப் போடுகிறது. ரப்பானி வைத்தியசாலை முதல் சப்பாணி பள்ளி வாசல்கள் வரை விளம்பரம் வாங்கி ஈகைப் பெருநாளை ஈத்துவக்கிறது தீக்கதிர். பார்ப்பனியத்திற்கு தீபம், அகர்வால் என பலகாரக் கடை விரித்தவர்கள் பாய்களுக்கு ஏத்த மாதிரி கடையை விரிக்கிறார்கள். ''ஈராக் போர்.. அமெரிக்க அநியாயம்'' என்று ஆளுக்கு ஏற்ற மாதிரி கட்டுரை. பக்கத்திற்குப் பக்கம் பிறையும், நட்சத்திரமும் பிரமாதமான லே அவுட்; தொழிலாளி வர்க்க அரசியல் மட்டும் அவுட்டு. ''ஒருவர் மூன்றாண்டுகளாக நிலத்தைப் பயிரிடாமல் வைத்திருந்தால் அந்நிலத்தின் மீது அவருக்கு எந்த உரிமையும் இல்லை'' என்ற நபி தோழர்களின் 'முற்போக்கு' கருத்துக்கள் வேறு. பின்னே பக்கத்திற்கு பக்கம் அரிவாளும் சுத்தியலும் போட்டு பள்ளிவாசல் நிலங்களை உழைப்பவனுக்கே தரச் சொல்லி முத்துக்களை உதிர்த்தால் மலருக்கு ரம்ஜான் இனாம் யார் தருவார்? குறைந்தபட்சம் மதச்சீர்திருத்தத்தைப் பற்றிக் கூட எழுத உரிமையில்லையா? எழுதினால் ரப்பானி தீக்கதிர் மலரின் அச்சாணியை பிடுங்கி விடுவார்.

இதைவிடக் கேவலம் மலரில் ஒரு விளம்பரம் ''மஹா அஷ்டபந்தன் நிலையம் - வாழ்க்கை வெளிச்சம் பெற, தொழில், வீடு, வியாபாரம், சக்தி மோதிரங்கள், தீராத வியாதி, திருஷ்டி தோஷங்கள், திருமண தாவிஜ், ராஜ வசியமை, சொத்துச் சேகரிப்பு, ஸ்டார் வசதி, பதவி உயர்வு பெற, ஆடு மாடு அதிகம் பால் கறக்க... அனைத்துக்கும்

www.padippakam.com

தினசரி பார்க்கப்படும். P.Md. இக்பால்'' என்று ஒரு விளம்பரம். இதையே ஒரு பக்கக் கட்டுரையாகவும் வெளியிட்டுள்ளது. அஷ்டபந்தனத்திடமிருந்து காசைக் கறப்பதற்கு இப்படியொரு கேடுகெட்ட மூடநம்பிக்கையைப் பரப்புவதுதான் தீக்கதிரின் மக்கள் சேவையா? இந்த லட்சணத்தில் மார்க்சிஸ்டுகள் 'பெரியார் விழா, பெரியார் நாடகம்' நடத்துவது யாரை ஏமாற்ற? விளம்பரம் தோழர்! காசு கொடுத்தா போட்டுத்தான் ஆகணும் என்பவர்கள் நக்சல்பாரிகள் ஒரு விளம்பரம் கொடுத்தால் போடுவார்களா? உம்... அது தீவிரமாதமாயிற்றே... அத்வானியுடன் சேர்ந்து புத்ததேவ் பட்டாச்சாரியாவும் அல்லவா நக்சலைட்டுகளை ஒழிக்க பல்லைக் கடிக்கிறார். 'ராஜவசிய மை' நக்சல்பாரிகளிடம் ஏது? மதவாதிகளுக்கே 'மை' போட்டுக் காசு வாங்குவதில் மார்க்சிஸ்டுகள் கில்லாடிகள்.

எந்த மக்கள் வந்து தீபாவளிக்கும், ரம்ஜானுக்கும் மலர்போடச் சொல்லி தீக்கதிர் வாசலில் கண்ணைக் கசக்கினார்கள். மக்கள் மேல் பழியைப் போட்டு இப்படி மூடநம்பிக்கையைப் பரப்புவதற்குப் பெயர்தான் முற்போக்கா? பண்டிகைக் காலங்களில் கைராசியான ஸ்தாபனம் வாங்க என்று முதலாளிகள் அழைப்பதைப் பார்த்திருக்கிறோம். ஆனால் அந்த முதலாளிகளையே 'நாங்க கைராசியான ஸ்தாபனம் வாங்க' என்று அழைக்கிறார்கள் மார்க்சிஸ்டுகள். அந்நிய முதலீடுகளையே அழைக்கும்போது பண்டிகை முதலீட்டிற்கு வெக்கமா என்ன?

இந்தப் போலி கம்யூனிஸ்டுகளிடம் போதிய எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று ஏற்கெனவே லெனின் நமக்கு அறிவுறுத்தியிருக்கிறார். ''இந்தக் குட்டி முதலாளிகள் அல்லது மிதவாதப் படிப்பாளிகள் மதத்திற்கெதிரான போராட்டத்தைக் கண்டு பயந்து சாகிறார்கள். இது தனது கடமை என்பதை மறந்து விடுகிறார்கள். கடவுள் நம்பிக்கையுடன் சமரசப்படுத்திக் கொள்கிறார்கள். இவர்கள் வர்க்கப் போராட்டத்தின் நலன்களால் வழிநடத்தப்படுவதில்லை; மாறாக, யார் நெஞ்சும் புண்பட்டு விடக்கூடாது. யாரையும் பயமுறுத்தி விரட்டிவிடக் கூடாது, வாழு, வாழவிடு எனும் ஞானவிதி... இத்யாதி.. இன்னபிற இழிவான மந்திரத்தைக் கூறுவது போன்ற அற்பத்தனமான எண்ணங்களால் வழிநடத்தப்படுகிறார்கள். இந்த நபர்களுக்கு மார்க்சியவாதிகள் இடமளித்து விடக் கூடாது'' (லெனின், மதத்தைப் பற்றி, நூல். பக். 40-42, NCBH வெளியீடு) என்று எச்சரித்தார். தீக்கதிரோ எப்படியாவது தீபாவளியிலும், ரம்ஜானிலும் பங்கெடுக்கச் சொல்லி நச்சரிக்கிறது. மேலும் முன்னேறி, கேரளாவில், தான் ஆட்சியிலிருக்கும் போது ஐயப்ப மகர ஜோதிக்கு கேரள மின்வாரியத்தைப் பயன்படுத்தி ஜோதி காட்டியவர்கள் தான் இந்த மார்க்சிஸ்டுகள்.

கம்யூனிசப் பாரம்பரியம் என்பது, பண்ணையார்களுக்கு எதிரான அறுவடை இயக்கம் மட்டுமல்ல; பார்ப்பனியத்துக்கு எதிரான, சாதி,மத, தீண்டாமைக்கும் எதிரான இயக்கம்தான். ''கீழ் மக்களாக நடத்தப்பட விரும்பாத பாட்டாளி வர்க்கமோ தனது உணவைக் காட்டிலும், தனது துணிவாற்றல், தனது தன்னம்பிக்கை, தனது பெருமிதம், தனது சுதந்திர உணர்வு ஆகியவற்றையே வேண்டுகிறது'' என்றார் கார்ல் மார்க்ஸ் (மதம் பற்றி மார்க்ஸ், ஆங்கில நூல் பக். 74-75). புதிய மதத்தை உருவாக்கும் தத்துவவாதிகள் என்று டூரிங்கையும், பாயர்பாக்கையும் நாத்திகத் தன்மையற்ற பொருள்முதல்வாதத்திற்காகக் கண்டித்தார் ஏங்கெல்சு. ஆண்டைகளிடமும், ஏகாதிபத்தியங்களிடமும் விலைபோகாத மார்க்சியத்தை அதனை தத்துவமாக ஏற்றுக் கொண்டதாய் பெயர் வைத்துக் கொண்டுள்ள மார்க்சிஸ்டுகளின் தீக்கதிர் கேவலப்படுத்துகிறது.

''கட்சி என்ற முறையில் அமெரிக்காவை எதிர்க்கிறோம்; அரசு என்ற முறையில் அமெரிக்க-இந்திய கூட்டுப் பயிற்சிக்கு ஏற்பாடு செய்கிறோம்'' என்று ஏகாதிபத்திய எதிர்ப்பில் இரட்டை வேடம் போடுவது போலவே, பார்ப்பனிய எதிர்ப்பிலும் ''கட்சி என்ற முறையில் பெரியாருக்கு புகழாரம் சூட்டுகிறோம்; தீக்கதிர் என்ற முறையில் தீபாவளிக்கு மலர் போடுகிறோம்'' என்கிறார்கள் மார்க்சிஸ்டுகள்.

''கட்சி என்ற முறையில் மூடநம்பிக்கைக்கு எதிராகத் தொடை தட்டுவேன், (பார்ப்பன) மத உணர்வுக்கு தோழன் என்ற முறையில் தீபாவளிக்கு வடை தட்டுவேன்'' என்பவனை நேர்மையுள்ள கம்யூனிஸ்டாக நீங்கள் கருத முடியுமா? மக்கள் கொண்டாடுகிறார்கள் என்ற சாக்கில் மத உணர்வுக்குத் தீனிபோடும் தீக்கதிர் வேண்டுமானால் ரம்ஜான் பிரியாணிக்கு தம் கட்டலாம். மானமுள்ள தோழர்களே, நீங்கள் தம் கட்டத் தேவையில்லை. வெடித்துக் கிளம்புங்கள் திரிபுவாதத்திற்கு எதிராக!

● சுடர்விழி


**கீழைக்காற்றின் வெளியீடுகள்**

❑ **ஆணாதிக்கமும் சமூக ஒடுக்குமுறைகளும்**
- பி. இரயாகரன்
பக்: 368, ரூ. 135.

❑ **ஆணாதிக்கமும் மார்க்சியமும்**
- பி. இரயாகரன்
பக்: 404, ரூ. 150.

❑ **உதவியா? சதியா?**
*அமெரிக்க அறக்கட்டளைகள் பற்றிய புதிய ஆய்வு*
பக்: 32, ரூ. 10.

❑ **ஊழியர்கள் தலைவர்கள்**
- சென்யுன்
*பொதுவுடைமைச் சமுதாயத்தைக் கட்டியெழுப்ப சேவையாற்ற விரும்பும் ஒவ்வொருவருக்கும் தேவையான நூல்*
பக்: 48, ரூ. 15.

**புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணியின் வெளியீடு**

❑ **வளர்ச்சியா, வீழ்ச்சியா?**
*தனியார்மயம், தாராளமயம், உலகமயத்தால் இந்தியப் பொருளாதாரத்தில் ஏற்பட்டிருக்கும் விளைவுகளை, உண்மை நிலையை உணர்த்தும் நூல்.*
பக்: 156, ரூ: 60.

**நூல்கள் கிடைக்குமிடம்:**
**கீழைக்காற்று வெளியீட்டகம்**
10, அவுலியா சாகிபு தெரு,
எல்லீசு சாலை, சென்னை - 2.
✆: 28412367

*(அஞ்சலில் வேண்டுவோர் நூலின் விலையுடன் ரூ.17 சேர்த்து பண அஞ்சல் செய்யவும்.)*




படிப்பகம்

www.padippakam.com

# கோடிகளில் சூதாடும் முதலாளிகளின் தீபாவளி!

தீபாவளியின் கவலைகளும் மகிழ்ச்சியும் பலவிதம். தமிழகத்தில் விடாது பெய்த அடை மழையால் சிறு வியாபாரிகளுக்கும் பாதையோர வியாபாரிகளுக்கும் இந்த ஆண்டு தீபாவளி இல்லை! ஆர்.எம்.கே.வி., போத்தீசு நிறுவனங்களின் கவலை, யார் அதிக விலையில் புதிய பட்டுப் புடவைகளை வெளியிடுகிறார்கள் என்பது! இது போக, ராணி, தேவி குடும்ப வார இதழ்களில் தீபாவளி கொண்டாட இயலாத ஏழைக் குழந்தைகளுக்கு பணக்காரக் குழந்தைகள் உதவிய சிறு கதைகளும் வெளிவந்திருக்கும். இது நாம் அறிந்த தீபாவளி. நாம் அறியாத தீபாவளி ஒன்றும் உண்டு.

எந்தத் தாராளமயம் நாட்டு மக்களைக் காவு வாங்குகிறதோ அதே தாராளமயத்தால் கோடிகளைக் குறுக்கு வழியில் குவித்திடும் முதலாளிகள் கொண்டாடும் தீபாவளிதான் அது. ஜெசிகாலால் என்ற இளம் பெண் கொலை செய்யப்பட்ட சம்பவத்தை ஒட்டி மேட்டுக்குடியினரின் நடன விருந்துக் கேளிக்கைகளை அம்பலப்படுத்தி முன்பு *புதிய கலாச்சாரத்தில்* கட்டுரை வெளியிட்டிருந்தோம். இதுவும் அதோடு சேர்ந்ததுதான்.

புதுதில்லியின் பணக்காரர்கள் வசிக்கும் ஆடம்பரமான பண்ணை வீடுகள் பிரம்மாண்டமாய் அலங்கரிக்கப்பட்டிருக்கும். பி.எம்.டபிள்யு, மெர்சிடஸ் கார்கள் அணிவகுத்து நிற்கும். விண்ணிலும், மண்ணிலும், கடலிலும், கனவிலும் தொழில் செய்யும் சினிமா முதல் கப்பல் வரையிலான முதலாளிகளும் வந்திறங்குவார்கள். மதுக்குவளைகளும் ஆயிரம் ரூபாய் நோட்டுக் கட்டுக்களும் மேசையில் வீற்றிருக்கும். தீபாவளி முன்னிரவில் தொடங்கும் சூதாட்ட சீட்டாட்டம் விடிய விடிய நடக்கும். ஆட்டத்தின் பந்தயம் இலட்சத்தில் தொடங்கி கோடிகள் வரை நீளும்.

இந்தச் சீட்டாட்டம் ஒரு இந்துமதச் சடங்கும் கூட! தீபாவளி அன்று காசு தேவதை இலட்சுமி வீடு தேடி வருவாளாம். வந்தவளை வரவேற்க விழித்திருக்க வேண்டுமாம். சிவராத்திரி போல இது லட்சுமி ராத்திரி. வட இந்திய முதலாளிகளிடம் நிலவி வரும் இந்தச் சடங்கில் முன்பு 500, 1000 என்று சீட்டாடியது மருவி தற்போது கோடியில் நிற்கிறது. அதுவும் இந்த வருடம் பங்குச் சந்தையில் வர்த்தகம் அதிகம் என்பதால் சென்ற வருடச் சீட்டாட்டத்தை விட இந்த வருடம் பந்தயத் தொகை 20 சதம் அதிகமாம். இரண்டு சூதாட்டங்களிலும் ஏற்பட்டிருக்கும் இந்த வளர்ச்சி தான் இந்தியாவின் உண்மையான பொருளாதார வளர்ச்சி! மேலும் இப்படிச் சீட்டாடுவதற்கென்றே வெளிநாட்டு என்.ஆர்.ஐ. முதலாளிகளும் வருவார்களாம். அதில் லட்சுமி மிட்டல் என்ற உலகின் பணக்கார இந்திய முதலாளியும் அடக்கம்.

திரையரங்கின் அருகே 5 ரூபாய் வைத்து மூன்று சீட்டு ஆடுபவர்களை போலீசு அடித்து இழுத்துச் செல்வதைப் பார்த்திருக்கிறோம். காரணம், சூதாட்டம் சட்டத்திற்குப் புறம்பானது. இது? இதுவும் சட்டத்திற்குப் புறம்பானதுதான். அதனாலென்ன, சட்டம் என்பதே முதலாளிகளின் கால் செருப்புத்தானே? மும்பையிலும், புதுதில்லியிலும் நடக்கும் இத்தகைய சீட்டாட்டங்களுக்கு சுங்கவரித்துறை, வருமான வரித்துறை, காவல்துறை அதிகாரிகள் வரவழைக்கப்படுகிறார்கள். வந்தவர்கள் வேண்டுமென்றே வெற்றி பெற விடப்படுகிறார்கள். சில இடங்களில் இரகசியப் பதுங்கு அறைகளில் விளையாடுகிறார்கள். இன்னும் பணத்தைப் பதுக்கிவிட்டு டோக்கன் வைத்து விளையாடுவதும் உண்டு. இந்த ஆண்டு மும்பையில் லிப்ரோ என்ற சொகுசு கப்பலில் சர்வதேசக் கடல் எல்லையைத்தாண்டி சட்டபூர்வமாகவே விளையாடினார்கள். மேலும் எம்.எல்.ஏ., எம்.பி. முதலான அரசியல்வாதிகளும் இந்த விசேட தீபாவளி சீட்டாட்டத்திற்கு வரவேற்கப்படுவதால் மொத்தத்தில் அரசியல், அதிகாரவர்க்க பாதுகாப்புடன் ஆட்டம் செழித்தோங்குகிறது.

அடுத்து, இந்தச் சீட்டுக் கச்சேரிகள் தொழிற்பிரச்சினைகளைத் தீர்க்கும் புண்ணியத்தலங்களாகவும் இருக்கின்றது. பணம் காலியானால் கார், வீடு போன்றவற்றை வைத்து ஆடுவது, பிரச்சினைக்குரிய சொத்துக்களை பணயம் வைத்து ஆடுவது, புதுப்பணக்காரனை பழைய பணக்காரர்கள் சிண்டிகேட் அமைத்து மொட்டையடிப்பது, குடித்துவிட்டு தேவையானால் ஒருவருக்கொருவர் அடித்துக் கொள்வது முதலிய ஒழுக்கங்களும் தவறாமல் இடம் பெறுவது உண்டு. இத்தகைய ஒழுக்கக் கதைகள் அடுத்த தீபாவளி வரை விறுவிறுப்பான கிசுகிசுக்களாக மேட்டுக்குடியினரிடையே உலா வருவதுண்டு.

காசுமீரில் நிலநடுக்கத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் குளிரில் நடுங்கிக் கொண்டு பரிதவித்துக் கொண்டிருந்த அதே இரவில் தான் முதலாளிகளின் இந்தக் கோடீசுவர சூதாட்ட தீபாவளியும் நடந்திருக்கிறது. நீரோக்கள் இருக்கும் வரை ஊர் தீப்பிடித்து எரிவதும் பிடில் வாசிப்பதும் இயல்பான விசயங்கள் தானே!

**ராஜா-ராணிகளின் கோடீசுவர (சூதாட்ட) தீபாவளி:**
**சட்டம், முதலாளிகளின் கால் செருப்புதானே?**



● சாத்தன்



படிப்பகம்

www.padippakam.com



## சுந்தரராமசாமி மறைவு:

# சின்னத்தனமான நினைவுகள்

**எழுத்தாளர் சுந்தரராமசாமி மறைந்து விட்டார். தன் மரணத்தைப் பற்றி அவர் எழுதிய கவிதை "என் நினைவுச் சின்னம்". அவருக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக பலரும் அந்தக் கவிதையை வெளியிட்டிருக்கும் இச்சமயத்தில் அதன் மறைபொருளை, குமுறலை, ஏக்கத்தை, அக்கவிஞனின் உண்மையான உணர்ச்சியை வெளியிடுகிறோம்.**

***"என் நினைவுச் சின்னம்
நான் விடை பெற்றுக் கொண்டுவிட்ட
செய்தி
உன்னை வந்து எட்டியதும்
நண்ப
பதறாதே"***

(சும்மா பதறி என்ன பயன்? காலச்சுவடு கூட்டம் போடுவதற்கு முன்பாகவே ஆளாளுக்குக் கூட்டம் போடுவார்கள். சு.ராவுக்கே இரங்கற்கூட்டம் பிடிக்காது என்று சொல்லி என்னைப் பற்றிப் புத்தகம் போட்டு வியாபாரம் செய்து விடுவார்கள்!)

***"ஒரு இலை உதிர்ந்ததற்கு மேல்
எதுவும் அதில் இல்லை."***

(என்று ஏறக்கட்டி விடுவார்கள். கவிதை என்பது பூட்டு. கவித்துவ மனமே அதன் சாவி. இன்னுமா புரியவில்லை? மரம்தான் விதை. விதைதான் மரம். இலை - பிரபஞ்சத்தின் குறியீடு. இருப்பினும் நண்ப.)

***"இரங்கற்கூட்டம் போட
ஆள்பிடிக்க அலையாதே."***

(ஆள், தானே வருவான். காலச்சுவடு என்பது கடலோரக் கால் தடமல்ல. புத்தகம் போடவும் பிரபலமாகவும் காலச்சுவடிடம்தான் கையேந்தி வரணும். கவலைப்படாதே. அசோகமித்திரனோ, ஜெயகாந்தனோ மண்டையைப் போட்டால் கூட நண்ப, குறித்துக் கொள் - என்னளவுக்குக் கூட்டம் வராது. ஆயினும் நண்ப)

***"நம் கலாச்சாரத் தூண்களின்
தடித்தனங்களை எண்ணி
மனச்சோர்வில் ஆழ்ந்து கலங்காதே."***

(வந்தவனுக்கும் போனவனுக்கும் சாகித்ய அகாடமி. பாக்கெட் நாவல் எழுத்தாளனுக்கு ஞானபீடம். எனக்கோ சாகித்ய அகாடமி தமிழ்ச் சிறுகதைத் தொகுப்பில் கூட இடமில்லை என்று அசோகமித்திரன் மறுத்து விட்டான். ஒருவேளை இனி எனக்கு ஒரு விருது கிடைத்தால் கூட சுந்தரராமசாமிக்கு ஒரே ஒரு விருது கிடைத்ததாகத்தான் வரலாற்றில் பதிவு செய்யப்படும். எனவே நண்ப, என் பெயரிலேயே ஒரு விருது ஆரம்பித்து விடு. பிலிம்ஃபேர் விருது போல சு.ரா. விருது வளரட்டும். என் விருது வாங்க எல்லா நாய்களும் ஓடி வரும். அப்போது கவனித்துக் கொள்ளுங்கள். அதே சமயம் எனக்கு ஒரு சாகித்திய அகாடமியோ, ஞானபீடமோ கொடுத்தால் கோபப்பட்டு மறுத்து விடவேண்டாம் என்று கண்ணனிடம் சொல்லிவை. தாமதம் பற்றிய விமர்சனத்தை கூட்டம் போட்டுப் பதிவு செய்து விடலாம்.)

***"நண்ப
சிறிது யோசித்துப்பார்
உலகெங்கும் கணந்தோறும்
இழப்பின் துக்கங்களில்
ஒரு கோடிக்கண்கள் கலங்குகின்றன
ஒரு கோடி நெஞ்சங்கள்
குமுறி வெடிக்கின்றன."***

(டைப்ரைட்டரில் என் நினைவுச் சின்னத்தை நான் எழுப்பிக் கொண்டிருக்கும் இத்தருணத்தில் டெல்லி, போபால், ஈழம் எங்கும் மந்தை மந்தையாய்ப் பிணங்கள் சரிந்து கொண்டுதான் இருக்கின்றன. நாளை மழை, வெள்ளத்தில் மரம் மட்டைகளும், மக்களும் மிதக்கலாம். அந்த ஒப்பாரிச் சத்தத்தில் 'ஊனைக்கரைத்து உயிரைப் பிழிந்து எழுத்தாக்கிய, என் மறைவுக்கு தேசிய சோகமா அறிவிப்பார்கள்? எனது இறுதி ஊர்வலத்தில் லக்ஷ்மி மணிவண்ணன் போன்ற ஒன்றிரண்டு சிஷ்ய பிள்ளைகள் தண்ணியைப் போட்டு விட்டு ஒரே ஒரு பஸ்சை மறிக்கலாம். இதற்கும் அதிகமாக வேறென்ன கௌரவத்தை இந்த தேசம் ஒரு எழுத்தாளனுக்கு வழங்கிவிடப் போகிறது?)

***"நண்ப
நீ அறிவாயா
உன் அடிச்சுவடு ஒவ்வொன்றிலும்
அழிகின்றன ஒரு கோடி உயிர்கள்."***

(அதில் நான் எம்மாத்திரம்? எனினும் நான் அற்பனல்ல. படைப்பு எனும் நெடிய லாந்தர் கம்பங்களில் ஏறி சூனியத்தைத் தரிசித்து மீண்டும் கம்பம் கம்பமாய் சளைக்காமல் அலைந்து களைத்து காலைத்தூக்கிய தருணங்களை டைரியில் குறித்து வைத்துக் கொண்டு.... "பாத்டப்பில் குளித்தார், வாழைப்பழத்தை பேரம் பேசினார், பூசிய உடல் வாகுடன் வரும் மலையாளப் பெண்களை ரசித்தார், சிங்கப்பூர் சென்ட் பூசினார், சாக்கடையை ஆராய்ந்தார், செண்பகமே, செண்பகமே பாடினார். அமெரிக்காவின் கிரீன் கார்டு வாங்கினார்" என்று என் படைப்பு அவஸ்தையை சிலர் சிறுமைப்படுத்தக் கூடும்.

எனவே, நண்ப், இனிமேலாவது ஜெயமோகனுடன் பழகும் எழுத்தாளர்களை சற்று எச்சரிக்கையாக இருக்கச் சொல். பயல் தனது அதீத மனத்தாவலால் படுக்கையறையில் கூட நுழைந்து விடுவான். இனியாவது படைப்பின் அந்தரங்கம் பகிரங்கமாகக் கூடாது என்பதே என் ஆதங்கம்.)

***"இருப்பினும்
நண்ப
ஒன்று மட்டும் செய்
என்னை அறியாத உன் நண்பனிடம்
ஓடோடிச் சென்று."***

(புதுவை இளவேனில் எடுத்த, ஈசிசேரில் நான் சாய்ந்திருக்கும் படத்தை உடனே காட்டு.)

***"கவிதையை எழுப்ப முயன்று
கொண்டிருந்தவன்
மறைந்து விட்டான் என்று மட்டும்
சொல்."***

(இவரே தூங்கிகிட்டு இருக்காரு, இவர் எதை எழுப்ப முடியும் என்று அவன் கேட்கக் கூடும்.)

***"இவ்வார்த்தைகளை
அவன் கூறும்போது
உன் கண்ணீர்
ஒரு சொட்டு
இந்த மண்ணில் உதிரும் என்றால்
போதும் எனக்கு."***

(போதுமா உனக்கு?)

● கார்மேகம்

www.padippakam.com

காங்கோ சிறுகதை:

# கடன்

ஹென்றி லோபஸ்

அந்தப் பொடிசு முகம் சுளித்தது - ''அய்யே, நல்லால்லே கருப்பி.''

''ஏய் வாண்டு, இந்தச் சாத்துக்குடி எவ்வளவு இனிப்பு தெரியுமா?'' - ஒரு சுளையை எடுத்து நன்றாகச் சப்பிச் சாப்பிட்டுக் காட்டினாள் கார்மென். பொடிசு முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தது. கார்மெனை கருப்பி என்று தான் கூப்பிடுவான் அந்தப் பொடிசு வில்லியம்ஸ். கார்மென், ஆப்பிரிக்கப் பழங்குடிப் பெண். வேலைக்காரி. அவள் எசமானனும், எசமானியும் பிரெஞ்சுப் பணக்காரர்கள்.

''நல்ல கண்ணுல்லே... நான் கண்ண மூடித் தொறக்குறதுக்குள்ள லபக்குனு முழங்கிடுவியாம்...'' கார்மென் மறுபடி கெஞ்சினாள்.

வில்லியம்ஸ் அக்குடும்பத்தின் ஒரே ஒரு செல்லப் பையன். அவனுக்குத் தனி அறை. கார்மென் இந்த அறையில்தான் அவனுக்கு ஊட்டிக் கொண்டிருந்தாள். அவன் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

சுவர்க் கடியாரம் இரவின் 7 மணியை இசைத்தது. வீட்டுக் கூடத்தில் எசமானி, எசமான், அவர்கள் நண்பர்களின் பெருங்கூட்டம். கொஞ்ச நேரம் இரைச்சல், கொஞ்சநேரம் மயான அமைதி. சீட்டுக் கச்சேரி ஓடிக் கொண்டிருந்தது.

கார்மென் கண்டிப்போடு சொன்னாள்: ''நீ சாப்பிடலேன்னா அம்மா கிட்டேதான் சொல்லப் போறேன்.'' சொல்லேன் என்பது போல முகம் காட்டிச் சிணுங்கினான் வில்லியம்ஸ். வலுவந்தமாக வில்லியம்ஸின் வாயைத் திறந்து ஒரு சுளையை உள்ளே தள்ளினாள். எது நடக்கக் கூடாதோ, அது நடந்தது. 'ஓ' என்று ஒப்பாரி வைத்தான் வில்லியம்ஸ்.

வீட்டுக் கூடத்திலிருந்து எசமானி ஓடிவருவது தெளிவாகக் கேட்டது. ''ஏய் கார்மென், என்ன செஞ்ச எருமை?'' சீட்டாட்டம் தடைப்பட்ட கோபம் அவளுக்கு.

''அம்மா, சாப்பிட மாட்டேங்கிறாம்மா.''

''பாவம் பச்சக் குழந்தயப் பலவந்தம் செஞ்சியா அறிவு கெட்டவளே. வில்லியம்ஸ், ஒனக்கு திராட்ச பிடிக்குமில்லே, சாப்பிடுறியா? ஏய் கார்மென், குழந்தயத் தொந்தரவு செய்யாம திராட்சயக் குடு.''

வில்லியம்ஸ் திராட்சையைச் சப்பிச் சப்பி உறிஞ்சிக் கடித்து வேகமாக விழுங்கினான். என்னைக்காவது ஒரு நாள் ஒரு கொத்து திராட்சை சாப்பிட வேண்டும் என்று நினைத்தாள் கார்மென்.

மணி ஏழரைக்கு விரைந்தது. அடுத்தது, வில்லியம்ஸுக்கு உடைமாற்ற வேண்டும்; அதற்கடுத்து, படுக்கை.

கார்மெனின் அவசரம் வில்லியம்ஸுக்குப் புரியாது, புரியவில்லை. வேகவேகமாக நடையை எட்டிப் போட்டாலும் மெகெலெகெல்லேவில் இருக்கிற அவள் வீட்டுக்குப் போவதற்கு குறைந்தது ஒரு மணிநேரத்துக்கு மேல் பிடிக்கும். கார்மென் பதறினாள்.

வில்லியம்ஸ் அவள் கழுத்தைக் கட்டிக் கொண்டான். 'கருப்பி, ஒரே ஒரு பாட்டு கருப்பி' - அன்றைக்குப் பார்த்து ஒன்று, இரண்டு, மூன்று பாட்டுகளுக்குப் பிறகே வில்லியம்ஸ் கண் அசந்தான். முடுக்கிய ரேடியோப் பெட்டி போல கார்மென் பாடிக் கொண்டிருந்தாளே தவிர, அவள் நினைப்பு எங்கோ இருந்தது.

வில்லியம்ஸ் கொழுகொழுவென்று வளர்ந்தான். இவள் மகன் டேவிட் - பாவம் எத்தனையோ முறை சாவை எட்டிப் பார்த்துவிட்டுக் காத்திருக்கிறான். பெரிய ஆளுங்கபோல இப்போதே வில்லியம்ஸ் வேலைக்காரர்களிடம் வேலை வாங்குகிறான். அந்தச் சட்டை வேண்டாம், இந்த டவுசர்தான் வேணும், இந்த நீலத்தொப்பிதான் வேணும், பிஸ்கட் வேண்டாம் கேக்தான் வேணும். உடனே பார்க் போகணும் - எல்லாம் கேட்பான். பாவம் டேவிட், வாயைத் திறந்து எதுவும் கேட்க மாட்டான். வெளிஆட்கள் வீட்டில் இருந்துவிட்டால் ரொம்பக் கூச்சப் படுவான்.

டேவிட்டையும் பாசம் கொட்டி வளர்க்க வேண்டும் என்றுதான் கார்மென் ஆசைப்பட்டாள். ஆனால் அது வெறும் ஆசைதான். உலகம் இருக்கிற இருப்பில் அது கனவுதான். கார்மென் டேவிட்டை எண்ணி வருந்தினாள்.

•••

அன்று காலை வேலைக்குப் போக வேண்டுமா என்றுதான் கார்மென் யோசித்தாள். முந்தின நாள் ராத்திரி பூரா டேவிட் அழுதுகொண்டேயிருந்தான். அடிக்கடி வயிற்றைப் பிடித்துக் கொண்டான் - 'வலிம்மா வலிம்மா' என்று முனகினான். வாந்தி. பேதி. மூன்று முறை வாந்தி எடுத்தான். முதல் முறை வாந்தி எடுத்ததும் 'இப்ப பரவாயில்லம்மா' என்று சொன்னான். ஆனால் வாந்தி அடங்க வில்லை. மூன்றாவது முறை அவனது சின்னஞ்சிறு வயிறு உள்ளுக்குள் இழுத்து ஓங்கரிக்க, பச்சையாக தண்ணியாக வாந்தி எடுத்தான். மூச்சு துரத்தி வாங்கியது. நெற்றியில் வியர்வை துளிர்த்தது. அவனைச் சமாதானப் படுத்துவதற்குப் பதிலாக கார்மென் இடிந்து போனாள். ஏற்கெனவே பறிகொடுத்த இரண்டு குழந்தைகள் நினைப்பு நெஞ்சுக்குள் திரண்டு இறுக்கியது.

வளாகத்தின் இன்னொரு கோடியிலிருந்த அம்மாவைக் கூப்பிட்டு அனுப்பலாமா? அனுப்பலாம்தான். பீதியில் கார்மென் திகைத்தாள். ஏதோ ஒருவழியாகத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள். அம்மாவைக் கூப்பிட்டால் அவள் உடனே குடும்ப மாந்திரீகக் கிழவனிடம் டேவிட்டைத் தூக்கிக் கொண்டு போய்விடுவாள். கார்மெனுக்கு விருப்பமில்லை.

எசமான் வீட்டில் செய்வதுபோல 'இங்கிலீஷ் வைத்தியமே' நல்லது என்று நினைத்தாள். முந்திய இரண்டு குழந்தைகளையுமே அந்த மாந்திரீகச் சூனியக் கிழவன்தான் விழுங்கிவிட்டான். - சடங்குகள் அவள் செல்வங்களைக் காப்பாற்றவில்லை. ஒவ்வொரு சாவும் ஒரு மாதச் சம்பளம் அளவுக்கு கடனைக் கூட்டியதுதான் மிச்சம். எங்கேயாவது வழியில் பார்த்தால், ''நீ உன்னோட அம்மா சொன்ன பயல கல்யாணம் கட்டிகிடலே, அதான் குத்தம். உனக்குச் சொன்னாப் புரியாது. பட்டுத்தான் கத்துக்குவே.'' என்பான் கிழவன்.

அவர்கள் சிபாரிசு செய்த பயல் கிட்டோங்கா. அரசாங்கத்தில் கார் டிரைவர் வேலை. அங்கே அவனுக்கு எசமான் அவனே. வேலைக்குப் போய் வீடு வந்தால் - சொந்தமாக வாங்கிப் போட்டி

www.padippakam.com

ருந்த ஒரு மளிகைக் கடை, ஒரு சாராயக் கடை இரண்டையும் ஓர் எட்டிப் பார்த்து வரவும் கவனிக்கவுமே நேரம் சரியாக இருக்கும். கார்மென் வேலைக் கெல்லாம் போக வேண்டாம் - வீட்டோடு ராணி போல இருக்கலாம். அவர்கள் இப்படிச் சொன்னார்களே தவிர அதற்குப் பின்னால் சங்கதி வேறு மாதிரி. அவனுக்கு ஏற்கெனவே இரண்டு பெண்டாட்டிகள், ஒருத்தி மளிகைக் கடைக்கு, இன்னொருத்தி சாராயக் கடைக்கு. கார்மென் வந்தால் வீட்டோடு மூன்றாவது பெண்டாட்டியாக இருக்கலாம்.

இப்போது கார்மென் இருக்கிற கதியே வேறு. அவள் மலைபோல் நம்பிக் காதலித்தவன் டேவிட்டையும் சேர்த்து மூன்று கொடுத்துவிட்டு, மூன்றாம் சுமை கொடுத்த பிறகு ஏமாற்றி சென்று விட்டான். அந்த வட்டாரத்தை விட்டே ஓடிவிட்டான். திரும்பி வருவான் என்று கொஞ்ச நாள் நம்பிக்கையோடு காத்திருந்தாள். அப்புறம் வேறு திருணத்தையே வெறுத்து டேவிட்டைக் காப்பாற்றினால் போதுமென்று எல்லா ஆசைகளையும் அடக்கிக் கொண்டுவிட்டாள் கார்மென்.

டேவிட் ஏதோ கூப்பிட்டான். அவள் மடியில் தலை வைத்துத் தூங்க வேண்டுமாம். 'தனியா இருக்க பயமா இருக்கும்மா' என்று கெஞ்சினான். விடியும்வரை தாங்குவானா, தெரியவில்லை அவளுக்கு. எசமானி போல இருந்தால், ஃபோனிலேயே டாக்டரைக் கூப்பிடலாம், அவசரம் என்றால் டாக்டரின் வீட்டுக்கே கூட கார் போட்டுக் கொண்டு ஓடலாம். ஏழைகள் என்ன செய்ய முடியும்?

மருந்துக் கடைகளை இந்நேரம் அடைத்திருப்பார்கள். அரசு ஆஸ்பத்திரிக்குப் போகலாம், போனால், 'நேரம் காலம் கெடயாதா உங்களுக்கெல்லாம்' என்று அந்த ஆண் நர்ஸ் வள்ளென்று எரிந்து விழுவான். தனியார் வெள்ளைத்தோல் டாக்டர்கள் ராத்திரி நேரத்தில் ஏழைக் கருப்பர்களை பங்களா கேட்டுக்குள்ளேயே விடமாட்டார்கள். கார்மெனின் கற்பனை சட்டென்று நின்றது - அந்த டாக்டர்களுக்குக் கொடுக்க காசு ஏது?

மிரண்டு போனாள் கார்மென். டேவிட்டை இழுத்து அணைத்து எடுத்து மடியில் கிடத்திக் கொண்டாள். டேவிட்டைப் பார்ப்பதும், அவனோடு கொஞ்சி விளையாடிய நாட்களை நினைவில் வருடுவதும், தூக்கமும் விழிப்பும் கலந்த ஒரு பயணமாக அவள் எங்கெங்கோ போனாள்.

விடியற்காலை. திடுமென விழித்துப் பார்த்தாள் - டேவிட், பாவம் குழுந்தை, சுருட்டிப் போட்ட துணி போல வாடிக் கிடந்து தூங்கிக் கொண்டிருந்தான். அவளுக்கு வேறு வழி இல்லை - அவனை அப்படியே விட்டு விட்டு என்றும்போல காலையில் நேரமே எழுந்து வேலைக்கு ஓடவேண்டியதுதான். எசமானிக்கு டாணென்று காலை ஏழரைக்கு அவள் கூப்பிடும் குரலுக்கு கை அருகே கார்மென் வேண்டும்.

இரவு சரியாக உறங்காததால் கார்மெனுக்கு அசதி. ஆனால் படுக்கையிலேயே கிடக்க முடியாது. வேலைக்கும் போக விருப்பமில்லை. அரசாங்க ஆஸ்பத்திரிக்குப் போய் டேவிட்டுக்கு என்ன பிரச்சினை என்று தெரிந்து கொண்டு விட்டால் நல்லதென்று அவள் மனசு துடித்தது. எப்போது டேவிட்டுக்கு உடம்பு சுகமில்லாமல் போனாலும் அவனைத் தனியே விட்டு விட்டுப் போக அவள் விரும்ப மாட்டாள். ஆனால் விரும்பியபடி நடந்ததேயில்லை. அப்போதெல்லாம் துடித்துத் துடித்துக் களைத்துப் போய்விடுவாள்.

ஒருமுறை அவனை பங்களாவுக்குத் தன்னோடு அழைத்துப் போக விரும்பினாள் கார்மென். ''என் மகன் வில்லியம்ஸைப் பாக்கறதுதான் உன் வேலை. உன் பையனப் பாக்குறதுக்கு நான் சம்பளம் போடலே'' என்று எச்சரித்து மூஞ்சியைத் திருப்பிக் கொண்டாள் எசமானி.

டேவிட்டை அப்படியே விட்டு விட்டுப் போனாலும், அம்மாவோ, உறவுக்காரப் பெண்களோ வைத்தியம் பார்க்காமல் அப்படியே விட்டுவிட மாட்டார்கள் என்று கார்மெனுக்குத் தெரியும். பழங்குடிகளின் மனசில் குடும்பம் என்றால் எல்லோரும்தான், அது மிக மிகப் பெரியது. எது எப்படி நடந்தாலும் எந்த ஒரு குழந்தையையும் எப்போதும் தனியாக விட்டுவிட மாட்டார்கள். ஆனாலும் கார்மென் மனதில் கொஞ்சம் சந்தேகம்தான். தாய் வளர்ப்புபோல மற்றது இருக்காது,





படிப்பகம்

www.padippakam.com

அதிலும் நாம் பெற்றெடுத்த குழந்தைகள் உடம்பு சுகமில்லாத போது அதிகம் நம்மைத் தேடும் என்பாள் கார்மென்.

இந்த மாசத்தில் மட்டும் இரண்டு முறை வேலைக்குப் போகவில்லை. ஒருமுறை, சேர்ந்தாற்போல இரண்டு நாள் ஜுரம் - பாயில் கிடந்தவன் எழவே இல்லை. ரெண்டாவது முறை, ஒரு சாவுக்குப் போய் விட்டாள். எசமானி சீறுசீறென்று பாய்ந்து விட்டாள்.

அவளுக்கு என்ன சொல்லி எப்படி விளக்குவது? என்னவெல்லாமோ சொல்லிப் பார்த்துவிட்டாள். இந்த வெள்ளப் பன்னிகளுக்கு நெனப்பே - நாங்க சோம்பேறிங்கறதும், அதனால தான் வேலைக்கு வரமாட்டேங்கு றோம்ங்கறதும்தான்.

•••

டேவிட்டுக்கு உடம்பு சரியில்லாமல் இருந்தும் இன்று கார்மென் வேலைக்குப் போனாள். உச்சி வெயில் நேரத்தில் அவள் தங்கை செய்தி கொண்டு வந்தாள். டேவிட்டுக்கு மருந்து வாங்கிக் கொடுத்துவிட்டார்கள், பயமில்லை. கார்மெனுக்குத் துணுக்கென்றது. இந்தப் பணத்துக்கு எப்படிச் சரிக்கட்டுவது? என்னவோ செய்யலாம், என்ன செய்தாகிலும் டேவிட் குணமாகிவிடணும்.

எஜமானியின் சீட்டாட்டம் இன்னமும் முடியவில்லை. அவள் எப்ப வருவது, எப்ப பணம் கேட்பது, எப்ப வீடு போய்ச் சேருவது? வில்லியம்ஸ் ஆழ்ந்து தூங்கி விட்டான். கார்மென் சமையலறைப் பக்கம் போய் கிழட்டுக் காவலாளி பெர்டினான்டிடம் பேசிக் கொண்டிருந்தாள். அவரிடம் மனசைக் கொட்டினால் பாரம் குறைந்து விடும்.

ஒருவழியாக எசமானி அங்கு வந்தாள். "என்ன கார்மென், இன்னமுமா வீட்டுக்குக் கிளம்பலே?"

பணம் வேண்டுமென்று எப்படிச் சொல்வது - கார்மென் திக்கினாள், தடுமாறினாள். "இல்லம்மா... வந்து... கொஞ்சம் பணம் வேணும்...."

"என்ன, மறுபடி கடனா? பத்து நாளைக்கு முன்னதானே வாங்கினே..."

"பையனுக்கு உடம்பு சுகமில்ல, மருந்து வாங்கணும்மா...."

"நல்லா இருக்குது உங்க கத... நா ஒன்னும் இங்க பொதுச்சேவ செய்யலே, புருசன் இல்லாம அவ அவ குழந்தையப் பெத்துக்குவீங்க, அத வச்சுக் காப்பாத்த மட்டும் முடியாது... ஏங்கிட்ட பணத்துக்கு ஓடி வந்துடுவீங்க..."

"அம்மா அது தொரைமார் பேசற பேச்சும்மா..." - கார்மென் துணிந்து பதில் சொல்லிவிட்டாள். ஆனால் அதை வளர்க்க விரும்பவில்லை. இப்போதைக்கு காசு வேணுமே?

"அப்படிச் சொல்லு. உம் பையனுக்குச் சுகமில்லேங்கிறே. என்னைக்கு நீ எம்பேச்ச கேட்டிருக்கே? அவனுக்கு ஒழுங்கா சோத்தப் போடுன்னு எத்தன முறை தலைப்பாடா அடிச்சிக்கிட்டிருப்பேன்... முதல்ல அதச் செஞ்சியா?"

"இல்லம்மா... வந்து..."

"என்ன இல்லயும் நொள்ளயும். வெறுமனே கிழங்கு மாவக் காச்சி அவன் வயித்துல திணிப்பே... ஒங்களுக்கு வேற என்ன தெரியும்?"

"நீங்க வில்லியம்ஸுக்கு விதவிதமா ஊட்டுறீங்களே, அப்படியா நாங்க செய்ய முடியும்?" - இப்படி கார்மென் பதில் சொல்லவில்லை, மனதில் நினைத்துக் கொண்டாள்.

"இப்ப எங்கிட்ட காசு இல்லே. உங்களப்போல ஆளுங்களுக்கு என்னைக்குத்தான் ஒறைக்கும்? பணம் மரத்துலயா காய்க்குது? கொஞ்சமாவது பணத்தச் சேத்து வெக்கணும்னு உங்களுக்கு எட்டாதா?"

எசமானி கத்திக் கொண்டிருந்தாள். இவர்கள் வேகமாக பிரெஞ்சு மொழி பேசும் போதெல்லாம் கார்மெனுக்கு ஒன்றும் புரியாது. முழிப்பாள். வெறுமனே தலையைத் தலையை ஆட்டுவாள். இப்போதும் அப்படித்தான் செய்தாள். அதுவே எசமானியை இளக்கி விடுமோ? தெரியவில்லை. அவள் அறைக்குப் போய் கொஞ்சம் ஆஸ்பிரின் மாத்திரை கொண்டு வந்து கொடுத்தாள். அடுத்த நாள் கொஞ்சம் பணம் தருவதாக வாக்கு கொடுத்தாள்.

நாளைக்குக் கொடுத்து என்ன பயன்? நாளைக்குக் கொடுப்பாளென்பதும் என்ன நிச்சயம்?

•••

ஒருவழியாக கார்மென் வீட்டுக்குக் கிளம்பினாள். கருப்பர்கள் குடியிருக்கிற மெகெலெகெல்லேவுக்கு அவள் போக ஒரு மணிநேரம் போல ஆகிவிடும். வழியேற குழம்பிக் குழம்பிப் பல சிந்தனை. எங்கிருந்தோ டேவிட் கூப்பிடுவது போலிருந்தது. நடையை எட்டிப் போட்டாள்.

"பாவம் டேவிட்! பெரியவனானால் என்னைக் காப்பாற்றுவான். பெரியவன் ஆனால் அவனுக்கு என் மீது பாசம் இருக்குமா? இப்படி விட்டு விட்டுப் போய்விடுகிறாளே பாவி என்று இப்போது சபித்துக் கொண்டிருக்கிறானோ? எனக்கு இங்கிலீஷ் வைத்தியத்தில்தான் நம்பிக்கை இருக்கிறது. அப்படி ஒருவேளை அம்மா இன்னக்கி ராத்திரி மாந்திரீகனைப் பார்க்க நிர்ப்பந்தம் செஞ்சா, போக வேண்டியதுதான்" - கார்மென் அலை பாய்ந்தாள்.

எசமானிக்கென்ன? சேமிப்பு, மருந்து என்று எதைவேண்டுமானாலும் சொல்லுவாள். அவள் கிடக்கிறாள். மாசம் 100 ரூபாய் சேக்கணும்னா நடக்கிற காரியமா? கைக் கடியாரம் வாங்கினதுக்காக இதே எசமானியம்மா மாசாமாசம் கெடுபிடியா பணம் பிடிக்கிறா. இது இல்லாம ஊருக்குள்ளே சீட்டுப் பணம் கட்டணும். மீத மிச்சம் என்ன இருக்கு? மாசம் பூரா நான் செலவு செய்யிற பணம் எசமானி அம்மாவுக்கு ஒருநாள் சாப்பாட்டுச் செலவுக்குக் காணாது.

தெருக்களில் அனேக தெரு விளக்குகள் எரியவில்லை. இருட்டு வழிந்தோடியது. எதிரே வந்த கார்கள் முழு வெளிச்சமும் வாரி இறைத்துக் கண்களைக் குருடாக்கின. பின்னால் வந்த வாகனங்களோ மோதுவதுபோல அருகே தாண்டிப் போயின. யாரும் ஏற்றிக் கொள்ளவில்லை - இத்தனைக்கும் கார்மெனைப் போல கருப்பர்கள்தான் டிரைவர்கள். இன்றைய உலகத்துல அவனவன் பாடு அவனுக்கு.

நாளைக்கு எசமானி பணம் கொடுக்கணும் - கொடுப்பாளா? கார்மென் மறுபடி மறுபடி யோசித்தாள்.

வீடு சமீபமாக வந்தபோது பெண்களின் ஒப்பாரி வேகமாக வந்து தாக்கியது. ஐயோ டேவிட். மருந்து, மாந்திரீகன் எட்டாத இடத்துக்கு டேவிட் போய் விட்டானா, ஐயோ.

கார்மெனுக்கு கண்கள் இருண்டன.

•••

***("கோடை நாட்களின் இரண்டு இரவுகள்" - ஆப்பிரிக்கச் சிறுகதைகளின் தொகுப்பு, 2003. என்.பி.டி. - தேசியப் புத்தக நிறுவனம், புதுடெல்லி வெளியீடு. ஆங்கிலம் வழி தமிழில்: புதூர்இராசவேல்)***



படிப்பகம்

www.padippakam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

தகுதியின் காரணமாய்த் தலைவராகிய வர். வண்ணக் கவர்ச்சியில்லை, மிடுக் கில்லை, மனம் தளர்ந்து விட்டுக் கொடுக்கும் இயல்பில்லை, தன்வயப் பட்ட விருப்பு வெறுப்பில்லை, படா டோபமான தனிப் பாணிகள் இல்லை - ஆனால் ஆழ்ந்த கருத்துக்களை எளிய முறையில் விளக்கும் ஆற்றலும் ஸ்தூல நிலைமையைப் பகுத்தாராயும் திறனும் நிரம்பப் பெற்றவர். இவற்றுடன் கூட மதிநுட்பமும் அசாதாரணமான தொலை நோக்குப் பார்வையும் சேர்ந்திருந்தன.

இப்போது லெனின் உரைமேடை யின் ஓரத்தைப் பிடித்துக் கொண்டு நின் றார். சிமிட்டிக் கொண்ட அவரது சிறு கண்கள் பிரதிநிதிகளது கூட்டத்தின் மீது ஒரு தரம் வட்டமிட்டு விட்டு வந் தன. கையொலி முழக்கம் நிற்பதற்காக அவர் காத்திருந்தார். ஓயாமல் சில நிமி டங்களுக்கு நீடித்த இந்த முழக்கம் அவ ரைப் பாதித்ததாய்த் தெரியவில்லை. அது நின்றதும் மிகவும் எளிய முறை யில் அவர் சுருக்கமாய்க் கூறினார்: ''இப்போது நாம் சோசலிச அமைப் பைக் கட்டியெழுப்ப ஆரம்பிக்கலாம்!'' திரும்பவும் கட்டுக்கடங்காத ஆர்வ முழக்கம்.

''சமாதானத்தைக் கைகூடச் செய்வ தற்கு நடைமுறை நடவடிக்கைகளை மேற்கொள்வதுதான் நம் முன்னுள்ள முதலாவது பணி... போரிடும் எல்லா நாடுகளின் மக்களுக்கும் நாம் சோவி யத்து வரையறைகளின் அடிப்படை யில் - பிரதேசம் பிடித்தல் இல்லை, இழப்பீடுகள் இல்லை, தேசங்களது சுய நிர்ணய உரிமை ஆகியவற்றின் அடிப் படையில் - சமாதானத்தை முன்மொழி வோம். அதேபோது ஏற்கெனவே நாம் வாக்களித்தது போல், இரகசிய உடன் படிக்கைகளை வெளியிட்டு, பழையன வற்றை நிராகரிப்போம்... யுத்தத்தை யும் சமாதானத்தையும் பற்றிய பிரச் சினை தெட்டத் தெளிவானது. ஆகவே, போரிடும் எல்லா நாடுகளின் மக்களுக் கும் பிரகடனம் என்பதான இந்தத் திட் டத்தை இங்கு நான் முன்னுரை எதுவும் இல்லாமலே படித்துக் காட்டலாமென நினைக்கிறேன்...''

**''போரிடும் எல்லா நாடுகளின் மக்களுக்கும் அரசாங்கங்களுக்கும் பிரகடனம்:** நவம்பர் 6,7-ஆம் நாள் புரட்சியால் தோற்றுவிக்கப்பட்டு, தொழிலாளர்கள், படையாட்களை, விவசாயிகள் பிரதிநிதிகளது சோவியத் துகளை அடிப்படையாய்க் கொண்டு அமைந்த தொழிலாளர்கள், விவசாயி களது அரசாங்கம் நேர்மையான, ஜனநாயகத் தன்மையதான சமாதானத் திற்காக உடனே பேச்சவார்த்தைகள் தொடங்கும்படி, போரிடும் எல்லா நாடுகளின் மக்களுக்கும் அவர்களது அரசாங்கங்களுக்கும் முன்மொழி கிறது....''

இடியென அதிர்ந்த கையொலி முழக்கம் பிரகடனத்தை வரவேற்றது. லெனின் தொடர்ந்து விளக்கிப் பேசினார்.

மணி சரியாய் 10.35 ஆயிற்று, பிர கடனத்துக்கு ஆதரவாய் இருப்போர் எல்லோரும் அவர்களது பிரதிநிதிச் சீட் டுகளை உயர்த்திக் காட்ட வேண்டு மென்று கூறினார் காமெனெவ். பிரகட னம் ஒருமனதாய் ஏற்கப்பட்டது.

சொல்லி வைத்தாற் போல் எல்லோ ரும் ஒரு திடீர் உணர்ச்சியால் உந்தப் பட்டு எழுந்து நின்று, ஒரே குரலாய் ஒருங்கிணையும் வண்ணம் சர்வதேசி யக் கீதம் பாட முற்பட்டோம். தலை நரைத்த முதுபெரும் படையாள் ஒரு வர் சிறு குழந்தை போல் விம்மியழு தார். அலெக்சாந்திரா கொலன்தாய்* சட்டெனக் கண்ணீர்த் துளியைத் துடைத்து அகற்றிக் கொண்டார். அந்த ஆழ்ந்த பண்ணொலி மண்டபத்தில் பெருக்கெடுத்து, சன்னல்களையும், கத வுகளையும் அதிரச் செய்து, வெளியே நிசப்த வானத்துள் உயர்ந்து எழுந்தது. ''யுத்தம் முடிவுற்றது! யுத்தம் முடிவுற் றது!'' - என் அருகே நின்ற இளந்தொழி லாளி ஒருவர் முகம் பளிச்சிட்டு ஒளிரக் கூறினார்.

கீதம் முடிவுற்ற நிசப்தத்தால் சங்க டப்படுவோராய் நாங்கள் நின்று கொண்டிருந்த அக்கணத்தில் மண்டபத் தின் பின் வரிசையிலிருந்து பலத்த குர லில் கூறினார் ஒருவர்: ''தோழர்களே! சுதந்திரத்துக்காக உயிர் நீத்தோரை நினைவு கூர்வோம்!'' உடனே எல்லோ ருமாய்ச் சேர்ந்து சவ அடக்கப் பண்ணை இசைக்க ஆரம்பித்தோம். அடிமேல் அடி வைத்துச் செல்லும் துய ரார்ந்த பண். ஆயினும் வெற்றியை முழங்குவது, முழுக்க முழுக்க ரசியப் பண்ணாய் அமைந்தது. நெஞ்சை நெக் குருகச் செய்வது. சவ அடக்கப் பண் இருளில் வதைந்த ரசியப் பெருந்திரளி னரது இதயத்தின் பண்ணாய் ஒலிப்பது இந்தப் பெருந்திரளினரின் பிரதிநிதி கள்தான் இம்மண்டபத்தில் அமர்ந்து, தெளிவின்றி மங்கலாய்த் தமக்குத் தெரிந்தவற்றைக் கொண்டு ஒரு புதிய ரசியாவை உருவாக்கிக் கொண்டிருந் தார்கள்.

வெஞ்சமரில் உயிர் நீத்தீர்
வீரத் தியாகிகளாய், மக்கள்தம்
விடுதலைக்காக,
மக்கள்தம் மானம் காக்க...

இன்னுயிர் ஈந்தீர், உயிரனையவை
யாவும் ஈந்தீர்;
கொடுஞ் சிறையில் வதைபட்டீர்,
கொடுமைக்கோர் அளவில்லை,
கடுங்காவல் கைதிகளாய்ச்
சங்கிலிகளில் தொலைவிடங்கள்
சென்றீர்...

சங்கிலி சுமந்து உடல் வருந்தினீர்,
உள்ளம் வருந்தவில்லை,
பட்டினியில் வதைந்த உம்
சோதரரையே
உள்ளத்தில் நினைத்திருந்தீர்;
ஒடுக்குவோரின் வாள் வீழ்ந்துபடும்,
நீதி வெல்லுமென அஞ்சாது நின்றீர்....

நீவீர் ஈந்த இன்னுயிரின் வெற்றிநாள்
இதோ வருகிறது;
கொடுங்கோன்மை தகர்ந்துவிழும்,
தளையறுந்து
பேருருவினராய் எழுவர் மக்கள்!

சென்று வருக சோதரர்காள்!
அழியாப் புகழ்கொண்ட
பாதை உமது பாதை!
புதுப்படை வருகிறது
உமைத் தொடர்ந்து,
சாவுக்கு அஞ்சாத படை...
சென்றுவருக சோதரர்காள்!
அழியாப் புகழ் கொண்ட
பாதை உமது பாதை!
சூளுரைக்கிறோம் உமது சமாதியில்,
விடுதலைக்காக,
மக்கள்தம் இன்ப வாழ்வுக்காக,
போராட, பாடுபட சபதம் ஏற்கிறோம்...

இதற்காகத்தான் அங்கே துஞ்சுகி றார்கள், மார்ச் மாதத்தியாகிகள் - குளி ரில் அமைந்த அவர்தம் சோதரத்துவச் சமாதியிலே. இதற்காகத்தான் ஆயிரமா யிரமாய் மடிந்தார்கள் - சிறைக்கூடங்க ளில், தொலைவிடங்களில், சைபீரியச் சுரங்கங்களில்... இது வந்த விதம் இவர் கள் எதிர்பார்த்தது போன்றதாயில்லை, அறிவுத்துறையினர் விரும்பியது போன்றதாகவும் இல்லை. ஆனால் வந்து சேர்ந்தது இது - கரடுமுரடானது, பெரும் பலம் படைத்தது, சூத்திரங்க ளுக்கு அடங்காதது, உணர்ச்சிப் பசப்பு களை மதியாதது; **மெய்யானது...**

●●

* அலெக்சாந்திரா கொலன்தாய் (1872 - 1952): 1915-லிருந்து போல்ஷ்விக் கட்சியின் உறுப்பினர், நவம்பர் புரட் சிக்குப் பிறகு பொதுநலத்துறை மக்கள் கமிசார்.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3, செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர்: எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாவது மாடி, 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.
புதிய கலாச்சாரத்தில் வெளியாகும் படைப்புக்கள் அனைத்தும் சமுதாயத்தில் காணப்படும் உண்மைகளே!

PUTHIYA KALACHARAM
(Tamil Monthly)

REGISTERED WITH THE REGISTRAR OF
NEWSPAPERS FOR INDIA UNDER No: 42647/87

Regd. No: TN/PMG (CCR)/239/03-05

# நெஞ்சைச் சுடும் பிணங்கள்

செடி தூங்கும் விடிகாலை
பனித்துளி விறைத்தது பிணங்களைத் தீண்டி.

எல்லாமே அடையாளம் தெரியும் பிணங்கள்...

மழையில் குதிகால் வெளிறிக் கிடக்கு
விழியில் உறக்கம் எரிந்து கிடக்கு
முடிவாய் வந்த வார்த்தைகளோ,
காற்றின் அலறலில் உறைந்து கிடக்கு.

சீலை முடிப்பில் கொஞ்சம் சில்லறை இருக்கு
காலின் செருப்பு
உடல் தப்பித்துக் கிடக்கு.
அவள் தோலின் மேல் நசுங்கி
இரத்தம் கட்டிக் கிடக்கு.

முண்டியடித்த கூட்டத்தில்
அவள் மூச்சுப்பை திணறி வாய் மூடிக்கிடக்கு
கொண்டு வந்த கோணிப்பை
கொலைக்களத்தின் சாட்சியமாய் வாய் பிளந்து
கிடக்கு.

நிலைதடுமாறி உயிரை விட்டாலும்
நிவாரண டோக்கனை விடாமல் பிடித்திருக்கும்
அந்தக் கைகளில் உழைப்பின் காய்ப்பிருக்கு.

மழைக்குத் தப்பிய உயிரை
அலைக்கழித்து மிதித்துக் கொன்றது யார்?

வேலைக்குப் போக வேனில் ஏறி
சேலத்துக்குப்போன யாரோ சிலபேர்
விபத்தில் சிக்கி மரணம் என்று ஊர் சொல்லுது.

தேசிய நெடுஞ்சாலையில் பிய்ந்து கிடக்கும்
ஐந்து பேரின் உடலைப் பார்த்தால்
தெளிவாய்த் தெரியுது அடையாளங்கள்.

குடலும் சதையும் என்று
குழம்பிப் போய் உற்றுப் பார்த்தால்
சும்மாட்டுத் துணியில்
இரத்தம் அடங்க மறுக்குது.

நசுங்கிக் கிடக்கும் சோற்று வாளிக்குள்
ஈக்கள் சில நடுங்கித் தவிக்குது.

பழைய சோற்றுப் பருக்கைச் சிதறலை
பச்சைஇரத்தம் குடிப்பது கண்டு
மிரண்டு ஓடுது நாய்கள்.

கவனிப்பாரற்று பேசத் துடிக்கும்
இதயத்தின் நிணத்தில்
நசுங்கிக் கிடக்கும் பீடிக்கட்டு
மனிதர்கள்தான் என்ற அடையாளத்தை
பார்ப்பவர்களுக்குச் சொல்கிறது.

பாழாய் போன வயத்துக்காக
எங்கிருந்தோ வந்து
இப்படிக் கூழாய்ப் போகும்படி செய்த
கொலைகாரன் யார்?

அடையாளம் தெரியாத பிணங்கள்
அரசு மருத்துவமனையில் இருப்பதாய்
அடிக்கடி அறிவிப்புகள் வருகின்றன.

நரம்பு விடைத்த அந்தக் கைகள்
தன்னை ஒரு தறி நெசவாளி என்று
அடையாளம் காட்டுகிறது.

கைத்தோல் கிழிந்த அந்தக் கைகள்
தன்னை ஒரு கரும்பு விவசாயி என்று
அடையாளம் காட்டுகிறது.

இவ்வளவு பெரிய நகரத்தில்
இருப்பவர்களை நம்பிவந்து ஏமாந்து
கடைசியில்
உறவு சொல்லி அழுவதற்கும் ஒரு ஆளின்றி
ஒதுங்கிக் கிடக்கும் பிணங்களைப் பார்த்து
இனி ஒன்றுமில்லை என்று சென்றுவிட முடியுமா?
கருத்தின்றி இருப்பவர் கண்களை அருவெறுத்து
செத்தவர்களின் விழிகளில் குறிப்புணர்த்தும்
ஈக்களை விலக்கிப் பார்த்தால்
அங்கே கொலைப் பழி ஒன்று மிச்சமிருக்குது.

செத்தவர்கள்
விட்டுச் சென்றிருக்கிறார்கள்.
கொன்றவர்களின் அடையாளங்களை
பதிலேதும் இல்லாமல்
ஒரு தூசியைப் போல
துடைத்து விடமுடியுமா
உன் கண்ணில் விழுந்த பிணங்களை.

- துரை. சண்முகம்




படிப்பகம்